பக்கங்கள்: முப்பத்திரண்டு

# உதயன்

விலை ரூபா 20.00

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 28 திங்கட்கிழமை (11.04.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 136



02
மலிங்கவின் வேகத்தில் மடிந்தது டெல்லி



16
ஊடக அறிவு அவசியமான ஒன்று



18
விவசாய அபிவிருத்திக்கு மானிய உதவி கிட்டுமா?



25
தி.மு.க ஆட்சிக்கு வந்தால் தமிழகமே கூறுபோய்விடும்

# மன்னார் தென் எல்லைப் பகுதியில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள்

## அம்பலப்படுத்துகின்றார் அடைக்கலநாதன் எம்.பி.

மன்னார், ஏப்ரல் 11

மன்னார் மாவட்டத்தின் தெற்குப் பக்க எல்லைப் பகுதியில் அரசாங்கத்தின் அனுசரணையுடன் பெரும்பான்மை இன மக்கள் மிக வேகமாகக் குடியேற்றப்பட்டு வருகின்றனர்.

ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் தமிழ், முஸ்லிம் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களால் கூடத் தட்டிக் கேட்க முடியாத நிலையில் -

மர முந்திரிச் செய்கைக்குப் பெயர்பெற்ற கொண்டாச்சிப் பகுதி உட்பட வளம் நிறைந்த பிரதேசங்கள் படைத் தரப்பினரின் உதவி ஒத்தாசையுடன் அபகரிக்கப்படுகின்றன.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் இதனை சுட்டிக்காட்டியுள்ளார்.

(29ஆம் பக்கம் பார்க்க)

## கச்சதீவு ஒப்பந்தத்தை ரத்துச் செய்க சென்னை உயர் நீதிமன்றில் மனு

கொழும்பு, ஏப்.11

இலங்கை - இந்தியாவுக்கு இடையிலான கச்சதீவு ஒப்பந்தத்தை ரத்துச் செய்ய உத்தரவு விடும்படி கோரி சென்னை மேல் நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கச்சதீவு ஒப்பந்தம் 1974ஆம் ஆண்டு பிரதமர்களாக இருந்த சிறிமா பண்டாரநாயக்க - இந்திரா காந்தி ஆகியோருக்கு இடையே கைச்சாத்திடப்பட்டமை தெரிந்ததே.

இலங்கைக் கடற்படையினரால் நூற்றுக்கணக்கான இந்திய மீனவர்கள் கொல்லப்பட்டமைக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் நஷ்டஈடு பெறுவதற்காக வழக்குத் தொடர வேண்டும் எனவும் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியக் கடற்பரப்பில் பல மீனவர்கள் கொல்லப்பட்டபோதும், இந்திய அரசும், தமிழக அரசும் எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

(29ஆம் பக்கம் பார்க்க)

## இறக்காமம் பிரதேச சபை முதலாவது அமர்வு இன்று

அம்பாறை, ஏப். 11

அம்பாறை மாவட்டத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட இறக்காமம் பிரதேச சபையின் முதலாவது அமர்வு இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

புதிய தவிசாளர் எம்.ஐ.நைசார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த முதலாவது அமர்வின்போது அம்பாறைப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம்.ஜே.எம். இர்ஷாட் கலந்துகொள்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஏழு உறுப்பினர்களைக் கொண்ட இறக்காமம் பிரதேச சபையை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கைப்பற்றியுள்ளது.

தவிசாளர், உதவித் தவிசாளர் உட்பட ஐந்து

(29ஆம் பக்கம் பார்க்க)

# தனியார் கட்டடங்களில் இருந்து குடாநாட்டு படையினர் விலகுவர்

## அவர்கள் அரச காணிகளில் முகாமிடுவர் என்கிறார் தளபதி

யாழ்ப்பாணம், ஏப்.11

குடாநாட்டில் பணியாற்றும் படையினர் தற்போது தங்கியுள்ள தனியாரின் கட்டடங்களில் இருந்து விரைவில் வெளியேறுவர். அவர்கள் அரச காணிகளில் முகாம் அமைத்துத் தங்குவர்.

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய இந்தத் தகவலை வெளியிட்டார்.

யாழ்ப்பாணத்தில் பணிபுரியும் படையினருக்குப் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிக்கும் நேக்குடன் இராணுவத் தளபதி நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார்.

நேற்றுப் பலாலி வந்தடைந்த

(29ஆம் பக்கம் பார்க்க)



பலாலி மற்றும் சாவகச்சேரிக்கு நேற்றுத் திடீர் விஜயம் செய்த இராணுவத் தளபதி படையினர் மத்தியில் உரையாற்றுகிறார்.

# பொன்சேகா மீதான விசாரணையை கண்காணிக்க சர்வதேசக் குழு

## பனாமா மாநாட்டில் ஐ.தே.க. கோரிக்கை விடுக்கும்

கொழும்பு, ஏப்.11

ச்ரத் பொன்சேகாவுக்கு எதிரான நீதிமன்ற விசாரணைகள் அனைத்தையும் கண்காணிக்க சர்வதேச குழு ஒன்றை நியமிக்குமாறு சர்வதேச .நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்திடம்

(29ஆம் பக்கம் பார்க்க)

# உலக வங்கியின் ஆலோசனைப் படியே பொருள்களின் விலைகள் உயர்வு

## ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப்.11

உலக வங்கி மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்கள் ஆகியவற்றின் விருப்பத்துக்கு ஏற்றவாறு செயற்பட்டே இலங்கை அரசு அத்தியாவசிய பொருள்களின் விலைகளை அதிகரித்துள்ளது என்று ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் பொதுச் செயலாளருமான திஸ்ஸ அத்தநாயக்க நேற்றுக் கூறினார்.

தமிழ் - சிங்கள புதுவருடத்தின் பின்னர் பால்மா வகைகளின் விலைகளை அதிகரிக்க பால்மா கம்பனிகள் திட்டமிட்டுள்ளன. என்றும் அவர் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளரின் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

(29ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு, கிழக்கு இணைந்த மாகாணத்தில் உரிமையுடன் வாழும் அதிகாரமே தேவை

## தனிநாடு கோரவில்லை என்கிறார் சுரேஷ் எம்.பி.

கொழும்பு, ஏப். 11

''தமிழீழ விடுதலைப் புலிகள் கோரியதைப் போலவோ அல்லது 1976இல் தந்தை செல்வா கோரியதைப் போலவோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனி நாடு கோரப்போவதில்லை. வடக்கு, கிழக்கு இணைந்த மாகாணத்தில் தமிழ் மக்கள் சகல உரிமைகளுடனும் வாழும் அதிகாரங்களையே அது கோரி நிற்கின்றது.''

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் கூறியவை வருமாறு:-

அரசதரப்புடனான பேச்சுகளின்போது நாம் 46 கோரிக்கைகளை முன்வைத்துள்ளோம்.

சில சிங்கள ஊடகங்கள் பேச்சுகளைக் குழப்பும் வகையில் செயற்படுகின்றன. நாம் முன்வைத்துள்ள கோரிக்கைகளை தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட தனி நாட்டுக் கோரிக்கைகள் என விமர்சித்து குழப்ப முயல்கின்றன.

உண்மையில் இது சில சிங்கள ஊடகங்களின் மகா கற்பனைக் கண்டுபிடிப்பு என்றே கூற வேண்டும்.

நாம் அன்று தந்தை செல்வா கோரியவற்றையோ அல்லது விடுதலைப் புலிகள் கேட்டவற்றையோ கேட்கவில்லை. ஒரே நாட்டுக்குள் தமிழ் மக்களுக்குத் தேவையான அதிகாரங்களைத்தான் நாம் கேட்கிறோம். அவற்றையே பேச்சுகளின் போது முன்வைத்துள்ளோம். தமிழ் மக்களுக்கான தேவைகள் 46 அல்ல, நூறு இருந்தாலும் நாம் அவற்றைக் கேட்போம் என்றார் சுரேஷ்.

(ஒ-சி)

# படையினருக்குப் புதுவருட விடுமுறை முல்லை. மீள்குடியேற்றம் ஒத்திவைப்பு

முல்லைத்தீவு, ஏப்.11

இராணுவத்தினர் புதுவருட விடுமுறையில் வீடு சென்றுள்ளமைதால் முல்லைத்தீவு குமுழமுனை மத்திய பிரதேசத்தின் மீள் குடியேற்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் பத்திநாதன் நேற்றுத் தெரிவித்தார்.

இன்றைய தினம் முல்லைத்தீவு குமுழமுனை மத்திய பிரதேசத்தில் சுமார் 105 குடும்பங்களைச் சேர்ந்த 290 பேர் மீள் குடியேற்றப்படவிருந்தனர். எதிர் வரும் 20ஆம் திகதிக்கு இந்த மீள் குடியேற்றம் ஒத்திவைக்கப்பட்டது.

இது குறித்து முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

கடமையில் இருந்த இராணுவத்தினர் புதுவருடக் கொண்டாட்டங்களுக்காக விடுமுறையில் வீடு சென்றுள்ளனர். மக்களை

(29ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
11 ஏப்ரல் 2011 திங்கட்கிழமை

# மலிங்கவின் வேகத்தில் மடிந்தது டெல்லி



ஐ.பி.எல் தொடரின் நான்காவது லீக் ஆட்டம் டெல்லியில் நேற்று இடம்பெற்றது. லசித் மலிங்கவின் வேகப் பந்து வீச்சு மும்பை இந்தியன்ஸ் அணிக்குக் கைகொடுக்க, எட்டு விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் டெல்லி டெயாவெல்ஸ் அணியை வீழ்த்தியது. இதன் மூலம் சேவாக் தலைமையில் ஐ.பி.எல்லின் நான்காவது சீசனில் களமிறங்கிய டெல்லி அணி தனது முதலாவது ஆட்டத்திலேயே தோல்வியடைந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டெல்லி டெயாவெல்ஸ் அணித் தலைவர் சேவாக் துடுப்பாட்டத்தை முதலில் தேர்வு செய்தார்.

இதன்படி, களமிறங்கிய சேவாக் - வார்னர் ஆகியோர் அதிரடிகள் காட்டுவர் என்று ரசிகர்கள் காத்திருந்தனர். சேவாக் சொந்த மைதானத்தில் ஆடுவதால் அதிகம் சாதிப்பார் என்று ரசிகர்கள் பெருமளவில் நம்பியிருந்தனர். முதலாவது ஓவர் தற்போது சுழற் பந்து வீச்சாளர்கள் வீசுவது வழக்கமாகி விட்டது. நேற்றைய ஆட்டத்திலும் முதலாவது ஓவரை மும்பை இந்தியன்ஸ் சார்பில் ஹர்பஜன் வீசினார். இரண்டாவது ஓவரில் சனியன் பிடித்தது டெல்லிக்கு. மலிங்கவின் 'ஜோக்கர்' பந்தில் வோர்னர் 'போல்டாகி வெளியேறினார். தொடர்ந்து வந்த சான்ட்டும் இரண்டு பந்துகளை மட்டும் சந்தித்து ஓட்டம் எதுவும் பெறாமல் மலிங்கவினால் வெளியேற்றப்பட்டார்.

சேவாக் தன்னால் முடிந்தவரை மறுமுனையில் அதிரடி காட்டினார். ஒரு சிக்ஸர், இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக 19 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் சச்சினால் ரன் அவுட் செய்யப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

தொடர்ந்து வந்த வீரர்கள் எவரும் நிலைத்து நின்று ஆடவில்லை. மலிங்கவின் பந்து வீச்சில் 'போல்டாகி' வெளியேறினர் டெல்லி வீரர்கள். பதிலுக்கு ஹர்பஜனும் தனது சுழலில் விக்கெட்டுக்களைச் சாய்த்தார். எந்தவொரு வீரரும் சோபிக்காத நிலையில் 95 ஓட்டங்களுடன் டெல்லி டெயாவெல்ஸ் அணியின் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

அந்த அணி சார்பில் அதிகபட்சமாக நமன் ஓஜா 29 ஓட்டங்களையும், வேணுகோபால் ராய் 26 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். மும்பை அணி சார்பில் மலிங்க ஐந்து விக்கெட்டுக்களையும், ஹர்பஜன் இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு இலகுவான இலக்கை விரட்டிய மும்பை அணி ஆரம்பத்தில் சற்றுத் தடுமாறியது. ஓர் ஓட்டத்தைப் பெற்ற நிலையில் தனது முதலாவது விக்கெட்டைப் பறிகொடுத்தது. மறுமுனையில் சச்சினின் ஆட்டம் மும்பை அணிக்கு ஆறுதல் அளித்தது. ராயுடு சிறப்பாக ஆடிய போதும் துரதிர்ஷ்டவசமாக வன்டமேவினால் ரன் அவுட் செய்யப்பட்டார். ராயுடு ஓங்கி அடித்த பந்தை லாவகமாய் வன்ட மேவ் தடுத்து நிறுத்தி விக்கெட்டை நோக்கி எறிந்து அபாரமாக ரன் அவுட்டாக்கினார்.

பின்னர் களத்துக்கு வந்த ரோகித் சர்மாவும் - சச்சினும் மும்பை அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றனர். 16.5 பந்து வீச்சில் இரண்டு விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து மும்பை இந்தியன்ஸ் அணி வெற்றிவாகை சூடியது.

சச்சின் 46 ஓட்டங்களையும், ரோகித் சர்மா 27 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் டெல்லி சார்பில் மோர்னி மோர்கல் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

லசித் மலிங்க ஆட்டநாயகனாகத் தேர்வு செய்யப் பட்டார். (15)

## ஐ.பி.எல் நான்காவது ஆட்டம்

ஆட்டம்: டெல்லி டெயாடெவில்ஸ் எதிர் மும்பை இந்தியன்ஸ் — நாணயச் சுழற்சி: டெல்லி டெயாடெவில்ஸ்
முடிவு: 8 விக்கெட்டுகளால் மும்பை இந்தியன்ஸ் வெற்றி — ஆட்டநாயகன்: மலிங்க

### டெல்லி டெயாடெவில்ஸ்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| வோர்னர் | b மலிங்க | 01 | 03 | 00 | 1 |
| சேவாக் | run out (சச்சின்) | 19 | 16 | 02 | 0 |
| சான்ட் | b மலிங்க | 00 | 02 | 00 | 0 |
| வின்ச் | c ராயுடு b ஹர்பஜன்சிங் | 08 | 12 | 01 | 0 |
| நமன் ஓஜா | c மலிங்க b முர்ராஷ்ஷா | 29 | 30 | 02 | 1 |
| வேணுகோபால் ராவ் | b மலிங்க | 26 | 25 | 03 | 0 |
| இப்ரான் பதான் | run out (சத்திஸ்/ஜேக்கப்) | 00 | 01 | 00 | 0 |
| வன்டமேவ் | ஆட்டமிழப்பில்லை | 08 | 06 | 01 | 0 |
| மோர்னி மோர்கல் | b மலிங்க | 00 | 02 | 00 | 0 |
| யாதவ் | st ஜேக்கப்ஸ் b ஹர்பஜன்சிங் | 00 | 04 | 00 | 0 |
| அசோக் டின்டா | c பிராங்லின் b மலிங்க | 00 | 05 | 00 | 0 |
| உதிரிகள் | (w 4) | 04 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ஹர்பஜன் சிங் | 03 | 14 | 2 | 0 |
| மலிங்க | 3.4 | 13 | 5 | 1 |
| முர்ராஷ்ஷா | 04 | 21 | 1 | 0 |
| முனாப் பட்டேல் | 03 | 20 | 0 | 0 |
| பொலாட் | 03 | 18 | 0 | 0 |
| பிராங்லின் | 01 | 09 | 0 | 0 |

TOTAL - 95/10 (17.4)
1-1 (வோர்னர்), 2-1 (சான்ட்), 3-27 (சேவாக்), 4-40 (வின்ச்), 5-82 (ஓஜா), 6-82 (பதான்), 7-88 (வேணுகோபால்), 8-88 (மோரக்கல்), 9-90 (யாதவ்), 10-95(டின்டா)

### மும்பை இந்தியன்ஸ்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| ஜேக்கப்ஸ் | b மோர்கல் | 01 | 06 | 0 | 0 |
| டெண்டுல்கார் | ஆட்டமிழப்பில்லை | 46 | 50 | 3 | 1 |
| ராயுடு | run out (வன்டமேவ்) | 14 | 15 | 2 | 0 |
| ரோகித் சர்மா | ஆட்டமிழப்பில்லை | 27 | 30 | 3 | 0 |
| பொலாட் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| பிராங்லின் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| சதிஸ் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| ஹர்பஜன்சிங் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| முர்ராஷ்ஷா | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| முனாப் பட்டேல் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| மலிங்க | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (w 7, b 1, ib 3) | 11 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| டின்டா | 02 | 07 | 0 | 0 |
| மோர்க்கல் | 04 | 29 | 1 | 0 |
| இப்ரான் பதான் | 2.5 | 14 | 0 | 0 |
| யாதவ் | 02 | 16 | 0 | 0 |
| வன்டமேவ் | 04 | 13 | 0 | 0 |
| வின்ச் | 02 | 13 | 0 | 0 |

TOTAL - 99/2(16.5)
1-01 (ஜேக்கப்), 2-31 (ராயுடு),

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர் st - ஸ்ரொம்

## ஐ.பி.எல் ஐந்தாவது ஆட்டம்

ஆட்டம்: புனே வாரியர்ஸ் எதிர் கிங்ஸ் லெவன் பஞ்சாப் — நாணயச் சுழற்சி: கிங்ஸ் லெவன் பஞ்சாப்
முடிவு: 7 விக்கெட்டுகளால் புனே வாரியர்ஸ் வெற்றி — ஆட்டநாயகன்: வோக்

### கிங்ஸ் லெவன் பஞ்சாப்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| கில்கிறிஸ்ட் | c உத்தப்பா b தோமஸ் | 01 | 03 | 00 | 0 |
| மார்ஷ் | c ராகுல் சர்மா b வோஜ் | 01 | 03 | 00 | 0 |
| வலத்தாட்டி | c ரைடர் b தோமஸ் | 06 | 06 | 01 | 0 |
| டினேஸ் கார்த்திக் | c ராகுல் சர்மா b வோஜ் | 00 | 07 | 00 | 0 |
| நாயர் | c யுவராஜ் b ரைடர் | 12 | 18 | 02 | 0 |
| சுனி சிங் | run out (யுவராஜ்/உத்தப்பா) | 12 | 06 | 03 | 0 |
| மக்லரன் | ஆட்டமிழப்பில்லை | 51 | 43 | 06 | 1 |
| பியூஸ் சாவ்லா | c உத்தப்பா b வோஜ் | 15 | 28 | 00 | 0 |
| குமார் | c உத்தப்பா b பார்னெல் | 03 | 05 | 00 | 0 |
| ரிமிங்ரொான் | ஆட்டமிழப்பில்லை | 01 | 01 | 00 | 0 |
| பகாட் | துடுப்பெடுத்தாடவில்லை | | | 00 | 0 |
| உதிரிகள் | (w 5, lb4, nb 1) | 10 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| தோமஸ் | 04 | 27 | 2 | 0 |
| வோஜ் | 03 | 16 | 3 | 0 |
| பானெல் | 04 | 20 | 1 | 0 |
| முரளிக் கார்த்திக் | 01 | 10 | 0 | 0 |
| ரைடர் | 03 | 09 | 1 | 1 |
| மன்ஹாஸ் | 03 | 14 | 0 | 0 |
| ராகுல் சர்மா | 02 | 12 | 0 | 0 |

TOTAL - 112/8 (20)
1-2 கில்கிறிஸ்ட்), 2-5 (மார்ஷ்), 3-9 (வலத்தாட்டி), 4-9 (கார்த்திக்), 5-36 (சுனி சிங்), 6-45 (நாயர்), 7-80 (பியூஸ்சாவ்லா), 8-102 (குமார்)

### புனே வாரியர்ஸ்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| ஸ்மித் | c மக்லரன் b பிரவீன்குமார் | 00 | 01 | 0 | 0 |
| ரைடர் | c கில்கிறிஸ்ட் b மக்லரன் | 31 | 17 | 6 | 0 |
| மன்ஹாஸ் | c கில்கிறிஸ்ட் b நாயர் | 35 | 32 | 5 | 1 |
| உத்தப்பா | ஆட்டமிழப்பில்லை | 22 | 14 | 1 | 2 |
| யுவராஜ் | ஆட்டமிழப்பில்லை | 21 | 15 | 2 | 1 |
| மிஷ்ரா | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| ராகுல் சர்மா | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| கார்த்திக் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| வோஜ் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| பார்னெல் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| தோமஸ் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (w 3, lb 1) | 04 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| பிரவீன் குமார் | 03 | 28 | 1 | 0 |
| ரிமிங்ரொான் | 03 | 19 | 0 | 0 |
| மக்ரைன் | 03 | 26 | 1 | 0 |
| சாவ்லா | 01 | 12 | 0 | 0 |
| நாயர் | 3.1 | 27 | 1 | 0 |

TOTAL - 113/3(13.1)
1-0 (ஸ்மித்), 2-60 (மன்ஹாஸ்), 3-68 (ரைடர்)

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர் st - ஸ்ரொம்

# புனே வாரியர்ஸ்; வெற்றியுடன் ஆரம்பம்

அதிரடி ஆட்டங்கள் அடங்கி பந்து வீச்சில் கலக்குகின்றது இந்த ஐ.பி.எல் தொடர். பந்து வீச்சில் கலக்கிய புனே நேற்று வெற்றியுடன் தொடங்கியது பயணத்தை.

ஆட்டம் நடந்தது மும்பையில். வென்றார் கில்கிறிஸ்ட் நாணயச் சுழற்சியில். எடுத்த முடிவு துடுப்பாட்டம். கில்கிறிஸ்ட் - மார்ஷ் வந்தனர் களத்துக்கு.

ஆரம்பமே அதிர்ச்சி கொடுத்தது புனே. அதிரடி மன்னன் கில்கிறிஸ்ட் வெளியேற்றம். தோமஸ், வோஜ் பந்து வீச்சில் கலக்கல். பஞ்சாப்பின் விக்கெட்டுக்களை பஞ்சாய் பிடுங்கி எடுத்தனர். ஒற்றை ஓட்டங்களுடன் ஒருவர் பின் ஒருவராய் திரும்பினர் பவிலியனுக்கு.

மார்ஷ், வலத்தாட்டி, கார்த்திக் அடுத்தடுத்து வெளியேற்றம். பலவீனமாகியது பஞ்சாப்பின் துடுப்பாட்டம். ஆட முடியாதவாறு சுற்றி வளைத்து தாக்குதல் தொடுத்தது புனே. நான்கு ஓவர்களில் நான்கு விக்கெட்டுக்களை பறிகொடுத்து பெற்றுக் கொண்டது 9 ஓட்டங்கள். நாயர் - சுனி சிங் ஆடினர் சிறப்பாய். இவர்களுக்கு ஓட்டங்களை அள்ளி வழங்கியது புனே. சிறப்பான ஆட்டம் தவறான கணிப்பால் ரன் அவுட்டில் பிரிந்தது.

மக்லரன் மட்டும் தனித்து நின்றாட்டம். இடையில் உதவி செய்தார் சாவ்லா. புனேயின் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்கத் திண்டாடியது பஞ்சாப். சீராய் விக்கெட்டுக்கள் வீழ்ந்தது. தனித்தே நின்று போராடிய மக்லரன் பூர்த்தி செய்தார் அரைச்சதம்.

இறுதியில் இருபது ஓவரில் 112 ஓட்டங்களைப் பெற்றது பஞ்சாப். மக்லரன் மட்டும் ஆட்டமிழக்காது 51 ஓட்டங்கள். பந்து வீச்சில் வோஜ் கைப்பற்றியது மூன்று விக்கெட்டுக்கள்.

இலகுவான இலக்கு. ஐ.பி.எல்லில் முதல் வெற்றி பதிக்க காத்திருந்தது புனே. துடுப்பெடுத்தாட களத்துக்கு வந்தார் ஸ்மித். ஆட்டத்தின் முதலாவது ஓவரில் முதலாவது பந்தில் வெளியேற்றம். பதிலுக்குப் பதில் கொடுத்தது பஞ்சாப். ஆரம்பமே அதிர்ச்சி.

ரைடர் - மன்ஹாஸ் இழப்பை ஈடு செய்து அதிரடியாட்டம் ஆடினர். பஞ்சாப்பின் பந்து வீச்சை வெளுத்து வாங்கியது இந்த ஜோடி. தொடர்ந்து அதிரடி ஆட்டம் ஆட முனைப்பு. மன்ஹாஸ் விக்கெட் நாயரால் பறிப்பு. ரைடர் விளாசினார் இரண்டு பவுண்டரிகள் தொடர்ச்சியாய். அடுத்த பந்திலேயே பவிலியனுக்குத் திருப்பியனுப்பினார் மக்லரன்.




உத்தப்பா - யுவராஜ் ஆட்டத்தை வெற்றியுடன் முடித்து வைத்தனர். பஞ்சாப் இவர்களின் பிடிகளை தவறவிட்டது. இதனால் நெருக்குதல் இல்லாது வெற்றி வந்து சேர்ந்தது புனேக்கு. இறுதியில் ஏட்டிக்குப் போட்டியாய் பவுண்டரிகளும், சிக்ஸர்களும் வெளுத்து வாங்கினர் யுவராஜ், உத்தப்பா இருவரும்.

13 ஆவது ஓவரில் ஏழு விக்கெட்டுக்கள் கைவசம் இருக்கையில் புனேக்கு முதலாவது வெற்றி கிடைத்தது.

சிறப்பாய் பந்து வீசி பஞ்சாப்பின் முன்னணியை குழப்பிய வோஜ் ஆட்டநாயகன். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார் எனது அன்பு அம்மா - சச்சின்



மனைவி, பிள்ளைகளுடன்..

நான் கிரிக்கெட் வீரனாக இருப்பதால் எனது மகனையும் அதே துறையில் வர வேண்டுமென கட்டாயப்படுத்த மாட்டேன் என்று சச்சின் டெண்டுல்கார் கூறியுள்ளார்.

மும்பையில் கடந்த வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறியதாவது:

1983 ஆம் ஆண்டு இந்திய அணி உலகக் கிண்ணத்தை வென்றது எனக்கு பெரிய சந்தோஷத்தையும், இந்திய அணி மீதும் கிரிக்கெட் மீதும், அளவிட முடியாத ஈர்ப்பையும் ஏற்படுத்தியது.

இப்போது 2011 இல் இந்திய அணி உலகக் கிண்ணத்தை வென்றது எனது மகனுக்கு அதே போன்றதொரு ஈர்ப்பை ஏற்படுத்தியிருக்கலாம். அதற்காக அவனும் கிரிக்கெட் வீரனாக வேண்டுமென வற்புறுத்த மாட்டேன். அவனுக்கு எந்தத் துறையில் ஆர்வமோ அதில் அவனது எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள அனுமதிப்பேன் என்றார்.

தொடர்ந்து உலகக் கிண்ண வெற்றிக்குப்பின் தனது வீட்டுக்குச் சென்ற போது நிகழ்ந்த நெகிழ்ச்சியான விடயங்களையும் சச்சின் பகிர்ந்து கொண்டார். உலகக் கிண்ண வெற்றிக்குப்பின் முதல்முறையாக வீட்டுக்குச் சென்ற போது எனது தாயார் மிகவும் உணர்ச்சி வசப்பட்டு என்னை வரவேற்றார். அவரது கண்களில் ஆனந்தக் கண்ணீர் வந்ததை நான் கண்டேன். உலகக் கிண்ண வெற்றிக்குப்பின் ஹோட்டலுக்குத் திரும்பிய போது ரசிகர்கள் எங்களை வரவேற்றதை எப்போதும் மறக்க முடியாது. இதற்கு முன்னர் இதுபோன்ற உணர்ச்சி பெருக்கான, மகிழ்ச்சிகரமான வரவேற்பை நான் பெற்றதில்லை என்றார். (15),

# கிரிக்கெட்டின் கடவுள் சச்சின்

## கபில்தேவ் பெருமிதம்



வயது கூடிக் கொண்டே சென்றாலும், கடந்த இரு ஆண்டுகளாக சச்சின் சிறப்பாக ஆடி வருவதை நம்பமுடியவில்லை என முன்னாள் அணித்தலைவர் கபில்தேவ் தெரிவித்தார். லண்டனில் இந்திய பத்திரிகையாளர்களிடம் அவர் இது குறித்து வியாழக்கிழமை கூறியதாவது:

வயது கூடிக்கொண்டே சென்றாலும்கூட, சச்சின் சம்பியனைப் போன்றே விளையாடி வருகின்றார். உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய அணியினருக்கு எனது பாராட்டுகள். இந்திய அணி உலகின் எந்த அணியையையும் வெல்லக் கூடிய திறமைபடைத்த அணி.

இருப்பினும் அவர்கள் முழுத்திறமையை வெளிப்படுத்தி விளையாடுவதில்லை. மற்ற அணிகளை விட இந்திய அணி சிறந்த அணி என்பதில் சந்தேகமில்லை- என்றார்.

இந்திய அணியின் வெற்றிக்கான ரகசியம் குறித்து பேசிய கபில்தேவ், கொமன்வெல்த், ஆசிய விளையாட்டு, உலகக் கிண்ணம் என்று பார்க்கும்போது நிச்சயம் ஒவ்வொரு விளையாட்டிலும் இந்தியா வளர்ச்சியடைந்துள்ளது. இப்போது இந்திய அணி உலகின் முதல்தர அணியாக உள்ளது. வீரர்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்தும் போது நிச்சயம் சிறப்பாக விளையாடுவார்கள்-என்றார்.

உலகக் கிண்ண இறுதி ஆட்டம் குறித்துப் பேசிய கபில்தேவ், பலம் வாய்ந்த துடுப்பாட்ட வரிசையைக் கொண்டிருந்தது. டோனி தேவையான நேரத்தில் சிறப்பாக ஆடினார். வீரேந்திர சேவாக் மிக அபாயகரமான வீரர். அவர் ஆட்டத்தின் போக்கையே மாற்றக்கூடியவர். ஆட்டத்தை எளிதாக எதிர்கொள்ளக்கூடியவர் என்றார்.

இந்திய அணியின் பந்துவீச்சு குறித்து கவலை தெரிவித்த கபில், 1983 இல் கிண்ணத்தை வென்ற அணியைவிட இப்போதைய அணியே சிறந்த அணி. அப்போதைய வீரர்கள் நிறைய ஆட்டங்களில் விளையாடிய அனுபவம் இல்லாதவர்கள். இப்போதைய வீரர்கள் மிகுந்த அனுபவமுள்ளவர்கள். அதனால் இப்போதைய அணி சிறந்த அணி என்றார்.

ஐ.பி.எல் குறித்துப் பேசிய கபில், ஐ.பி.எல் போட்டியால் எல்லா வீரர்களும் பயனடைந்துள்ளனர். அதில் சாதகத்தைப் போன்று பாதகமும் உள்ளது. தொடர்ந்து விளையாடுவதால் வீரர்களுக்கு ஓய்வு கிடைப்பதில்லை. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் ரஞ்சி வீரர்களுக்கும், இளம் வீரர்களுக்கும் பணம் வழங்க வேண்டும்.

விளையாட்டை வளர்க்க வேண்டுமென்றால் பாடசாலை மட்டத்திலேயே அதற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டும். வீரர்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பட்சத்தில் 10 சச்சின்களையோ, டோனிகளையோ உருவாக்க முடியும். எங்கள் காலத்தில் கிரிக்கெட்டில் கவாஸ்கர்தான் கடவுள் போன்றவர். இப்போது சச்சின் கடவுள் போன்றவர். இனிமேல் அவரைப் போன்று ஒரு வீரர் கிடைக்கா விட்டால் அது வருத்தத்துக்குரியது என்றார்.

கிரிக்கெட் வீரர்களுக்கு மட்டும் வரி விலக்கு அளிக்கப்படுவது குறித்து பேசிய போது, சட்டம் என்பது அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் ஒன்றுதான். ஆகவே எல்லா விளையாட்டு வீரர்களுக்கும் வரி விலக்கு அளிக்க வேண்டும்-என்றார். (15)

# பதவிகளைத் துறக்க வேண்டாம்






சுதந்திர சதுக்கத்தில் நேற்று முன்தினம் மாலை ஒன்று திரண்ட தீவிர கிரிக்கெட் ரசிகர்கள் சிலர், இலங்கைக் கிரிக்கெட் அணியின் தலைவர் குமார் சங்கக்கார மற்றும் உபதலைவர் மஹேல ஜெயவர்தன ஆகியோரை அந்தப் பதவிகளிலிருந்து ராஜினாமா செய்ய வேண்டாமென வலியுறுத்தியுள்ளனர்.

சங்கக்காரவின் ஆதரவாளர்களால் 'பேஸ்புக்' இணையத்தளம் மூலம் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் கலந்துகொள்வதற்கு 6512 பேர் விருப்பம் தெரிவித்திருந்தனர். எனினும் 17 பேர் மாத்திரமே கலந்துகொண்டதாக ஏ.எவ்.பி. செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

நிகழ்வு நடைபெறும் இடம் குறித்த தவறான புரிந்துணர்வு காரணமாக சிலர் வேறு பூங்காக்களுக்கு சென்றிருக்கக்கூடும் என்று ஏற்பாட்டாளர் ஒருவர் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். (15)

# என் முடிவு ஒன்றே - அப்ரிடி



டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு என்ற முடிவில் மாற்றமில்லை என பாகிஸ்தான் வீரர் அப்ரிடி தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் அணியின் ஒருநாள் மற்றும் ரி-20 அணியின் தலைவராக இருப்பவர் அப்ரிடி. இவர் சர்வதேச டெஸ்ட் போட்டிகளில் இருந்து கடந்த ஆண்டு ஓய்வு பெற்றார்.

இதனிடையே டெஸ்ட் அணிக்கும் தலைமைப் பொறுப்பை அப்ரிடி ஏற்க வேண்டும் என முன்னாள் வீரர்கள் பலர் கருத்துத் தெரிவித்தனர்.

இதுகுறித்து அப்ரிடி கூறியதாவது:-

டெஸ்ட் போட்டிக்கு நான் பொறுத்தமற்றவன் என்பது எனது கருத்து. இதனால் தான் இதிலிருந்து விலகினேன். மீண்டும் இந்தவகைப் போட்டிக்கு திரும்பும் எண்ணமில்லை.

உலகக் கிண்ணத் தொடரில் எனது துடுப்பாட்டம் மிகவும் மோசமாக இருந்தது. இதிலிருந்து மீள்வதற்கு கடினமாக பயிற்சிகள் மேற்கொண்டு வருகின்றேன். நெருக்கடியான நிலையிலும், எங்களது அணி உலகக் கிண்ணத் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

தொடர்ந்தும் எதிர்வரும் தொடர்களில் இதே அளவிலான திறமையை வெளிப்படுத்துவோம் என்ற நம்பிக்கை உள்ளது - இவ்வாறு அப்ரிடி தெரிவித்தார். (15)

# சென்னையில் ஐ.பி.எல். ரிக்கெட் திரண்டனர் ரசிகர்கள்

ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் மொத்தம் 9 ஆட்டங்கள் நடத்தப்படுகின்றன.

7 லீக் ஆட்டமும், இறுதி ஆட்டத்துக்கான தகுதி ஆட்டமும், இறுதி ஆட்டமும் இங்கு நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதில் ஆரம்ப ஆட்டம் கடந்த 8 ஆம் திகதி சென்னையில் நடந்தது. இதில் சென்னை சூப்ப கிங்ஸ் 2 ஓட்டங்களில் கொல்கத்தாவைத் தோற்கடித்தது.

சென்னை சூப்ப கிங்ஸ் அணி சேப்பாக்கத்தில் மோதும் எஞ்சிய 6 லீக் ஆட்டத்துக்கான ரிக்கெட் விற்பனை நேற்றுத் தொடங்கியது. எதிர்வரும் 16ஆம் திகதி பெங்களூர் அணியுடன் மோதும் ஆட்டம் (மாலை 4 மணி), 25 ஆம் திகதி புனேயுடன் மோதும் ஆட்டம் (இரவு 8 மணி), மே 1 ஆம் திகதி டெக்கானுடன் விளையாடும் ஆட்டம் (இரவு 8மணி), மே 4 ஆம் திகதி ராஜஸ்தானுடன் மோதும் ஆட்டம் (மாலை 4மணி), மே 12 ஆம் திகதி டெல்லியுடன் ஆடும் ஆட்டம் (இரவு 8 மணி), மே 18 ஆம் திகதி கொச்சியுடன் மோதும் ஆட்டம் (இரவு 8 மணி) ஆகிய 6 ஆட்டங்களுக்கான ரிக்கெட் விற்பனையே நேற்றுத் தொடங்கியது.

ஐ.பி.எல். போட்டிக்கான ரிக்கெட்டுகளை வாங்க சேப்பாக்கம் மைதானத்தில் ரசிகர்கள் திரண்டனர். நீண்ட வரிசையில் நின்று ரிக்கெட்டுக்களை வாங்கினர். காலை 9.30 மணி முதல் மாலை 5 மணி வரை ரிக்கெட்டுகள் வழங்கப்பட்டன.

இதற்கான குறைந்த ரிக்கெட் விலை ரூ.500 ஆகும். அதிகபட்ச விலை ரூ.20 ஆயிரம். இதேபோல ரூ.1,000, ரூ.1,500, ரூ.2,000, ரூ.3,500, ரூ.4,000, ரூ.5,000, ரூ,10,000 விலையிலும் ரிக்கெட்டுகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

# அழைக்காதது குறித்துக் கவலை


மும்பையில் நடைபெற்ற உலகக் கிண்ண இறுதி ஆட்டத்தைக் காண 1983 இல் கிண்ணத்தை வென்று கொடுத்த வீரர்களான தங்களை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பி.சி.சி.ஐ) அழைக்கவில்லை என்று மதன்லால் குற்றம்சாட்டியுள்ளார்.

பொலிவுட் நடிகர்கள், நடிகைகள் கூட அங்கு அழைக்கப்பட்டிருந்தனர். ஆனால் கிண்ணத்தை வென்று கொடுத்த முன்னாள் வீரர்களை கிரிக்கெட் வாரியம் கண்டு கொள்ளவில்லை என்றும் அவர் கூறியுள்ளார். இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் பதவியை தனக்கு வழங்குவதாக இருந்தால் அதை பரிசீலிப்பேன் என்றும் கூறியுள்ளார். போபாலில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் பங்கேற்ற மதன்லால், கிண்ணத்தை வென்ற இந்திய அணிக்கு தனது வாழ்த்துகளைத் தெரிவித்ததோடு, அவர்கள் கிண்ணத்தை வென்றதற்கு தகுதியானவர்கள் என்றும் பாராட்டினார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
11 ஏப்ரல் 2011 திங்கட்கிழமை







திருகோணமாலையில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற கூட்டமைப்பு உறுப்பினர்களின் உள்ளூ ராட்சிச் சபைகளுக்கான பதவியேற்பு வைபவத்தின் போது...

# ஆசிரியரைத் தாக்கிய மாணவர்கள் அனுராதபுரத்தில் மடக்கிப்பிடிப்பு

## அவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

கொழும்பு, ஏப் 11

அனுராதபுரம் பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் ஆசிரியர் ஒருவரை தாக்கிய மாணவர்கள் இருவரை ஆசிரியர்களும், மாணவர்களும் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

தமிழ் - சிங்கள புத்தாண்டுக்காக பாடசாலை விடுமுறை வழங்கப்பட்ட பின்னர் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறிப்பிட்ட இரண்டு மாணவர்களும் மற்றொரு மாணவருடன் அனுமதியின்றி பாடசாலை வளாகத்திற்குள் நுழைய முயற்சித்துள்ளனர். இதன் போது குறிப்பிட்ட இரண்டு மாணவர்களையும் ஆசிரியர் விசாரித்துள்ளார். இதனால் சினமடைந்த மாணவர்கள் மேற்படி ஆசிரியரை கண்டபடி தாக்கினர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவ இடத்திலிருந்த ஆசிரியர்களும், மாணவர்களும் இணைந்து ஆசிரியரைத் தாக்கிய இரண்டு மாணவர்களையும் மடக்கிப் பிடித்துள்ளனர். அதன் பின்னர் குறித்த இடத்திற்கு விரைந்த பொலிஸாரிடம் அவர்களை ஒப்படைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-சி)

# இளம் யுவதி மரணம்

சுன்னாகம், ஊரெழு மேற்கு பகுதியைச் சேர்ந்த இளம் யுவதி ஒருவர் ஆபத்தான நிலையில் எடுத்து வரப்பட்ட நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்.

அதே இடத்தைச் சேர்ந்த பாஸ்கரன் மயூரி (வயது-19) என்ற இந்த யுவதி நஞ்சருந்தியதாகக் கூறப்படுகிறது.

இவர் யாழ். போதனா வைத்திய சாலையில் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவின் பதிவு பெற்ற வைத்தியசாலை விடுதி பராமரிப்பாளர் எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். போதானா வைத்தியசாலையில் சட்ட வைத்தியசாலை அதிகாரி எஸ்.சிவரூபன் உடல் கூற்றுப் பரிசோதனை நடத்தினார். மேலதிக விசாரனையை மேற்கொண்ட யாழ்ப்பாணம் பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ஓ-14)

## மரண அறிவித்தல்கள்

### பாஸ்கரன் மயூரி

(பரிசகர், யாழ்.போதனா வைத்தியசாலை)



ஊரெழு மேற்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாஸ்கரன் மயூரி நேற்றுமுன்தினம் (09.04.2011) சனிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2011) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, மு.ப. 11 மணியளவில் பூதவுடல் ஊரெழு, பொக்கணை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊரெழு மேற்கு,
சுன்னாகம். (2550)

தகவல்:
குடும்பத்தினர்

### கந்தையா கெங்காதரன்

(GREEN LAND HOTEL முன்னாள் உரிமையாளர், சங்குவேலி வெட்டுக்கட்டை பிள்ளையார் கோயில் பொருளாளரும்)

உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கெங்காதரன் நேற்று(10.04.2011) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் சுந்தரலிங்கம், இரட்ணசிங்கம், லில்லிமலர், பரமசிவம், மீனலோஜினி, யோகேஸ்வரி, நகுலேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் குமரகுருபரன், கருணபாலசுந்தரம், கருணாகரன், கனகம்மா, மலர், உதயகுமாரி, மதியழகி ஆகியோரின் அன்பு மைத்துனரும், அரவிந்தன், சேந்தன், மோகனரூபன், நிதர்சன், டிவிகா, சஞ்சய், நிறைஞ்சை ஆகியோரின் மாமனும் சுகந்தன், சுகந்தினி, முகுந்தன், நந்தன், ரவினீ ஆகியோரின் சித்தப்பாவும், தட்சாயினி, பிரணவி, சுஜமுகன், பிரவீணா, பானுஜன், நவீனா ஆகியோரின் பெரியப்பாவும், சாஜவி, நிஷாலி, ஓவியா, பிறித்தி, அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுவில் மேற்கு,
சுன்னாகம்.

தகவல்:
க.சுந்தரலிங்கம் (சகோதரன்)

## தவறிவிட்டது

குப்பிளான் வடக்கு, ஏழாலை ராசு சுரேந்தர் என்னும் பெயர் முகவரியுடைய(891413319v) என்னும் இலக்கமுடைய தே.அ. அட்டை சங்குப்பிட்டி பாலத்துக்கும் உரும்பிராய்க்குமிடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் TP இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒப்படைத்துதவவும்.

0778933357,0777910953

உடல் நோ கட்டுப்படுத்தும் அதிசிறந்த மருந்துகள்
பாரம்பரிய முறையில் தயாரிக்கப்பட்டவை
இமுப்பு, முட்டு, சளி, தலைவலி, மருந்துகள் பயன் அளிக்காதவர்கள் முக்கியமாகத் தொடர்பு கொள்ளவும்
யோக சித்த மருத்துவமனை
1ஆம் கட்டை சந்தி, பருத்தித்துறை. தொ.பே.: 0779112969

REPAIRING
T.P : 021-222 4459, 0774192275
சகலவிதமான கணனிகளும், இலத்திரனியல் உபகரணங்களும் ஒரே நாளில் உடனுக்குடன் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும். உங்கள் கணனிகளை வீடுகளுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ வந்து, ஒரே நாளில் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.
STR COMPUTER SYSTEM
384, Navalar Road, Nallur, Jaffna.

STR COMPUTER SYSTEM
384, Navalar Road, Nallur, Jaffna.
Tel: 222 4459, 0774192275, Fax :222 4460.
CERTIFICATE IN INTERNET TECHNOLOGY
Chatting, Dawnloding, Web & E-Mail Address Creating, Face Book, Video Call, Net Call என்பன ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.
DURATION 8 CLASSES
Ms Office, DTP, Hardware Technology, போன்ற புதிய பிரிவுகளும் ஆரம்பமாகவுள்ளன ஆண்கள், பெண்கள், பாடசாலை மாணவர்கள் தொழில் புரிபவர்களுக்கென விசேட வகுப்புக்களும் ஆரம்பமாகவுள்ளன.
சான்றிதழ்கள் அனைத்தும் பரீட்சை முடிவுகளின் பின்னர் ...
DURATION ... MONTH ...
கைலச பிள்ளையார் கோவிலுக்கு அருகில்

## அறிவித்தல்

யாழ்.நகரில் ஸ்ரைல் பார்க்குக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த GZ 8716 எனும் இலக்கமுடைய HERO HONDA DOWN மோட்டார் சைக்கிளை GX 3601 எனும் இலக்கமுடைய HERO HONDA DOWN மோட்டார் சைக்கிள் உரிமையாளரினால் தவறுதலாக எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. எடுத்துச் சென்றவர் நாளை ஸ்ரைல் பார்க்குக்கு வந்து தனது மோட்டார் சைக்கிளைப் பெற்று எனது மோட்டார் சைக்கிளை ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

ப.திருநாதன்
GZ 8716 HERO HONDA DOWN
மோட்டார் சைக்கிள் உரிமையாளர்.
(2553)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
25 . 03 . 1953



இறப்பு
23 . 03 . 2010

திதி: 11.04.2011

### சின்னத்தம்பி வேலுப்பிள்ளை

அன்பு பாசமுள்ள எம் அப்பாவே!
இனிதோ வாழ்ந்து இறைவனடி சேர்ந்து
ஆண்டு ஒன்று ஆனதப்பா!
ஆறவில்லை எம் மனதின் சோகம்
கண்ணீர் மல்க உமை நினைத்து
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்

கடந்த 23.03.2010 அன்று இறைவனடி சேர்ந்த எம் குடும்பத் தலைவரின் முதலாம் ஆண்டு நினைவுதினம் இன்று (11.04.2011) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

நண்பகல் 12 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

7ஆம் கட்டை லேன்,
மல்லாகம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ்

# உள்நோக்கத்துடனான இழுத்தடிப்பு

தென்னிலங்கை மக்கள் எப்படி ஆளுங்கட்சிக்கு ஆணை வழங்கி உள்ளனரோ, அதுபோலவே வடக்கு, கிழக்கு மாகாண மக்கள் எமக்கு ஆணை வழங்கி உள்ளனர்--

எமது மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கிய ஆணைக்கு மதிப்பளித்து, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைகளுக்கு உறுதியான தீர்வு ஒன்றைக் காண்பதற்கு அரசு முன்வரவேண்டும்--

ஜனநாயக முறைப்படி தேர்ந்து எடுக்கப்பட்ட ஓர் அரசாங்கம், அதே ஜனநாயக முறைப்படி மக்கள் பலத்தைப் பெற்ற ஒரு சமூகத்துக்கு அநீதி இழைக்கக்கூடாது. எமது மக்களின் சுயநிர்ணய உரிமைகளுக்கும் மதிப்பளிக்க வேண்டும். அதுதான் உண்மையான ஜனநாயகம்--

இவ்வாறு அரசாங்கத்திடம் வலியுறுத்தி இருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

வடக்கு- கிழக்கில் அந்தக் கட்சியின் சார்பில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டியவர்களின் பதவி ஏற்பு நிகழ்வு நேற்று முன்தினம் திருகோணமலையில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றுகையிலேயே தலைவர் சம்பந்தன் மேற்கண்ட மறுத்துரைக்க முடியாத வாதங்களை இடித்துரைத்தார்.

எமது அடிப்படைச் சுயநிர்ணய உரிமைகள் குறித்து விரிவான கருத்துக்களை, நிலைப்பாட்டை மக்கள் முன்வைத்தோம். எமது கொள்கைக்கு ஒட்டு மொத்த தமிழ் மக்களும் ஆதரவளித்து எமக்கு ஆணை வழங்கி உள்ளனர் என்று தெரிவித்துள்ள அவர், தமிழ் மக்கள் வழங்கிய ஆணையை நிறைவேற்ற அரசாங்கம் முன்வரவேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

போர் முடிந்துவிட்டது. ஆயினும் தமிழ் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதில் கூட அரசாங்கம் வெகுமந்த கதியிலேயே செயற்பட்டு வருகிறது. ஒன்றைச் செய்து, ஒன்பதாக ஊதிப் பெருப்பித்துக் காட்டி வருகிறது என்பதே உண்மையான நிலை. இதனையும் கூட்டமைப்பின் தலைவர் தமது உரையில் சுட்டிக்காட்டி உள்ளார்.

அரசாங்கத்துக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தை ஆரம்பமாகிவிட்ட போதிலும், மக்களின் வாழ்வியல் பிரச்சினைகள் தொடர்பாகவே பேசப்பட்டு வருகிறது. அரசியல் விடயங்கள் குறித்து அரசிடம் தமது நிலைப்பாட்டை அறிக்கை வடிவில் சமர்ப்பித்துவிட்டதாகக் கூட்டமைப்பின் தரப்பில் கூறப்பட்டாலும் மக்களுக்கு எந்த விவரமும் தெரியாது. அதனால்தான் போலும் ஒரு சில அம்சங்களை சம்பந்தன் வரிசைப்படுத்தி வெளிப்படுத்தி உள்ளார்.

எங்களுடைய காணிகள் பாதுகாக்கப்பட வேண்டும். எமது உடைமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். கல்வியில் அபிவிருத்தி காண வேண்டும். கலாசாரம் பாதுகாக்கப்பட வேண்டும். சுகாதார வசதிகள் பேணப்பட வேண்டும். விவசாயிகள் தமது காணிகளில் சுதந்திரமாக விவசாயத்தில் ஈடுபட வேண்டும். கடற்றொழிலாளர்கள் சுதந்திரமாகத் தொழிலில் ஈடுபடப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

மேலே கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாகத் தீர்மானிக்கவும் நிர்ணயிக்கவும் கூடிய உரிமைகள் எமக்கு வேண்டும். இவற்றை நடைமுறைப்படுத்த, வெளிநாடுகளின் உதவிகளைப் பெற்று அபிவிருத்தி செய்யும் அதிகாரம் எமக்கு வேண்டும்- எனவும் தலைவர் சம்பந்தன் வெளிப்படுத்தி உள்ளார்.

மத்தியில் உள்ள அரசியல் அதிகாரங்களை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குப் பகிர்ந்தளிக்கும் விடயத்தில் அரசாங்கம் தான் விரும்பும் தீர்வு ஒன்றைத் திணிப்பதிலேயே கருத்தாக உள்ளது. அதனாலேயே அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தில் உள்ள நியாயமான அதிகாரங்க்ளைக் கூட உரித்துப் பார்த்துப் பார்த்து, முழுங்கி வருகிறது. ஆனால், தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் தனக்கு அக்கறை உண்டு என்று காட்டி வருகிறது; வெளிநாடுகளுடன் இனிக்கப் பேசி நம்ப வைக்கிறது.

தமிழ் மக்களின் நீண்ட கால விவகாரமாக இழுபட்டு வரும் இனப் பிரச்சினையை, நியாயமாகத் தீர்த்து வைக்க அது மனவிருப்பத்துடன் செயற்படும் சமிக்ஞை எதனையும் காணோம். ஊடகங் களுக்குப் பேட்டி, மாநாடுகளில் உரை என்ற வகையறாக்களின் மூலம் தமிழ் மக்களுக்கு அவர்கள் கேட்கும் சகலதையும் கொடுக்க முடியாது என்ற குரலில் அரச தரப்புகள் கருத்து வெளியிட்டு வருகின்றன.

உதாரணமாக, மாகாண சபைகளுக்கான காணி அதிகாரத்தையும், பொலிஸ் அதிகாரத்தையும் வழங்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்டுள்ளது. அவை வழங்கப்படமாட்டா என்று அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கூறியுள்ளார்.

இந்தியா என்ன, வேறு எவரினதும் அழுத்தத்துக்கும் எடுபட மாட்டோம். நாம் நினைப்பதே தீர்வாகும் என்ற உட்கருத்தை வைத்துக் கொண்டு, காலம் வாங்கும் தந்திரத்தைக் கைக் கொள்கிறது அரசதரப்பு.

அதனை மனதில் கொண்டே, அற்பசலுகைகளுக்காக தன் மானத்தை அடகு வைக்க முடியாது. சாத்வீக வழியிலான எமது முயற்சிகள் தோல்வி அடையுமானால், நாமும் மாற்று வழியைத் தான் கடைப்பிடிக்க வேண்டும். இதனை எவராலும் தடுக்க முடி யாது- என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் கூறியுள் ளார்.

காலத்தை வாங்கி நீடித்து, தமக்குள்ள அதீத அதிகாரங்களைக் கையிலெடுத்து, தமிழர்களுக்கெனச் சொந்தம் கொண்டாட எதுவும் இல்லை என்று வறிதாக்கும் நிலையை உருவாக்கும் கபட நோக்கமும் அரசின் மனதில் உள்ளுறைந்திருக்கலாம் என்பதனையும் கருத்தில் கொண்டும் -

மொத்தத்தில், தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாக, தீர்ப்போம், தீர்க்கலாம் என்று காலத்தை வாங்கும் உத்தியே தொடரப் போகிறது என்பது புலப்படுவதாலும்-

அற்ப சொற்ப சலுகைகளுக்காக தமிழ் மக்கள் தமது உரிமைகளை அடகு வைக்க முடியாது என்று சம்பந்தன் காட்டமாகக் கூறியுள்ளதாகக் கொள்ளலாம்.

தமிழ் மக்கள், தமக்குரிய அரசியல் உரிமைகளைப் பெறுவதற்குப் பெரும் சோதனைகளையும் வேதனைகளையும், உடனடியாக இல்லாவிடினும், ஒரு கால கட்டத்தில் எதிர்கொள்ள ஆயத்தமாக இருக்க வேண்டும என்பதற்கான கட்டியமாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரது கருத்தை நோக்கலாம்.

# பிளேக் வருகையை புறக்கணித்தமை பெரும் விளைவுகளை ஏற்படுத்தலாம்

**நேற்று 10-04-2011 அன்று 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை எழுதியிருந்த அரசியல் விமர்சனத்திலிருந்து ஒரு பகுதி இது.**

வெளியுறவு அமைச்சர் ஜி.எல். பீரிஸ் லண்டனில் நடத்திய செய்தியாளர் மா நாட்டில் அழைக்கப்பட்டிருந்த பெரும்பாலானவர்களும் பிரயாணங்கள் பற்றி கட்டுரை எழுதுபவர்கள். அமைச்சர் உல்லாசப் பயணம் பற்றியே அங்கு பெரிதாகப்பேசினார். இந்த விடயம் இப்பொழுது பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் கீழ் இருக்கின்றது. இந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தவர்களில் இருவர் பி.பி.சி நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவர் சிங்களப் பிரிவின் சந்தேசிய நிருபர் மற்றவர் தமிழ் சேவையில் தமிழோசை நிருபர். லண்டன் ஹைட் பார்க் கோணரில் உள்ள இலங்கை ஸ்தானிகராலயத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஏனைய நிருபர்கள் யாவரும் புறப்படுவதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்த வேளையில் பி.பி.சி நிருபர்கள் இருவரும் தாங்கள் இரண்டு கேள்விகளை கேட்க விரும்புவதாக தெரிவித்துக் கொண்டார்கள். அக்கேள்விகள் உல்லாசப் பயணத் துறை தொடர்பானவை அல்ல. ஆனால் இலங்கை அரசுக்கு மிக அக்கறையுள்ள வேறு விடயங்கள். அமைச்சர் அவசரப்பட்டுக் கொண்டிருந்த போதிலும் அமர்ந்திருந்து கேட்டார்.

முதல் கேள்வி இலங்கை மீதான போர்க்குற்றங்களை விசாரித்துக்கொண்டிருக்கும் பான் கி மூனின் நிபுணர் குழுவை இலங்கைப் பிரதிநிதிகள் குழு சந்தித்தது உண்மையா என்

## இலங்கையின் நிலையை இந்தியா தொடர்ந்து ஆதரிப்பது சந்தேகம்

பதாகும் ''நாம் ஆள்களை அவ்வப்போது சந்தித்துக் கொண்டு தான் இருக்கிறோம்.'' என்று கூறி கேள்வியைத் தவிர்த்து விட முயன்றார். நிருபர்கள் வலியுறுத்தியதால் மேலும் பல விவரங்களை வெளியிட்டார். அதன் பின் எழுந்து விரைவாக அங்கிருந்து சென்று விட்டார். இதன் மூலம் நிருபர்கள் தமது இரண்டாவது கேள்வியை கேட்பதற்கு அவர் இடம் வைக்கவில்லை. முதல் கேள்வியின் போது அமைச்சர் பீரிஸ் சிறிது சங்கடத்துக்துள்ளானவர் போல் தென்பட்டார். அதற்கு பதில் அளித்தபோது அறிந்தோ அறியாமலோ ராஜ தந்திர குண்டு ஒன்றை அவர் போட்டு விட்டார்.

கேட்கப்படாதகேள்வி என்னவென்றால் கே.பி. என்றழைக்கப்படும் குமரன் பத்மநாதனை அரசு இன்ரர்போலிடம் கையளிக்கப்போகிறதா என்பதாகும். பிரான்ஸை தளமாகக்கொண்டுள்ள இந்த சர்வதேச பொலிஸ் அமைப்பு ஒருகாலத்தில் புலிகளின் ஆயுதக்கொள்வனவுப் பிரிவின் இந்தத் தலைவரை தனது சிவப்புபட்டியல் நபர்களில் ஒருவராக வரிசைப்படுத்திவைத்துள்ளது. இந்தியாவின் கோரிக்கையின் பேரில் இது நடைபெற்றிருந்தது.

பி.பி.சி. சிங்கள சந்தேசிய சேவையில் பின்வரும் தக வல்கள் வெளியாகியுள்ளன.

**பான் கி மூனின் நிபுணர் குழுவை இலங்கை சந்தித்தது.**

இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பாக விசாரிக்கும் பான்கிமூனின் நிபுணர் குழுவை இலங்கைப் பிரதிநிதிகள் சந்தித்தார்கள் என்று இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

நியுயோர்க்கில் இடம்பெற்ற இந்தச் சந்திப்புப்பற்றி இலங்கை அரசோ ஐ.நா.வோ பகிரங்கப் படுத்தவில்லை. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு மேற்கொண்டுள்ள நடவடிக்கைளின் முன்னேற்றம் மற்றும் ஏனைய நல்லிணக்க செயற்பாடுகள் தொடர்பாக இலங்கைப் பிரதிநிதிகள் விளக்கம் அளித்தார்கள் என்று அமைச்சர் பீரிஸ் தெரிவித் தார். நிபுணர்குழுவை சந்திக்க முன்னர் பிரதிநிதிகள் செயலாளர்நாயகத்துடன்சந்திப்பை மேற்கொண்டிருந்தார்கள்.

லண்டனிலுள்ள இலங்கை ஸ்தானிகராலயத்தில் பத்திரிகையாளர் கூட்ட மொன்றில் உரை நிகழ்த்துகையில் அமைச்சர் பீரிஸ் முதலீட்டு வாய்ப்புக்களை முன்னேற்றுவதற்காகவும் தமது நாட்டுக்கெதிராகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களை மறுத்துரைப்பதற் காகவும் தாம் ஐரோப்பாவுக்கு வந்திருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள நிலைமைகளை யதார்த்தமுறையில் பார்க்கவேண்டும். அண்மையில் இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த ஐரோப்பிய நாடாளுமன்றக் குழுவொன்று இலங்கையின் வட பகுதியின் போருக்குப் பிந்திய நிலைமை குறித்து தாம் கொண்டிருந்த மனக்கோலம் தவறானது என்று குறிப்பிட்டிருந்தார்கள் என்பதை அமைச்சர் சுட்டிக் காட்டினார். அவர்களை மேற்கோள்காட்டி அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் மேற்குலகில் இலங்கையைப்பற்றி தீட்டப்பட்டுள்ள இருண்ட காட்சிகள் களநிலைமைகளுடன் ஒத்துப்போகவில்லை என்றார்.

சுமார் மூவாயிரம் தமிழ்ப் புலி சந்தேக நபர்கள் குற்றஞ் சாட்டப்படாமல் இன்னமும் காவலில் இருந்து வருகின்றார்கள் என்று அவர் ஒப்புக்கொண்டார்.

அமெரிக்கா ராஜாங்க உதவி அமைச்சர் றொபேர்ட் பிளேக் அண்மையில் அமெரிக்க செனேட் சபையில் நிகழ்த்திய உரையில் இலங்கைக்கு அச்சுறுத்தல் எதையும் விடுக்கவில்லையென்று பீரிஸ் கூறினார். மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆராய பொறுப்புக்கூறும் பொறி அமைப்பொன்றை நிறுவ அமெரிக்கா அச்சுறுத்த வில்லை என்றார்.

கடந்த மார்ச் மாதம் 14 ஆம் திகதி றொபேர்ட் பிளேக் நியுயோர்க்கில் கருத்து வெளியிடுகையில் தமது அரசு பொறுப்புக் கூறும்படியாக வற்புறுத்தும் என்று குறிப்பிட்டிருந்தார்.

''சர்வதேச தரங்களை நிறைவேற்றக் கூடியதான வெளிப்படைத்தன்மையுள்ள செயற்பாடுகளை இலங்கை அரசாங்கம் நிலைநாட்டும் என்பது எமது பலத்த எதிர்பார்ப்பாகும். எதுவானாலும் அவ்வாறான ஒரு பொது அமைப்பு இல்லாத பட்சத்தில் அப்படியான தொரு சர்வதேச பொறிமுறைக்கான அழுத்தம் அதிகரிப்பதாய் இருக்கும்.'' என்று பிளேக் கூறியிருந்தார்.

அமெரிக்க செனேட் சபையில் உதவி அமைச்சர் பிளேக் நிகழ்த்திய ஒரு குறுகிய உரையில் பின்வருமாறு தெரிவித் திருந்தார்.

26 வருட மோதலில் இருந்து இன்னமும் மீண்டு கொண்டிருக்கும் இலங்கை நாடு தென் இந்தியாவின் தென் கோடியில் அமைந்திருக்கிறது. மத்திய குடாக்கடல் நாடுகளிலிருந்து கிழக்காசியாவுக்கு பெற்றோலிய மற்றும் வணிகப் பொருள்களைக் கொண்டு செல்லும் கப்பல் பாதையில் நேரடியாக அது அமர்ந்திருக்கிறது. அந்த வகையில் அமெரிக்காவுக்கு இலங்கையின் மீது அதி முக்கிய அக்கறையுள்ளது. வன்முறையிலான தீவிரவாதம் கடத்தல்கள், கடற்கொள்ளை போன்றவற்றை முனைப்புடன் தடுத்து நிறுத்தும் செயற்பாட்டில் இலங்கையானது விருப்பமுடன் செயற்படக் கூடிய தகுதியைப் பெற்றிருக்கிறது. அதன் மூலம் அப்பிரதேசத்தின் கடல் பகுதியின் பாது காப்புக்கு அதனால் உதவிட முடியும்.

ஆனால் அந்த அரசாங்கத்தின் மனித உரிமைகள் தொடர்பான கவலை தரும் பதிவுகள் ஜனநாயக நிறுவனங்களின் பலவீனத்தன்மை மற்றும் செயற்பாடு கள் மேலும் தமிழ் புலிகளுடனான போரின் இறுதிக்கட்டத்தை அது நடத்தியிருந்த விதம் ஆகியவை அதனை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளும் எமது நோக் கத்தை தடுத்துக்கொண்டி ருக்கிறது.

அடிப்படை மனித உரிமைகள் ஜனநாயகம், ஆட்சி நிர்வாகப் பிரச்சினைகள் மற் றும் ஓர் உண்மையாக நிலைத்து நிற்கும் தேசிய நல்லிணக்கம் தொடர்பான உறுதியான செயற்பாடுகள் ஆகியவற் றில் முன்னேற்றம் ஏற்படும் வரையில் எமது பாதுகாப்பு ஒத்துழைப்பு பல்வேறு வகையிலும் வரையறுக்கப்பட்ட நிலையிலேயே

**தொகுப்பு: கோகுலன்**

இருக்க முடியும்''

பிளேக் செனேட் சபைக் குழுவின் முன் நிகழ்த்திய உரை மிகவும் முக்கியமானதொன்று. இலங்கையின் கவலைதரும் செயற்பாட்டு பதிவுகள் காரணமாக அதனை முழுமையாக பயன்படுத்திக்கொள்ள முடியாமல் இருக்கிறது என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். அதன் படி தான் அந்த எச்சரிக்கை வருகிறது பொறுப்புக் கூறும் தன்மை தொடர் பாக நம்பகமான அர்த்தமுள்ள நடவடிக் கைகள் எடுக்கத் தவறும் பட்சத்தில், சர்வதேச ஆணைக்குழுவொன்றை நியமிக்கும்படியாக அழுத்தங்கள் உருவாகும் என்று பிளேக் குறிப் பிட்டுள்ளார்.

(28 ஆம் பக்கம் பாரக்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். போதனா வைத்தியசாலையின் புற்றுநோயாளர் பிரிவுக்கு ரூ. 7லட்சம்

## ஹற்றன் நஷனல் வங்கி வழங்கியது

வலி.வடக்கு, ஏப்.11

யாழ். போதனா வைத்தியசாலையின் புற்றுநோயளார் பிரிவுக்கு ஹற்றன் நஷனல் வங்கியின் சங்கானைக் கிளையினர் 7லட்சம் ரூபா நிதியை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அலுவலருமான இராஜேந்திரம் தியாகராஜா நேற்று இந்த நிதியை வழங்கினார்.

யாழ். குடாநாட்டில் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

இந்த நிலையில் இதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முகமாக இந்த நிதி வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

புற்றுநோய் தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் உளவளத்துணை நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் மற்றும் இது தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்ளவுமே இந்த நிதி ஒதுக்கப்பட்டதாக மேலும் கூறப்பட்டது.

இந்த நிதி வழங்கும் நிகழ்வில் யாழ். போர்தனாவைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் சி. பவானந்தராசா, புற்றுநோய் வைத்திய நிபுணர் டாக்டர் சி. ஜெயக்குமார், காச நோய் வைத்திய பொறுப்பதிகாரி டாக்டர் சி.ஜமுனானந்தா உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ம-86-4)

# ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப்.11

அண்மையில் வெளியாகிய ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் பாடசாலை அதிபர்கள் உதயனுக்கு அனுப்பிவைத்துள்ள பெறுபேற்று விவரங்கள் வருமாறு:

**அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம்**

இ. இந்துஜன்- 5ஏ2பிசிஎஸ், த. கோகுலராஜ்- 2ஏபி4சிஎஸ், தே. துஸ்யந்தன்- ஏபி3சி2எஸ், த. அலெக்சாந் - 2ஏபி2சி2எஸ், யோ.நிஷாந்தினி - ஏ பி2சி3எஸ், அ.டாலினி- ஏ2சி3எஸ், ஆ. தீபிஷா- 2பி2சி2எஸ்.

**நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்**

பசுபதி லோசன- 2ஏ2பி4சி, சௌந்தரராஜன் திலக்சன்- 2ஏபி2சி3எஸ், மகேந்திரன் வினோ தினி- 2ஏபி4சிஎஸ், வன்னியசிங்கம் தனுஷா- 2ஏ4சி 3எஸ், ஜெயபாஸ்கரன் பிரசாத்- ஏ2பி 4சிஎஸ், யோகராஜா லிசாந்தி- ஏ2பி3சி2எஸ், அங்கமுத்த மதுரிக்கா- ஏபி5சிஎஸ், இராசநாதன் டுவாராக- ஏபி4சி3ஏஸ், ஜெயகுபேஸ் சுகன்யா- ஏபி2சி4எஸ், பூவேந்திரராஜா சரண்யா- ஏபி4எஸ், குணானந்தராஜா தாட்ஷாயினி- ஏ2சி5எஸ், வரத ராஜா காயத்திரி- 3சி3எஸ்.

**கிளிநொச்சி இராமநாதபுரம் ம.வி**

கனகநாதன் தனுஷன்- 2ஏ3பி2சிஎஸ், பிஷ்வ நாதன் நிசாந்தினி- 2ஏபி5சி, கோவிந்தசாமி சிறீ தாரகன்- 2ஏபி3சிஎஸ், விஜயகுமாரன் அஜிந்தா- ஏ2பி5சி, ரஜிந்திரன் சுஜிதா- ஏ3பி3சிஎஸ், நாகேந் திரன் யாழினி- ஏபி4சி2எஸ், குணசேகரன் சாந் தன்- ஏபி4சிஎஸ், சுப்பிரமணியம் அனோஜன்- ஏபி3சி3எஸ், பாலசுப்பிரமணியம் சிவகௌரி- ஏ5சி2எஸ், அருள் நிரோஷா- ஏ5சி2எஸ், திருவருட் செல்வம் ஜெனீவர் தேவன்- ஏ5சிஎஸ், யோகராசா கிருபாலினி- ஏபி2சி3எஸ், துரைராஜா கிருபை- ஏ2சி5எஸ், செல்வராசா சுதர்சினி- ஏபி3சி3எஸ்.

**பளை றோ.க.த.பாடசாலை**

செல்வராசா பகீரதன்- 7ஏ2பி, திபுர்சியான்ஸ் ஜெரிஸ்லா- 2ஏ2பி2சி2எஸ், சுப்பிரமணியம் தீவ குமார்- 2ஏபி5சி, ஸ்ரானிஸ்லோஸ் கசில்டா- 2ஏ 5சி, பெட்லங்கேஸ்ரர் சந்திரிக்கா- ஏ2பி4சி, கானரத்தின குமாரபோதினி- ஏ2பிசி4எஸ், மோசஸ் அமகுலேற்- ஏபி6சி.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2215 திகதி 09-04-2011

ஆங்கில எழுத்திற்கும் D

வெற்றி எண்கள் 15 49 56 58

போனஸ் இல: 32

ஜக்பொட் பரிசு ரூ. 20,108,625/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 212497 | 20/- | 4,249,940/- |
| 2 இல | 15093 | 100/- | 1,509,300/- |
| 3 இல | 315 | 1,000/- | 315,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8684 | 40/- | 347,360/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 622 | 1,000/- | 622,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 11 | 10,000/- | 110,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 20,108,625/- | - |
| 1 இல + போனஸ் இல | 10101 | 100/- | 1,010,100/- |
| 2 இல + போனஸ் இல | 471 | 500/- | 235,500/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 421 | 200/- | 84,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 23 | 1,500/- | 34,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 10,917,900/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 248254 | | 11,517,900/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| அநுராதபுரம் | 303085275-7-13 |
| கம்பஹா | 303066144-5-26 |
| அம்பாறை | 303069355-0-06 |
| குருநாகல் | 303062406-0-42 |
| களுத்துறை | 303068179-8-47 |
| களுத்துறை | 303068191-6-05 |
| கொழும்பு | 303068145-5-23 |
| திருகோணமலை | 303066997-2-36 |
| பதுளை | 303066674-1-33 |
| கொழும்பு | 303070359-6-42 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 20,688,325/-

ஊதா நிற டிக்கட்டுகள் 2011 ஏப்ரல் 20 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02

தொ.பே: 2335467

# பால் மா வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவக்கூடும்

கொழும்பு, ஏப்.11

மே மாதமளவில் சந்தையில் பால் மா வகைகளுக்குக் கடும் தட்டுப்பாடு நிலவக்கூடுமென பால்மா நிறுவனங்களின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலகச் சந்தையில் பால்மா வகைகளின் விலைகள் பெரிதும் அதிகரித்திருப்பது மற்றும் இலங்கையில் அவற்றின் விலைகளை அதிகரிப்பதற்கு அரசு அனுமதி மறுத்துள்ளமை காரணமாக இறக்குமதியை வரையறுப்பதற்குச் சில நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன.

இதனால் சந்தையில் பால்மா வகைககளுக்கு தட்டுப்பாடு ஏற்படலாம் என பால்மா நிறுவனங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

உலகச் சந்தையில் ஒரு மெற்றிக் தொன் பால்மாவின் விலை 4 ஆயிரத்து 500 அமெரிக்க டொலர்களாக உயர்ந்துள்ளன.

அந்த விலை மட்டங்களில் இறக்குமதி செய்து தற்போதைய கட்டுப்பாட்டு விலை மட்டங்களுக்கு பால்மா வகைகளை விற்பனை செய்ய இயலாது.

விலை அதிகரிப்பு தொடர்பாக நுகர்வோர் அதிகார சபைக்கு விடுக்கப்பட்ட கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டுள்ளது எனவும் கூறப்பட்டது. (ம-22)

இந்தியா வீசா விண்ணப்பம்

(Online Visa Application)

தற்போது உள்ள வீசா நடைமுறையின் படி Online மூலம் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களே ஏற்றுக்கொள்ளப்படுவதால் கால தாமதமின்றி வீசா விண்ணப்பங்களை அனுப்பிக் கொள்ளலாம்.

ARRUL GLOBAL EXPRESS

T.P : 0212226113

நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.

இந்திய வீசா அலுவலகத்திற்கு அருகாமை

# தவக்காலச் சிந்தனை



## சோதனை வென்று சாதனை படைப்போம்

''உங்கள் உடைகளை கிழித்துக்கொள்ள வேண்டாம், உங்கள் இதயங்களைக் கிழித்துக்கொள்ளுங்கள்'' (யோவேல் 2:3) என்ற இறை வார்த்தையை எமக்கு நினைவூட்டி, திருச்சபைத் தாய் தவம் செய்ய எமக்கு அழைப்பு விடுக்கிறாள். இதுவே ஏற்றகாலம். எங்களை நாங்களே மீட்டிப்பார்க்க ஒரு வாய்ப்பான காலம். எங்கள் எல்லோரையும் தனது சிலுவையினால் மீட்ட ஆண்டவர் இயேசுவின் அன்பையும், அவரின் கொடூர பாடுகளையும், சிலுவை மரணத்தையும் எமது துன்பங்களோடு இணைத்துச் சிந்திக்க தகுந்த காலம். இயேசு மரணத்தை வெற்றிகொண்டு பெற்றுத்தந்த விடுதலையை நாமும் எம் வாழ்வில் அனுபவிக்க, நம்பிக்கையோடு எம்மைத் தயார்ப்படுத்த சிறந்ததோர் பொற்காலம்.

மனிதர்களை பாவத்திலிருந்து மீட்டு அவர்களுக்கு உரிமை வாழ்வைப் பெற்றுக்கொடுக்க வந்த இயேசு ஆண்டவர் தனது பகிரங்கப்பணிக்கு முன்னதாக நாற்பது நாள்கள் நோன்பிருந்து செபித்தார். நாங்களும் எங்கள் வாழ்வில் அவ்வாறே வாழவேண்டும் என முன்னுதாரணம் தந்தார். நாம் தவவாழ்வில் ஈடுபடும்போது பல்வேறுபட்ட சோதனைகள் எம்மைத் தாக்கி எமது வாழ்வைக் கூறுபோட முனைவது எமது வாழ்வியல் அனுபவங்கள். நாம் சோதனைகளை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டுமென்பதற்கு இயேசுவின் வாழ்வு எமக்குமுன் தரப்படுகிறது. செப தவ வாழ்வில் நாம் பயணிக்க வேண்டுமெனில் எமது அளவுகடந்த ஆசைகளையும் விருப்பங்களையும் அடக்கியாழ்வது மட்டுமல்லாது, இயற்கைக்கு மாறான இச்சைகளை ஒறுத்து, எமது பலவீனங்களில் பக்குவப்பட்டு, சோதனைகளைக் கண்டு சோர்ந்துவிடாது, தீமையை ஒதுக்கி நன்மையை நோக்கி நாம் பயணிக்க வேண்டும். உண்ணாமையால் உடலை வாட்டலாம், கசையடிகளால் உடலைத் துன்புறுத்தலாம், முட்கள்மேல் படுத்து உடலை வேதனைப்படுத்தலாம். ஆனால் வன்முறை எண்ணங்களையும், மனித நேயமற்ற செயற்பாடுகளையும் தவிர்த்து, மனிதத்தை மதித்து புனிதத்தை நோக்கிப் பயணிப்பதே சிறந்த தவமாகும்.

துன்பங்கள் வந்துகொண்டே இருந்தாலும் அவை அனைத்தையும் முறியடிக்கின்ற சக்தியை, தாங்கிக்கொள்ளுகின்ற வல்லமையை இறைவன் நமக்குத் தருகின்றார் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. மனிதம் மீட்புப்பெறவேண்டும் என்பது கடவுளின் விருப்பம். எனவே, அவருடைய அருள் அவரிடத்தில் நம்பிக்கை கொள்வோர் அனைவருக்கும் வழங்கப்படுகிறது. எனவே தாவீது மன்னனைப்போல நாமும் ''கடவுளே உமது பேரன்புக்கேற்ப எனக்கு இரங்கும்'' (தி.பா 51:1) என மன்றாடுவோம். உணவைக்குறைத்து, இச்சையெல்லாம் அடக்கி, செபத்தில் நிலையாகி, அறச்செயல்கள் புரிந்து, தவக்காலத்தை எமக்கும், எம் நாட்டிற்கும், முழு உலகிற்கும், அமைதியளிக்கும் ஒரு பொற்காலமாக மாற்றுவோம்.

*அருட் சகோதரர் றமேஸ் அ.ம.தி*

# மரண அறிவித்தல்

## திருமதி சின்னத்துரை அன்னம்



முள்ளானை, இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை அன்னம் நேற்று (10.04.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சின்னத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - ராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் செல்வவிநாயகமூர்த்தி (கனடா), நாகேஸ்வரி, காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் ஜெகதீஸ்வரி, பாலசுப்பிரமணியம் (பாய்க்கடை, இணுவில்), விக்கினேஸ்வரன், சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, அன்னலிங்கம் மற்றும் ராஜேஸ்வரி, காலஞ்சென்ற ராசரத்தினம், ராசம்மா, செல்வநாயகி, காலஞ்சென்ற இராஜதேவி ஆகியோரின் அன்பு மாமியும் மதியழகன்(கனடா), காண்டீபன் (கனடா), தர்சினி (ஜேர்மனி), சதீஷன்(கனடா), துவிஷன் (லண் டன்), மைதிலி, வித்தியாயினி, சுபாசினி (இந்தியா), திலீபன், நிதிபன், ரவீந்திரன், ஜெயந்தன்(இந்தியா), கஜேந்திரன், சிவகுமார்(ஜேர்மனி), சிவகௌரி (ஜேர்மனி), ஐங்கரன்(லண்டன்), செல்வகௌரி, சரவணபவன், கிருபா, கோகிலன், சதீஷன், கோபிகா, கேகயன், விஜயகௌரி (ஜேர்மனி), ரமேஷ் (ஜேர்மனி), தர்சன் (கனடா), துவாரகன், துசாந்தன், சைலஜன் (லண்டன்), சஜீவன், சயந்தன், கஜானா, கலைவாணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று(11.04.2011) திங்கட்கிழமை பிற்பகல்.2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முள்ளானை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முள்ளானை,
இளவாலை,
தொ.பே.: 0776169658

தகவல்:
சுந்தரலிங்கம் (மகன்)

(20,25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் சிறப்புற இடம்பெறும் பங்குனித் திங்கள்

ஈழ மணித்திரு நாட்டில் வரலாற்றுச் சிறப்புமிக்க பல சைவ ஆலயங்கள் காணப்படுகின்றன. வடக்கே மாவிட்டபுரம் தொடக்கம் தெற்கே கதிர்காமம் வரை பல ஆலயங்கள் அங்கு குடிகொண்ட இறைவனின் நாமங்களது வரலாற்றை காலம் காலமாகக் கூறி சைவபாரம் பரியங்களுக்குக் கட்டியங் கூறி நிற்கின்றன. அந்த ஆலயங்களின் அருட் கடாட்சத்தையும் நாம் காணுகின்றோம்.

இந்த வகையான வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயங்களுள் யாழ்.மாவட்டத்தில் தென்மராட்சிப் பிரதேசத்தில் மட்டுவில் கிராமத்தில் பன்றித் தலைச்சி கண்ணகை அம்மன் ஆலயமும் ஒன்றாக அமைந்துள்ளது.

இந்த ஆலயம் சாவகச்சேரி புத்தூர் வீதியில் வீதியோரமாக வயலும் வயல் சார்ந்த இடத்தில் அமைந்துள்ளது. மருதமரங்களும் புளியமரங்களும் பூவரச மரங்களும் நீண்டு உயர்ந்து வளர்ந்து பச்சைப் பசேல் என்று காட்சியளிக்க இந்த அம்மன் ஆலயம் அமைந்துள்ளது.

1750 ஆம் ஆண்டுகளுக்கு முன்பு சிறுகுடிலில் அம்மன் அமர்ந்திருந்து அருள்புரிந்து வந்தார். அன்றைய காலங்களில் அந்தப் பகுதியில் விவசாயம் செய்த ஏழை விவசாயி ஒருவன் அம்பாளுக்கு நாளாந்தம் பூசை வழிபாடுகள் செய்து வந்தார்.

அந்த விவசாயிகளின் விவசாயப் பயிர்களை மேய்ந்த பசுமாடொன்றை அந்த விவசாயி தடியொன்றினால் எறிந்து துரத்திய போது அந்தத் தடி பசுமாட்டில் மோதியதால் பசுமாடு இறந்தது- இந்த விவகாரம் அந்த நாள்களில் ந்டைபெற்ற பஞ்சாயத்துச் சபையின் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, அந்த விவசாயி அம்பாளை வேண்டி வழிபட்டான். அப்போது இறந்த பசுமாடு பன்றித்தலை யுடன் பன்றியாகக் காணப்பட் டது. இதனால் விவசாயி பஞ்சாயத்து சபையிடமிருந்து தப்பித்துக் கொண்டான்.

இதனால் அன்று தொடக்கம் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் என இந்த ஆலயம் அழைக்கப்படலாயிற்று.

அன்று தொட்டு அம்மன் ஆலயம் வளர்ச்சிபெற்று அம்பாளின் அருள் செழித்து வருவதைக் காணலாம். சிறிய குடிலில் அமைந்திருந்த அம்பாள் இன்று பெரியளவில் வளர்ச்சியடைந்த ஆலயத்தில் குடிகொண்டு அருள் பொழிகின்றாள்.

### பங்குனித் திங்கள் உற்சவம்

அம்பாள் ஆலயத்தில் பங்குனித் திங்கள் உற்சவம் தனிச் சிறப்புப் பெற்றது. இந்தத் திருநாள்களில் ஆலயச் சூழல் தனிச் சிறப்புப்பெற்றிருக்கும்- தென்மராட்சிப் பிரதேசத்தில் மட்டுவில் பகுதி விழாக்கோலம் பூண்டு விடும். மக்கள் இருப்பிடங்கள், வீதிகள், மூலை முடக்குகள் எல்லாம் துப்புரவு செய்யப்பட்டு அழகுபடுத்தப்பட்டு விடும். மக்கள் அந்த மாதத்தில் புனிதத் தன்மையை பேணுவர்.

மட்டுவில் பிரதேச மக்கள் விவசாயம் மேற்கொள்பவர்கள். இதனால் தமது வயல் நிலங்களில் இருந்து பெறப்பட்ட நெல்லினை அரிசி ஆக்கி புதுப்பானையில் அம்பாளின் இந்தச் சந்நிதியில் பொங்கல் பொங்குவர்.

### மட்டுவில் கத்தரிக்காய்

ஆலய வயல் பகுதிகளாகிய அம்பலந்துறை, சிலுவில் (சிலு

**அருணன் மட்டுவில்**

வில்) முதலியார் வயல் மற்றும் அம்மன் கோயில் பெரு வயல் வெளி உள்ளிட்ட வயல் நிலங்களில் விவசாயிகள் நெல்அறுவடை செய்தவுடன் கத்தரிக்காயைப் பயிரிட்டு விடுவார்கள். அவை பங்குனித் திங்களில் காய்த்துக் குலுங்கத் தொடங்கி விடும். இவ்வாறு பயிரிட்டுப் பெறப்பட்ட கத்தரிக்காயையும் சமைத்து அம்மன் சந்நிதியில் அம்பாளுக்கு நிவேதிப்பர். இதன் சுவை சொல்லில் வடிக்க முடியாதது.

### அம்பாள் சந்நிதியில்

பங்குனித் திங்கள் நாள்களில் குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் தென்பகுதியில் உள்ள குடாநாட்டைச் சேர்ந்தவர்களும் வெளிநாடுகளில் விசிப்பவர்களும் , ஆலயத்துக்குச் சென்று தரிசிப்பார்கள்.

உற்சவ நாள்களில் அதிகாலை தொடக்கம் மாலை வரை பெரும் எண்ணிக்கையான பொது மக்கள்வருகை தருவார்கள். ஆலய மடம் உட்பட ஆலயச் சூழலில் பொங்கலுக்கென ஒதுக்கப்பட்ட இடங்கள் எல்லாம் பொங்கல் பெரும் பொங்கலாக இருக்கும். அத்துடன் அன்னதானம், பாற்கஞ்சி, நீர்க்கஞ்சி, நீர்ச்சோறு எனப்பெரும் அன்னதான நிகழ்வுகள் ஆலயச் சூழலின் பல இடங்களில் நடைபெறும்.



பக்தர்கள் பொங்கல் பொங்கியதை ஆலயவளவில் அம்பாளுக்கு நிவேதித்து அங்கு குழுமியுள்ள பக்தர்களுக்கு வழங்கி அம்மன் அருள் பெறுவர்.

### ஆலய உற்சவ ஒழுங்குகள்

பங்குனித் திங்கள் உற்சவத்தையொட்டி அங்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான கூட்டம் தென்மராட்சிப் பிரதேசப் செயலகத்தில் தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி சாந்தசீலன் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கேற்ப உற்சவ நடவடிக்கைகள் நடைபெறும்.

குடிதண்ணீர், போக்குவரத்து, பாதுகாப்பு, சுகாதாரம் போன்ற விடயங்கள் கருத்தில்கொள்ளப் பட்டன.

சுகாதார மற்றும் குடிதண்ணீர் வசதிகளை சாவகச்சேரிப் பிரதேச சபையும் பாதுகாப்பு நடவடிக்கைகளை சாவகச்சேரி பொலிஸாரும் படையினரும் மற்றும் பாடசாலை சாரணர்களும் மேற்கொள்வர்.

போக்குவரத்துச் சேவையை இலங்கைப் போக்குவரத்துச் சபையினரும் தனியார் போக்குவரத்துச் சேவையினரும் உடனுக்குடன் மேற்கொள்வர்.

எனவே இன்றைய நாளில் அம்பாளின் பாதார விந்தங்களை தொழுது உயரிய சிந்தனைகளை பெற்றுய்வோமாக.

---

**உயர் பாதுகாப்பு வலயம்**

## மீள்குடியமர்வு நடவடிக்கைகளுக்கு கடும் பாதிப்பை ஏற்படுத்துகிறது

**அரசிடம் கூட்டமைப்பு தெரிவிப்பு**

மீளக்குடியமர்வு நடவடிக்கைகளுக்கு உயர் பாதுகாப்பு வலயம் கடும் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் இடம்பெயர்ந்த மக்களின்ஒருபகுதியினர் மாத்திரம் முறையாக மீளக்குடியமர்த்தப் பட்டுள்ளதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றக் கட்டத் தொகுதியில் நடைபெற்ற அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான கலந்துரையாட லின் போது மேற்படி விடயத்தை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், வலி. வடக்கில் 83 ஆயிரம் இடம்பெயர்ந்த மக்களில் 9 ஆயிரம் பேர் மாத்திரமே மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர். அங்குள்ள 45 கிராம சேவகர் பிரிவுகளில் 6 பிரிவுகளில் ஒரு குடும்பம் கூட மீளக் குடியமர்த்தப்படவில்லை.

நான் நாடாளுமன்ற உறுப்பினராக உள்ள நிலையிலும் உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக அங்குள்ள எனது வீட்டுக்குச் செல்ல முடியவில்லை. சம்பூர் மாத்திரம் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு உயர் பாதுகாப்பு வலயமாகும் என மேலும் தெரிவித்தார்.

மேற்படி கலந்துரையாடலின் போது வடக்கில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் பாதுகாப்பு நிலைமை உயர் நீதிமன்றத்தின் தீர்வுக்கு இணங்கியதாக இல்லை. எனவே வடக்கில் உயர்பாதுகாப்பு வலயங்கள் அவசியமில்லையென தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசுக்குத் தெரிவித்தது. (எ)

---

## தேசிய நாடக விழாவுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

யாழ்ப்பாணம்,ஏப்.11

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் இலங்கை கலைக்கழகத்தின் தேசிய நாடகச் சபை ஏற்பாடு செய்துள்ள தேசிய நாடக விழாவுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுகின்றன.

இந்த நாடக விழாவில் மேடையேற்றப்படும் அரச நாடகம் அரங்கொன்றில் இரண்டரை மணித்தியாலங்கள் காட்சிப் படுத்தப்பட்டிருப்பதுடன் உறுதிப் படுத்தப்படும் ஆவணங்களும் சமர்ப்பிக்க வேண்டும்.

அத்துடன் நாடக விழாவில் பங்குபற்றி வெள்ளி பெற்றோருக்கு மேடை ஒளியமைப்பு, ஆடை அலங்காரம், நெறியாக்கம்,மேடை நிர்வாகம், இசையமைப்பு, நடன இயக்கம், துணை நடிகர், நடிகை, சிறந்த நடிகர், நடிகை, சுயநாடக எழுத் தாக்கம், சிறந்த நாடக இயக்குநர், திறமை மதிப்பீட்டுகள் போன்றவற்றுக்கு அரச விருதுகளும் பணப்பரிசில்களும் வழங்கப்படும்.

இது தொடர்பான மேலதிக விவரங்களை பிரதேச செயலர்களில்பார்வையிட்டு ஆவர்வமுடையவர் நாடகத்தின் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து செயலாளர், தேசிய நாடகசபை, கலாசார அலுவல்கள் திணைக்களம், எட்டாவது மாடி, செத்சிரிபாய, பத்தர முல்ல எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-313)

---

## 55 வருடங்களின் பின் சென்.றோக்ஸ் புலமைப் பரிசில் பரீட்சையில் சாதனை

யாழ்ப்பாணம்,ஏப்.11

பாடசாலை வரலாற்றில் 55 வருடங்களின் பின் குருநகர் சென். றோக்ஸ் வித்தியாலய மாணவன் ஜெ.டிலக்ஷன் கடந்த வருடம் இடம்பெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் 164 புள்ளிகளைப் பெற்றுசித்தியடைந்தமையைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது.

கொழும்புத்துறை இராணுவப் படைப்பிரிவின் ஏற்பாட்டில் வித்தியாலய அதிபர் அ.மரியதாஸன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட 51 ஆவது படைப்பிரிவின் அதிகாரி மேஜர் ஜெனரல் ஜெனக பல்லேகம வித்தியாலய மாணவன் ஜெ.டிலக்ஷனைப் பாராட்டி வாழ்த்தியதுடன் கௌரவிப்புப் பரிசினையும் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து மாணவனது கல்விச் செலவுக்காக மாதாந்தம் ஆயிரம் ரூபா வழங்குவதற்கு உடன் படிக்கையும் மேற்கொள்ளப்பட்டது. கிறீன் கிறாஸ் றோட்டில் ஜெகனபாமசி




இரண்டினதும் உரிமையாளர் ரி.ஜெக்சிலன் அந்த கல்வி ஊக்குவிப்புத் தொகையை மாணவனுக்கு வழங்குவதற்கு முன்வந்ததுடன் பாடசாலையின் வகுப்பறைகளில் ஒன்றையும் அதில் உள்ள தளபாடங்களுக்கும் வர்ணம் பூசுவதற்கான செலவுகளை அவர் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்தக் கௌரவிப்பு நிகழ்வின்போது 51 ஆவது படைப் பிரிவின் அதிகாரி அஜித் பல்லவெல, கட்டளை அதிகாரி லெப். கேணல் சந்திரசிறி, மேஜர் காமினிலியன ஆராய்ச்சி உள்ளிட்டவர்கள் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

(எ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மாநகர சபையின் வர்த்தகக் கட்டடத் தொகுதியின்

# ஊழல் தொடர்பில் 'உதயன்' பிரசுரித்த செய்தி தவறு என்றால் மாநகர முதல்வர் அதனை எழுத்து மூலம் மறுக்காதது ஏன்?

### கேள்வி எழுப்புகிறார் எதிர்க்கட்சி உறுப்பினர் விந்தன்

யாழ்ப்பாணம், ஏப். 11

யாழ். மாநகர சபையின் வர்த்தகக் கட்டடத் தொகுதி அமைப்பதில் ஊழல்கள் இடம் பெற்றுள்ளதாக 'உதயன்' வெளியிட்ட செய்தி தவறு என்று கூறும் மாநகர முதல்வர் அதற்கு மறுப்பு அறிக்கை விடாதது ஏன்?

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் யாழ்.மாநகர சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் விந்தன் கனகரத்தினம்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மாநகர சபையின் கூட்டத்திலேயே அவர் இந்தக் கேள்வியை எழுப்பினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

29.11.2011 அன்று நடைபெற்று மாதாந்தப் பொதுக் கூட்டத்தில் முதல்வர் அவர்கள் எழுத்து மூல பிரேரணை ஒன்றை சமர்ப்பித்து உரை நிகழ்த்தினார். அதில் கஸ்தூரியார் வீதி, வண்ணான் குளத்தை அண்டிய சபைக்குச் சொந்தமான காணியில் 5 மாடிகள் கொண்ட நவீன வசதிகளுடன் கூடிய கடைத் தொகுதி ஒன்றை அமைக்க எண்ணியுள்ளதாகவும், இதை செய்வதற்கு சபையிடம் போதிய நிதி மற்றும் ஏனைய வசதிகளும் வளங்களும் இல்லை எனவும், வெளிநாட்டில் புலம்பெயர்ந்தவர்களில் உள்ள ஒரு பிரபல தமிழ் வர்த்தகர் இக்கட்டடத்தை தனது சொந்தப் பணத்தில் கட்டித் தருவார். கட்டிய பின் அதன் உரிமமும் கடைகளை பகிரங்க ஏலத்தில் விட்டு விற்கும் உரிமம், வாடகை பெறும் உரிமம், வாடகைத் தொகையை நிர்ணயிக்கும் உரிமை, எல்லாமே சபையிடம் இருக்கும் எனவும் அறிவித்தார். அத்தோடு கட்டடத்தின் கீழ் பகுதிக் கடைகளுக்கு உரிய இனாமாக வழக்கப்படும் பணத்தை (key money) மட்டும் கடை கட்டித்தருபவருக்குக் கடைகளைக் கட்டியதற்குக் கூலியாகவும் செலவுத் தொகையாகவும் போய்ச் சேரும். மிகுதி அனைத்துத் தொகையும் சபைக்கே வந்து சேரும் - என்றார்.

குறிப்பிட்ட முதல்வரின் உரையின் பின் இதில் எனக்கு பல சந்தேகங்கள் எழுந்தன. அதை நிவர்த்தி செய்யும் பொருட்டு நான் கேட்ட கேள்விகள் பல மாதாந்த கூட்ட அறிக்கையில் இடம்பெறவில்லை. அது திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டதா அல்லது தவறுதலாக விடுபட்டுள்ளதா என்பதுதெரியவில்லை.

முதல்வர் கூறுகின்றார், பத்திரிகை ஒன்று இது விடயமாக தவறான செய்திகளை வெளியிட்டுள்ளதாகவும், மக்களைக் குழப்புவதாகவும் இக்கட்டட ஒப்பந்தம் வழங்கப்பட்டது தொடர்பாக அந்தப் பத்திரிகையில் மூன்று நாள்கள் கட்டுரை தொடராக வந்து குற்றச்சாட்டுக்களை அடுக்கடுக்காக அள்ளி வீசிக் கொண்டிருந்தது - என்றார்.

குறிப்பிட்ட செய்தி தவறு என்றால் நீங்களே அவர்களுடன் தொடர்பு கொண்டு விளக்கமளித்திருக்கலாம். செய்தி தவறு என்றால் மறுப்பு அறிக்கை விட்டு இருக்கலாம். ஏன் கண்டனம் கூட தெரிவித்து இருக்கலாம். மாறாக பத்திரிகைக்காரர்கள் தான் உங்களைப் பலமுறை தொடர்பு கொண்டு இதுவிடயமாக கேள்விகள் கேட்க முற்பட்டு, கடைசியில் பலனற்றுப் போனது என அறிக்கையிலேயே கூறப்பட்டுள்ளது. தவறுகளை எம் பக்கம் வைத்துக் கொண்டு குறிப்பிட்ட பத்திரிகையாளர்களை மட்டும் கூட்டத்தில் இருந்து வெளியேறுமாறு பணிப்பது ஏற்புடையதல்ல. அதற்கு நாம் ஒரு போதும் அனும்திக்கப் போவதில்லை.

இறுதி நேரத்தில் பத்திரிகை என்னை அழைத்துச் சில விவரங்களையும் சந்தேகங்களையும் கேட்டது. இது விடயமாகத் தகவல்களை திரட்ட என்னையும் ஒத்துழைத்துப் பங்களிப்பு வழங்கும்படியும் கோரியது. அதனால் நானும் ஒத்துழைப்பு வழங்கினேன்.

நான் தகவல்கள் திரட்ட இறங்கிய பின் பல விடயங்கள் ஆச்சரியமூட்டும் அளவுக்கும் திடுக்கிட வைக்கும் அளவுக்கும் பாரதூரமாய் இருந்தன.

இந்தக் கட்டடத் தொகுதியை கட்டுவதற்குப் பொறுப்பேற்றுள்ள இங்குள்ள ஒப்பந்தக்காரரும் அவரால் நியமிக்கப்பட்ட இடைத்தரகருமாக இணைந்து ஆரம்ப நிகழ்வாக யாழ்.நகர் வர்த்தகர்களிடம் கட்டடத் தொகுதியின் கீழ் தளத்தில் அமையவுள்ள 14 கடைகளில் ஒன்றுக்கு மட்டும் 1 கோடியே 90 லட்சம் ரூபா எனவும் அதை வாங்க விரும்புபவர்கள் முற்பணமாக 50 லட்சம் செலுத்த வேண்டும் எனவும் கடை கட்டி கையளிக்கும் போது மிகுதி தொகை 1 கோடியே 40 லட்சம் வழங்க வேண்டும் எனவும், முழுதொகையும் செலுத்தி கடைகளைக் கையளிக்கும் போது 1 கோடியே 10 லட்சம் பெற்று கடை வழங்கியதற்கான பற்றுச் சீட்டு மட்டும்தான் வழங்கப் படும் என்றும், மிகுதி 80 லட்சத்துக்கு பற்றுச் சீட்டு வழங்கப்பட மாட்டாது எனவும் கூறி 5 பேரிடம் 2½ கோடி முற்பணமாக ரகசிய ஒப்பந்தம் மூலம் பெற்றுள்ளனர்.

கடைகளுக்குரிய வரைபடமும் ஒப்பந்தக்காரரால் வழங்கப்பட்டுள்ளது. கீழ்த்தள 14 கடைக்களுக்கும் 1 கோடியே 90 லட்சம்ரூபாப்படி மொத்தமாக 26 கோடியே 60 லட்சம் வாங்குகின்றனர். பற்றுச் சீட்டு வழங்கப்படாமல் கடையொன்றுக்கு மேலதிகமாக வாங்கப்படும் தொகை 80 லட்சம் ரூபா ஆக மொத்தம் 14 கடைகளுக்கும் 11 கோடியே 20 லட்சம் ரூபா. இது கறுப்புப் பணமாக வாங்கப்படுகின்றது. மேலுள்ள கடைகளுக்கு இனாமான கொடுப்பனவு (key money) ரூபா கொஞ்சம் வித்தியாசப்படுமாம். அதாவது குறைக்கப்படுமாம். பற்றுச்சீட்டு வழங்காமல் பணத் தொகையும் குறைக்கப் படுமாம். மாடிகள் உயரஉயர எல்லாக் கடைகளின் விலைகளும் வித்தியாசப்படு மாம். மொத்தம் 4 மாடிகள், மொத்தகடை 56 இதெல்லாம் அவர்கள் கூறிய தகவல்கள். இவற்றை என்னால் ஆதார பூர்வமாக நிரூபிக்க முடியும் என இந்தச் சபையில் அடித்துக் கூறுகின்றேன். எனவேதான் உடனடியாக இந்தக் கட்டட ஒப்பந்தத்தை இரத்துச் செய்து காணியை சபை மீளவும் பெறவேண்டும். இல்லையேல் மாநகர சபையின் பெயரால் 100 கோடி ரூபாவுக்கு மேல் துஷ்பிரயோகம் செய்யப்படும் நிலை உருவாகும் என்பதில் சந்தேகமில்லை என்பதை திட்டவட்டமாக அறிவிக்கின்றேன். என்பதோடு மாநகர மக்களின் நலன் கருதியும் மாநகரத்தின் நலன் கருதி ஒப்பந்தகாரர் இதில் இருந்து விலகிச்சென்று தனது நற்பெயரை காத்துக்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றேன்.

குறித்த வரைபடத்தை வைத்து இங்குள்ள தனியார் கட்டட ஒப்பந்தக்காரரிடம் கட்டடம் கட்டுவதற்கான மதிப்பை செய்த போது ஒருவர் ஆகக் குறைந்த தொகையாக ஒரு கடைக்கு 9 லட்சமும், அடுத்தவர் ஆகக் கூடிய தொகையாக கடையொன்றுக்கு 10 லட்சமும் மதித்தார்.

குறித்த பதினான்கு கடைகளையும் கட்டுவதற்கு ஒரு கோடியே 26 லட்சம் அண்ணளவாக முடியும். கீழ்த்தளம் அத்தி பாரத்துடன் வருவதால்தான் இத்தொகையாம். மேலே தொடர்ந்து கட்டுவதற்கு மதிப்புத் தொகை குறையுமாம் - என்றார். (த)

## மர்மப்பொருள் வெடித்து தாயும் மகனும் காயம்

தென்மராட்சி, ஏப்.11

காணியைத் துப்புரவு செய்துகொண்டிருந்த வேளையில் கிடந்த மர்மப் பொருள் ஒன்று வெடித்ததில் தாயும், மகனும் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி, சரசாலை மேற்குப் பகுதியைச் சேர்ந்த சிறிகரன் உதயரமணி (வயது - 28), சிறிகரன் மதுசன் (வயது- 4) ஆகியோரே காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

நேற்றுமுன்தினம் இவர்கள் கிராம்புவில் பகுதியில் உள்ள தமது காணியைத் துப்புரவு செய்து கொண்டிருந்த சமயமே இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

உடனடியாகச் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட இவர்கள் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். (ஒ-207-323)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் வழங்குவதற்கு ஏற்பாடு

ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படாத முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கொடுப்பனவு வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அந்தந்தக் கல்வி வலயங்களைச் சேர்ந்த முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மீளாய்வுப் பணிகளை மேற்கொள்ளுமாறு உத்தர விட்டுள்ளேன் என்று வடமாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் ஆர்.இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடமாகாணத்தில் உள்ள முன்பள்ளிகளைத் தரமுயர்த்தும் திட்டத்தின் பிரகாரம் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது. இதில் குறிப்பிட்ட சில ஆசிரியர்களுடைய பெயர் தவறவிடப்பட்டுள்ளன. இவர்களுடைய விவரங்களை மீளாய்வு செய்து உடனடியாக அனுப்புமாறு முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளேன்.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கும் செயற்றிட்டத்தில் முகாமைத்துவ திட்டத்துக்குள் உள்வாங்கப்படும். ஆசிரியர்களுக்கு மட்டுமே கொடுப்பனவு வழங்கப்படும். இதனை யாரும் மறந்து விடவேண்டாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-9)

# கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் 134 சிறுவர்கள் பாடசாலை செல்லவில்லை

### மாவட்ட செயலகத்தின் கணிப்பீட்டில் தகவல்

யாழ்ப்பாணம், ஏப். 11

யாழ். மாவட்ட செயலகம் மேற்கொண்ட கணிப்பீட்டின் படி இந்த வருடத்தின் முதல் இரண்டு மாதங்களிலும் 134 சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

மாவட்ட செயலகத்தின் கணிப்பீட்டு அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

யாழ்.மாவட்டத்தில் ஒரு லட்சத்து 95 ஆயிரத்து 496 சிறுவர்கள் உள்ளனர். அவர்களில் இந்த வருடம் ஜனவரி, பெப்ரவரி ஆகிய மாதங்களில் 134 சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லவில்லை. பிரதேச செயலகப் பிரிவு ரீதியாகச் சாவகச்சேரிப் பிரதேச செயலர் பிரிவில் 20 ஆயிரத்து 875 சிறுவர்கள் உள்ளனர். அவர்களில் 38 சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லவில்லை. 15 ஆயிரத்து 754 சிறுவர்களைக் கொண்டுள்ள கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 21 சிறுவர்களும் 6 ஆயிரத்து 445 சிறுவர்களைக் கொண்டுள்ள வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் 15 சிறுவர்களும் பாடசாலைக்குச் செல்லவில்லை என்பது தெரியவந்துள்ளது.

17 ஆயிரத்து 328 சிறுவர்களைக் கொண்ட சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலும் 21 ஆயிரத்து 839 சிறுவர்களைக் கொண்ட தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவிலும் தலா 11 சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லவில்லை.

இதேவேளை -

முதல் இரண்டு மாதங்களிலும் 27 குழந்தைத் தொழிலாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். 40 சிறுவர்கள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். 983 சிறுவர்கள் போர் வன்முறை காரணமாகத் தமது பெற்றோர் இருவரையும் இழந்துள்ளதாகவும் அந்தக் கணிப்பீட்டில் தெரிய வந்துள்ளது. (த-14)

## யோக சுவாமிகளின் நாற்பத்தேழாவது குருபூசை தினம்

யாழ்ப்பாணம், ஏப். 11

யோக சுவாமிகளின் நாற்பத்தேழாவது குருபூசை தினம் எதிர்வரும் 13ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும். அன்று முற்பகல் 10 மணி முதல் யாழ். சிவதொண்டன் நிலையத்துப் புராண மண்டபத்தில் சுவாமிகளது திருமேனிக்கும் - கொழும்புத்துறை ஆச்சிரமத்தில் திருவடிக்கும் திவ்வியமான அபிடேக ஆராதனை நிகழும். நண்பகல் மகேஸ்வர பூசையும் நிகழும்.

சிவதொண்டன் நிலையத்தில் குருபூசைக்கு முந்திய மூன்று நாள்களும் நாளை வரை வழமை போன்று ஆச்சிரம வாழ்வு நாள்களாக அனுட்டிக்கப்படும். இந்த நாள்களில் பூசை, நாள் வாய்ப்பாரா யணம், நற்சிந்தனை, முற்றோதல், தியானம் என்பன நிகழும். (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்றா நோய்களின் பரம்பல் யாழ். குடாநாட்டில் அதிகரிப்பு

## விழிப்புணர்வு தேவை என்கிறார் சுகாதாரப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம்,ஏப்.11

இன்றைய காலகட்டத்தில் நமது பிரதேசங்களில் தொற்று நோய்களின் ஆதிக்கம் குறைந்து தொற்றா நோய்களின் பரம்பல் அதிகரித்துள்ளன.

இதுபற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டியது அவசியமான ஒன்றாகும் என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார தினம் ஏப்ரல்-07 இனை முன்னிட்டு பொதுச் சுகாதார பரிசோதகர்களால் (பயிலுநர்கள்) வெளியிடப்பட்ட "சுகாதார விழிப்புணர்வுக் கையேடு" நூல் வெளியீட்டுக்கு வாழ்த்துரைகளை வழங்கும்போது அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

தொற்றா நோய்களினால் ஏற்படும் பரம்பலின் அளவைக் குறைப்பதற்கு ஆரோக்கியமான வாழ்க்கை முறையும் சிறந்த உணவுப் பழக்க முறையும் இருந்தால் கணிசமான அளவு இந்த நோய்களில் இருந்து எம்மைப் பாதுகாக்க முடியும்.

நோய்கள் வந்தபின் காப்பதைவிட வருமுன் தடுப்பதே சிறந்ததாகும். இதனை அனைவரும் உணர்ந்து நீர், உணவு போன்றவற்றால் பரவுகின்ற நோய்களில் இருந்து எம்மைப் பாது காக்க வேண்டும். சிறந்த எளிமையான சுகாதாரப் பழக்க வழக்கங்களே இதற்குக் கைகொடுக்கும் எனவும் தெரிவித்துள்ளார். (ம-313)

# முகிழ்நிலை ஆசிரியர்களின் 4 ஆம் கட்ட விசாரணை நாளை

யாழ்ப்பாணம், ஏப்.11

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் 'ராகிங்கில்' ஈடுபட்ட முகிழ்நிலை ஆசிரியர்களுக்கான நான்காம் கட்ட விசாரணைகள் நாளை யாழ். மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா முன்னிலையில் நடைபெறவுள்ளது.

கடந்த வாரம் 2 ஆம் வருட முகிழ்நிலை ஆசிரியர்கள் 'ராகிங்கில்' ஈடுபட்ட சம்பவம் தொடர்பான மூன்றாம்கட்ட விசாரணைகள் கடந்த 6 ஆம் திகதி யாழ். நீதிமன்றில் நடைபெற்றன.

இதன்போது சம்பவம் தொடர்பாக முகிழ்நிலை ஆசிரியர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டதுடன், கல்லூரியின் ஒழுக்காற்றுப் பிரிவினரிடமும் விசாரணைகளை நீதிவான் மேற்கொண்டார்.

வழக்கு விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராசா நாளை வழக்கு விசாரணைகளை ஒத்திவைத்தார்.

அன்றையதினம் பெரும்பாலும் இந்த விசாரணைகள் பூர்த்தியடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ-9)

# எரிகாயங்களுடன் யுவதி யாழ். ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஏப்.11

உடல் முழுவதும் எரிகாயங்களுக்குள்ளான நிலையில் யுவதி ஒருவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் அதிகாலை அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

கிளிநொச்சி, முறிகண்டிப் பகுதியைச் சேர்ந்த உ.தனுசா (வயது -20) என்பவரே எரிகாயங்களுக்கு இலக்கானார்.

நோய்வாய்பட்டிருந்த இவர் ஏற்கனவே கிளிநொச்சி வைத்திசாலையில் சிகிச்சை பெற்றிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

## கல்விப் பணி சிறக்க, வளர வாழ்த்துக்கள்...



உரும்பிராய் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன. பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைக்கிறார். அருகில் கல்லூரி அதிபர் அ.ஈஸ்வரநாதன் நிற்கிறார். யாழ்.பல்கலைக்கழக தமிழ் துறைத்தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜாவுக்கு அதிபர் ஈஸ்வரநாதன் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கிறார்.

# இரும்பு பாலங்களின் மேலாக 'காபெற்' போடுமாறு கோரிக்கை

யாழ்.மாவட்டத்தின் பல இடங்களிலும் உள்ள இரும்புப் பாலத்தில் அடிக்கடி ஏற்படும் விபத்துக்களை முற்றாகத் தடுக்க இரும்புப் பாலங்களைக் 'காபெற்' வீதியாக மாற்றுமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அண்மைக் காலமாகக் கைதடி மற்றும் நாவற்குழி ஆகிய இடங்களில் உள்ள இரும்புப் பாலங்களில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன.

பெரும் பொருள் சேதமும் சில வேளைகளில் உயிர்ச் சேதமும் இதனால் ஏற்படுகின்றன.

இந்த நிலையில் இரும்புப் பாலங்கள் மேல் "காபெற்" வீதிகள் அமைத்து மக்களின் நெருக்கடி நிலையைக் குறைக்குமாறு கோரிக்கை விடுக்கப்படுகிறது.

அண்மையில் ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்ட கேரதீவு- சங்குப்பிட்டி இரும்பிலான பாலம் 'காபெற்' முறையிலேயே போடப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-288)

# பெரும்போக விவசாயிகளுக்கு மானிய முறையில் உதவிகள்

யாழ்ப்பாணம்,ஏப்.11

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் பெரும்போகப் பயிற் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு மானிய முறையில் உரம், விதைபொருள்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகள் அனைத்தும் நவம்பர், டிசெம்பர் மாதங்களில் மேற்கொள்ளப்படும் பெரும் போகப் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்காக வழங்கப்படுகின்றன என சண்டிலிப்பாய் பிரதேச விவசாயப் போதனாசிரியர் தெரிவித்துள்ளார்.

வடலியடைப்பு, மாதகல் ஆகிய பிரதேசங்களில் தற்போது எள்ளு விதை வழங்கப்பட்டு பயிற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் உவர் நிலத்திலும் விளையக்கூடிய நல்ல முறையிலான நெல் விதைகளும் மேட்டு நிலங்களில் விளையக்கூடிய நிலக்கடலை, கௌப்பி போன்ற விதைகளும் விநியோகம் செய்யப்படும்.

இவை தொடர்பான மேலதிக விவரங்களை விவசாய சம்மேளனங்களுடன் தொடர்பு கொண்டு விவசாயிகள் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வீட்டுப் பயிர்ச் செய்கைகளை ஊக்குவிப்பதற்காக தென்னங்கன்றுகளும் வழங்கப்படவுள்ளன. (ம-313)

# ஹற்றன் நஷனல் வங்கியின் யாழ். அலுவலகத்துக்கு அடிக்கல்



வலி.வடக்கு,ஏப்.11

ஹற்றன் நஷனல் வங்கியின் யாழ்.மாவட்ட அலுவலகத்துக்கான புதிய கட்டடத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள வங்கிக்குச் சொந்தமான நிலத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் கடந்த பல வருடங்களாக ஹற்றன் நஷனல் வங்கி இயங்கி வருகின்றது. போதிய இடவசதிஇன்றி இயங்கி வரும் நிலையில் தற்போது புதிய ஐந்து மாடிக் கட்டடத்துக்காக அத்திபாரக்கல் ஹற்றன் நஷனல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளருமான இராஜேந்திரா தியாகராசாவினால் நடப்பட்டது.

இந்த நிகழ்வில் மனிதவலு முகாமைத்துவ பிரதிப் பொதுமுகாமையாளர் ஜே.ஆர்.பி. எம்.பாய்வா, மனிதவலு சிரேஷ்ட முகாமையாளர் திருமதி [illegible] பிராந்திய சிரேஷ்ட முகாமையாளர் ரி.ஜெயராஜசிங்கம் உட்பட யாழ்.மாவட்ட ஹற்றன் நஷனல் வங்கிக் கிளைகளின் முகாமையாளர்கள், அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ம-86)

# கழிவுகள் கொட்டப்படும் காக்கைதீவு; போக்குவரத்துச் செய்வோர் நெருக்கடி

வலி.வடக்கு,ஏப்.11

யாழ்ப்பாணம், கல்லூண்டாய் வெளியில் கொட்டப்படும் கழிவுகளில் அந்தப் பகுதி பெரும் சுகாதார சீர்கேட்டுடன் காணப்படுகின்றது. யாழ்ப்பாணம் மாநகர சபையினால் சேகரிக்கப்படும் கழிவுகள் மற்றும் பிரதேச சபைகளின் கழிவுகள் கொட்டப்படுகின்றன.

இதன் மூலம் ஓட்டுமடம், அராலி வீதி வழியாக நாளாந்தம் தமது பயணங்களை மேற்கொள்பவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இது தொடர்பாக யாழ்.மாவட்ட சுற்றுச் சூழல் அலுவலகம் கூட கவனம் செலுத்தாது கண்மூடிக் கொண்டு இருப்பதாக பொது மக்களினால் குற்றம் சுமத்தப்படுகிறது.

வெறுமனே சுற்றுச் சூழல் சுகாதாரம் என கூறிக்கொண்டு அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாது அசண்டையீனமாக இருப்பது குறித்து மக்கள் விசனம் கூறுகின்றனர். (ம-86)

# புகுமுக மாணவர்களுக்கு ஆங்கில வகுப்பு

கைதடி, ஏப்.11

பல்கலைக்கழக அனுமதி பெற்ற புகுமுக மாணவர்களுக்கான ஆங்கில கற்கைநெறி ஒன்றை வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு நடத்தவுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி தொடக்கம் யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் இந்த வகுப்புக்களை நடத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆங்கிலக் கற்கைநெறி 120 மணித்தியாலங்களைக் கொண்டதாகவும் இதற்கான கட்டணமாக ஆயிரத்து 500 ரூபா அறவிடப்படவுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (ம-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொழும்பு, மலையகத்திலிருந்து வந்து

# வட்டக்கச்சி பண்ணைப் பகுதியில் குடியமர்ந்த மக்களின் காணிகளைக் கையகப்படுத்த முயற்சி

## நிறுத்தக் கோருகிறார் நாடாளுமன்ற உறுப்பினர்

கொழும்பு, ஏப். 11

1958 ஆம் ஆண்டு இடம்பெற்ற இன வன்முறைகளில் பாதிக்கப்பட்டு கொழும்பிலும் மலையகத்திலும் இருந்து வந்த மக்கள் வட்டக்கச்சி அரசினர் விவசாயப் பண்ணைப் பகுதியில் வசித்து வருகின்றனர்.

தற்போது அவர்களது காணிகளைக் கையகப்படுத்தி, அவ்விடத்தில் இருந்து அந்த மக்களைத் துரத்தும் நிலைமை காணப்படுகின்றது.

அந்த மக்களின் நிலைமையைக் கவனத்தில் எடுத்து, அவர்களது வாழ்வியல் மாற்றத்துக்கு உதவ வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் மேற்கண்டவாறு கூறினார்.

நாடாளுமன்றத்தில் வங்கிகளால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்ட மூலம் மீதான விவாதத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

1970 களில் வட்டக்கச்சியிலே அரசினர் விவசாயப் பண்ணையும் அரசினர் விவசாயப் பாடசாலையும் மிகவும் சிறப்பாக இயங்கிவந்தன. 1980 களில் விவசாயப் பண்ணையிலே படித்த இளைஞர்களையும் எட்டாந் தரத்துக்கு மேல் படித்தவர்களையும் கிளிநொச்சி மண்ணிலே குடியேற்றியதன் காரணமாகக் கிளிநொச்சி தனி விவசாயக் குடியேற்ற மாவட்டமெனப் பெயர்பெற்றது.

ஆனால், வட்டக்கச்சி அரசினர் விவசாயப் பண்ணை கடந்த இருபது ஆண்டு காலமாக யுத்தத்தைக் காரணங்காட்டி செயற்படுத்தப்படாமல் தட்டிக்கழிக்கப்பட்டு வந்துள்ளது.

யுத்தம் முடிவுற்ற பின்னர் தற்போது அந்த இடத்திலே நிலைகொண்டிருந்த, இராணுவத்தினர் அவ்விடத்திலிருந்து மெல்ல மெல்ல அகன்று கொண்டிருக்கும் சூழ்நிலையில், கிளிநொச்சி மாவட்டத்தில் மீண்டும் அந்த அரச விவசாயப் பாடசாலையையும் அரச விவசாயப் பண்ணையையும் இயக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இச்சபையினூடாகத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

ஏனெனில், அண்மைய நாள்களில் அந்த விவசாயப் பண்ணைகளில் வேறு திட்டங்களை மேற்கொள்வதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றனவென நாம் அறிகிறோம். குறிப்பாக, வடமாகாண விவசாய அமைச்சின்கீழ் வருகின்ற அந்த விவசாயப் பண்ணையை மத்திய விவசாய அமைச்சின்கீழ்க் கொண்டு வந்த பின்னர், உணவு உற்பத்திச் சபையினூடாக அதனைக் கையகப்படுத்தி, அங்குள்ள மக்கள் பயமுறுத்தப்பட்ட ஒரு சூழலில், அந்தப் பண்ணை வேறு உற்பத்திகளுக்காகப் பயன்படுத்தப்படலாம் என்ற தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

ஏற்கெனவே கொழும்பிலும் மலையகத்திலும் வாழ்ந்த மக்களே, 1958 களில் ஏற்பட்ட இன வன்முறையில் பாதிக்கப்பட்டு அந்த விவசாயப் பண்ணையை அண்மித்த பிரதேசத்தில் அமைக்கப்பட்ட பத்து வீட்டுத் திட்டம் என்ற இடத்தில் குடியமர்ந்து வாழ்ந்து வருகின்றார்கள்.

அந்த மக்கள் அரச காணிகளில் 4 பரப்பு - அதாவது ¼ ஏக்கர் - காணியில் குடியமர்ந்து பெரிய வான் பயிர்களையும் நீண்டகாலப் பயிர்களையும் நட்டு, இன்று அவற்றிலிருந்து சிறு அறுவடையைப் பெற்றுக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வேளையில், அப்பிரதேசத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் அவர்களுடைய 4 பரப்புக் காணிகளை இரண்டு பரப்புக்களாகப் பிரித்து அவர்களது வான்பயிர்களையும் அழித்து, அவர்களுக்கு இரண்டு பரப்புக்காணி மட்டும்தான் தர முடியும் என்று அறிவித்ததுடன், அதற்காகச் சில அரச உத்தியோகத்தர்களை அழைத்துச் சென்று அக்காணிகளை அளந்திருப்பதாகவும் அந்த மக்கள் எங்களுக்கு முறைப்பாடு செய்திருக்கின்றார்கள்.

1974 ஆம் ஆண்டிலிருந்து கிட்டத்தட்ட 15 ஆண்டுகளுக்கு மேல் ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் அந்த வட்டக்கச்சி விவசாயப் பண்ணையில் வேலை செய்திருக்கின்றார்கள். அங்கு வேலை செய்த பலர் உரிய ஓய்வூதியம் இன்றித் தாம் விளைவித்த வான் பயிர்கள், சிறுபயிர்கள் என்பவற்றினால் கிடைக்கும் வருமானத்தை நம்பியே வாழ்ந்து வந்திருக்கிறார்கள். ஆனால், இன்று அவர்கள் மீண்டும் அவ்விடத்திலிருந்து துரத்தப்படுகின்ற நிலைமை காணப்படுகின்றது. அதாவது ''நீங்கள் கலைக்கப்படுவீர்கள்'' என்று அவர்களுக்குப் பயமுறுத்தல் விடுக்கப்படுகின்றது.

அந்தப் பிரதேசமானது, பெரிய விவசாயப் பாடசாலையொன்றையும் பெரிய விவசாயப் பண்ணையொன்றையும் உள்ளடக்கியுள்ள, கறுப்பிகுளம் என்னும் குளத்துடன் சேர்ந்த வளம்மிக்க மண்ணைக் கொண்ட மிகப்பெரிய விவசாய நிலப் பரப்பாகும்.

அது அந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்களுக்கான, கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மிகப் பெரியதொரு விவசாயப் பண்ணையாகும். மேலும், அப்பண்ணையானது கூடியளவான உற்பத்திகளைச் செய்வதிலும் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதிலும் புதிய விதைகளை உற்பத்தி செய்வதிலும், கண்டுபிடிப்பதிலும் கூடியளவு செல்வாக்கைச் செலுத்தியிருக்கின்றது.

ஆகவே, அந்தப் பண்ணையை மீண்டும் இயக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ள வேண்டுமென நான் இந்தச் சபையினூடாக வேண்டுகோள் விடுக்கின்றேன். அதேநேரம் இன்று ஒரு வீட்டுத் திட்டத்துக்கு ஆகக் குறைந்தது அரை ஏக்கர் காணி- அதாவது, குறைந்தது எட்டுப் பரப்புக் காணி - இருக்க வேண்டும் என்றதொரு சட்டம் முன்வைக்கப்பட்டிருக்கின்ற இந்தச் சூழலில், அங்குள்ள பத்து வீட்டுத் திட்டத்தில் வாழுகின்ற மக்களுடைய நான்கு பரப்புக் காணிகளை இரண்டு பரப்புக்களாகக் குறைக்க முனைவது எவ்வளவு வேதனையானது என்பதை அந்த மக்கள் மிகவும் கவலையோடு என்னிடம் தெரிவித்தார்கள்.

ஆகவே, அந்த மக்களுடைய நிலையைக் கவனத்தில் எடுத்து, அவர்களுடைய வாழ்வியல் மாற்றத்துக்கு உதவ வேண்டுமென நான் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

(ஐ)

> **1958 ஆம் அண்டு இடம் பெற்ற இன வன்முறைகளில் பாதிக்கப்பட்டு கொழும்பிலும் மலையகத்திலும் இருந்து வந்த மக்கள் வட்டக்கச்சி அரசினர் விவசாயப் பண்ணைப் பகுதியில் வசித்து வருகின்றனர். அந்த மக்களின் நிலைமையைக் கவனத்தில் எடுத்து அவர்களது வாழ்வியல் மாற்றத்துக்கு உதவ வேண்டும்.**

## கிளிநொச்சியில் மோசமான நிலையில் வீதி

கிளிநொச்சி, ஏப். 11

கிளிநொச்சி நகரிலிருந்து வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளுக்குச் செல்லும் பிரதான வீதி நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாத நிலையில் உள்ளதால் மக்கள் சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

சுமார் 12 கிலோ மீற்றர் நீளமான இந்தக் கிரவல் வீதி புனரமைக்கப்படாத நிலையில் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. மழை காலங்களில் கிரவல் சேறும் சகதியுமாக மாறுவதால் மக்கள் எதிர்நோக்கும் அவலங்கள் ஏழலாம்.

எனவே இந்த வீதியை இனியும் தாமதம் செய்யாது புனரமைத்துத் தருமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(க)

## ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா சனிக்கிழமை

வவுனியா, ஏப். 11

வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 16 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் சப்பறத் திருவிழாவும் நடைபெறவுள்ளதாக [illegible] சபையினர் தெரிவித்துள்ளனர்.

(எ-க)

මහජන සම්පත
மஹாஜன சம்பத
Mahajana Sampatha
2011.04.08
அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2380
வெற்றி எழுத்து வெற்றி எண்கள்
G 6 8 3 6 5 6

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | G | 6 | 8 | 3 | 6 | 5 | 6 | ரூபா. 10,995,390/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 6 | 8 | 3 | 6 | 5 | 6 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | | | 8 | 3 | 6 | 5 | 6 | ரூபா. 100,000/= | பரிசுகள் 14 |
| 3 பரிசுகள் | | | | 3 | 6 | 5 | 6 | ரூபா. 10,000/= | பரிசுகள் 151 |
| 4 பரிசுகள் | | | | | 6 | 5 | 6 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1392 |
| 5 பரிசுகள் | | | | | | 5 | 6 | ரூபா. 100/= | பரிசுகள் 14026 |
| 6 பரிசுகள் | | | | | | | 6 | ரூபா. 20/= | பரிசுகள் 138606 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 6 | 8 | 3 | 6 | 5 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 14 |
| 8 பரிசுகள் | | 6 | 8 | 3 | 6 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 144 |
| 9 பரிசுகள் | | 6 | 8 | 3 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1416 |
| 10 பரிசுகள் | | 6 | 8 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 13797 |
| 1 பரிசுகள் | G | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 55497 |

சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை
Rs. 12,702,110.00

தேசிய லொத்தர் சபை
2342 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 2470662, 4607000, Hotline 2433631 மின்னஞ்சல் www.nlb.lk

அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி இலக்கங்கள்
1284 சிகப்பு
இடபம்
12 15 37 38
08-04-2011
ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 254,351 | 20/- | 5,087,020/- |
| 2 இலக்கங்கள் | 23,436 | 40/- | 937,440/- |
| 1 இல. + லக்கினம் | 23,142 | 60/- | 1,388,520/- |
| 2 இல. + லக்கினம் | 2,085 | 200/- | 417,000/- |
| 3 இலக்கங்கள் | 621 | 1000/- | 621,000/- |
| 3 இல. + லக்கினம் | 61 | 10,000/- | 610,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 2,000,000/- | 2,000,000/- |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 11,660,980/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 678 | | 637,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 304,378 | | 12,298,480/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

இரண்டாவது வாய்ப்பு
வெற்றி இலக்கங்கள்
14 16 22 30
ஜக்பொட் பரிசு ரூபா. 600,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 675 | 500/- | 337,500/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | | 600,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 678 | | 637,500/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 700,000/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் மீள்குடியமர்வுக்கு உரிய தரப்புகளுடன் பேசி வருகிறேன்

## மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஏப். 11
முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 778 குடும்பங்களைச் சொந்த இடத்தில் மீள் குடியமர்த்துவதற்கு பல்வேறு தரப்பினருடனும் பேச்சுக்கள் நடத்தப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ.பத்திநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முல்லைத்தீவு கிழக்கு, முல்லைத்தீவு வடக்கு, அம்பலவன் பொக்கணை ஆகிய பகுதிகளில் மிதிவெடியகற்றும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

அந்தப் பணிகள் நிறைவு பெற நீண்டகாலம் எடுக்கும் என்பதால் அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்களைத் தற்காலிக இடங்களில் குடியமர்த்துவதற்கு ஆவனசெய்யுமாறு என்னிடம் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் மிதிவெடிய கற்றும் பணிகள் நிறைவுபெற்றதும் அந்த மக்களை அவர்களது சொந்த இடங்களிலே மீள்குடியமர்த்துவதற்கு உரிய தரப்பினரிடம் பேச்சு நடத்திக் கொண்டிருக்கின்றோம்.

அந்த மக்களைச் சொந்த இடத்திலே மீள்குடியமர்த்துவதற்கு உரிய தரப்பினர் அனுமதியை வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கிறேன் - என்றார். (ஒ-9)

# குமுளமுனை மத்தியில் 105 குடும்பங்கள்

## எதிர்வரும் 20 ஆம் திகதி மீள்குடியமர்வு

முல்லைத்தீவு, ஏப். 11
முல்லைத்தீவு மாவட்டத்தில் மேலும் 105 குடும்பங்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி குமுளமுனை மத்திப் பகுதியில் மீள் குடியமர்த்தப்படவுள்ளன.

இந்தத் தகவலை முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ.பத்திநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த 1984 ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த நடவடிக்கையின்போது இடம்பெயர்ந்த குமுளமுனை மத்தி மக்கள் வன்னியில் பல்வேறு இடங்களில் தங்கியிருந்தனர்.

இறுதி யுத்தத்தின் பின்னர் இங்கிருந்து இடம்பெயர்ந்த மக்கள் வவுனியா மெனிக்பாம் முகாமில், தங்கவைக்கப்பட்டனர்.

தற்போது இந்தப் பகுதியில் கண்ணிவெடியகற்றும் பணிகள் பூர்த்தியடைந்துள்ள நிலையில் எதிர்வரும் 20 ஆம்திகதி 105 குடும்பங்களைச் சேர்ந்த 292 பேர் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-9)

# பெரியமடு கிராமத்தில் ஜேர்மன் உதவியுடன் வீட்டுத்திட்டம்

கிளிநொச்சி, ஏப். 11
ஜேர்மன் 'தயகோனி' அமைப்பின் நிதி உதவியுடன் மன்னார் சமூக நம்பிக்கை நிதியம் (சீ.டி.எவ்) அமைப்பானது மன்னார் மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பெரியமடுக் கிராமத்தில் மீள்குடியமர்ந்துள்ள மக்களுக்கான தற்காலிக வீடுகளை அமைக்கவுள்ளது.

இதற்கான அவசர கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை பெரியமடுக் கிராமத்தில் இடம்பெற்றது.

இதன்போது மன்னார் சமூக நம்பிக்கை நிதியத்தின் பகுதி நிகழ்ச்சித்திட்ட அதிகாரி முபையில், மன்னார் சமூக நம்பிக்கை நிதியத்தின் இணைப்பாளர் இர்ஷாத், நிகழ்ச்சித்திட்ட உறுப்பினர்களான சர்மில் மற்றும் வாகிசன், அந்தப் பகுதிக்கான இராணுவத்தின் 613 ஆவது படைப் பிரிவு அதிகாரி, இராணுவத்தின் 61 ஆவது படைப்பிரிவு அதிகாரிகள், அப்பகுதியினைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

குறித்த கிராமத்தில் முதற்கட்டமாக 250 வறிய குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு தற்காலிக வீடுகள் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை குறித்த கிராமத்தில் 20 பொது மலசல கூடங்களும் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## கல்விக்கு உந்து சக்தி...



காப்பு: கற்சிலைமடு ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் ஒட்டுசுட்டான் இராணுவத்தினரால் நடத்தப்பட்ட பெருவிழாவின்போது இராணுவ உயரதிகாரிகள் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் வழங்குகின்றனர். ஆலயப் பிரதம குருவால் இராணுவத்தினருக்குக் காப்புக் கட்டப்படுகின்றது. (500)

# விரிவான விசாரணை

வவுனியா, ஏப். 11
வவுனியா நகர வர்த்தகரும் மரண விசாரணை அதிகாரியுமான சண்முகம் இராசலிங்கம் வீட்டில் கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் குறித்து விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இதன்போது அவரது மனைவி கழுத்திலிருந்த சுமார் 10 பவுண் தாலிக்கொடி உள்ளிட்ட பல நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில் கொள்ளையரின் வாள்வெட்டுக்கு இலக்கான மரண விசாரணை அதிகாரியிடமும் மனைவியிடமும் பொலிஸார் வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளனர். (க)

# இராணுவ வாகனம் - தனியார் பேருந்து விபத்து

## பேருந்து சாரதி, நடத்துநர் மீது தாக்குதல்

கிளிநொச்சி, ஏப். 11
மாங்குளம் மகாவித்தியாலயத்திலிருந்து 200 மீற்றர் தூரத்தில் நிகழ்ந்த தனியார் பேருந்து, இராணுவ ட்ரக் விபத்தின்போது பேருந்தின் சாரதி, நடத்துநர், இன்னொருவரென மூவர் இராணுவத்தினரால் தாக்குதலுக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை வவுனியாவிலிருந்து சுமார் 85 பயணிகளுடன் யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற தனியார் பேருந்தும் இராணுவ முகாமிலிருந்து திருப்புவதற்கு முயன்ற இராணுவ ட்ரக்கும் விபத்தில் சிக்கிக் கொண்டன. இராணுவ ட்ரக் சமிக்ஞை எதுவுமின்றித் திடீரெனத் திருப்பப்பட்டதால் இந்த விபத்து ஏற்பட்டதாகச் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். இந்த இராணுவ ட்ரக்கின் பக்கக் கண்ணாடி சேதமடைந்தது.

அத்துடன் விபத்தைத் தவிர்ப்பதற்காகப் பேருந்துச் சாரதி திடீர் முயற்சிகளில் ஈடுபட்டதால் பயணியொருவர் காயமுற்றார். நிலைமை இவ்வாறிருக்க விபத்துத் தொடர்பாக இராணுவத்தினருக்கு விளக்க முற்பட்ட பேருந்தின் சாரதி, நடத்துநர், மொழிபெயர்ப்புச் செய்ய முயன்ற ஒருவர் என மூன்று பேர் இராணுவத்தினரால் தாக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் உடைந்த கண்ணாடிக்குரிய பணத்தைத் தருமாறும் இராணுவத்தினர் வற்புறுத்தினர்.

ஆனால் தம்மீது எவ்வித தவறும் இல்லையெனவும் இராணுவ ட்ரக் திடீரெனத் திருப்பப்பட்டதால்தான் விபத்து ஏற்பட்டதெனவும் பேருந்துச் சாரதி எவ்வளவோ எடுத்துக் கூறியபோதிலும் இராணுவத்தினர் அதனை ஏற்கவில்லையெனவும் தெரிய வருகின்றது.

இறுதியில் பேருந்துச் சாரதி உடைந்த கண்ணாடிக்குரிய பெறுமதியை வழங்குவதற்கு வேறு வழியின்றி ஒப்புக் கொண்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (க-6)

# பொன்னாவெளி கண்ணகை அம்மனின் பங்குனித் திங்கள் உற்சவம்

பூநகரி, ஏப். 11
பூநகரி பொன்னாவெளிக் கிராமத்தில் அமைந்துள்ள கண்ணகை அம்மன் ஆலயத்தில் பங்குனித் திங்கள் உற்சவம் இன்று சிறப்புற நடைபெறவிருக்கின்றது.

இதில் பெருந்தொகையான அடியார்கள் கலந்துகொண்டு தமது நேர்த்திக்கடன்களை நிறைவு செய்யவுள்ளார்கள். இப்பிரதேசத்திலே வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு, பாலாவி, பொன்னாவெளி ஆகிய ஐந்து கிராம மக்களுக்கும் இந்த ஆலயம் அருள்பாலித்து வருகின்றது.

பொன்னாவெளிக் கிராமம் பூநகரி செயலகப் பிரிவில் பழைமையும், சைவப் பண்பும் நிறைந்த கிராமமாகும். இங்கே உண்ணாமுலை உமையாள் சமேத அண்ணாமலைச் சிவனாலயம், சித்தி விநாயகர் ஆலயம் என்பன அமையப் பெற்றுள்ளன.

இந்த ஆலயங்கள் பழைமையும், புதுமையும் வாய்ந்தன.

கண்ணகை அம்மனின் பங்குனித்திங்கள் உற்சவத்துக்கான பூரண ஏற்பாடுகளும் ஆலய நிர்வாகத்தினரால் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. (க)

# நலன்புரி முகாமில் அனைத்துலக மகளிர் தினம்

கிளிநொச்சி, ஏப். 11
கடந்த வாரம் வவுனியா, செட்டிகுளம் பகுதியில் உள்ள இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ள கதிர்காமர் நலன்புரி முகாமில் அனைத்துலக மகளிர் தினத்தையொட்டி பல விசேட நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்தத் தினத்தில் இடம்பெயர்ந்த மக்களுடன் கடமை புரியும் பல அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், செட்டிகுளம் சிறுவர்கள், பெண்கள் வன்முறைக்கு எதிராகச் செயற்படும் பொலிஸ் பிரிவு உத்தியோகத்தர்கள், முகாம் இணைப்பாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டு பல்வேறு விழிப்புணர்வுச் செயற்பாடுகளை ஏற்படுத்தினர்.

குறிப்பாக இந்தச் செயற்பாடுகளில் பால்நிலைகளுக்கான வன்முறைகளைப் பெண்கள் மத்தியில் ஏற்படுவதைத் தவிர்த்தல் அத்துடன் இளவயதுத் திருமணங்களால் இன்று சமூகம் முகம் கொடுக்கும் பல்வேறு சவால்கள், குறிப்பாக இதனால் சிறுவர்கள், பெண்கள் பாதிக்கப்படுவது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் பொலிஸார் தமக்குக் கிடைக்கும் முறைபாடுகள் தொடர்பாகவும் தாம் எவ்விதம் அவற்றை அணுகித் தீர்த்து வைத்தல் தொடர்பிலும் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

அத்துடன் பிறந்த பிள்ளைகளுக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் மற்றும் திருமண அத்தாட்சிப் பத்திரம் இல்லாமை தொடர்பிலும் அவற்றை பெறுவதற்கேற்ற வழிவகைகளும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் தெளிவுபடுத்தப்பட்டன. இறுதியில் சிறுவர்கள், பெண்களால் ஏற்பாடு செய்யப்பட்ட நாடகம், நடனம் வில்லிசை போன்ற நிகழ்வுகளும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்தநிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளும் அகதிகளுக்கான டெனிஸ் அமைப்பு மற்றும் ஐக்கியநாடுகள் சர்வதேச அகதிகளுக்கான அமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகளால் ஏற்பாடு செய்யப்பட்டன. இந் நிகழ்வுகளில் சுமார் இருநூறுக்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். (க-501)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதாபிமானம்...



கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் இரத்த தானம் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை இடம் பெற்றது. இந்த நிகழ்வில் மக்கள் கலந்து கொண்டு இரத்ததானம் செய்கின்றனர்.

# கட்டட நிர்மாணத்துக்கு தற்காலிக தடை விதிப்பு

கண்டி,ஏப்.11

ஹற்றன் - டிக்கோயா நகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் மறு அறிவித்தல் வரை கட்டட நிர்மாணம் மற்றும் கட்டட விஸ்தரிப்பு போன்ற நடவடிக்கைகள் உடனடியாக அமுலுக்குவரும் வகையில் இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக ஹற்றன்- டிக்கோயா நகரசபையின் தலைவர் ஏ. நந்தகுமார் தெரிவித்துள்ளார். ஹற்றன் நகரில் அண்மையில் இடம்பெற்ற திடீர் தீ விபத்தினைத் தொடர்ந்து சட்டமா அதிபர் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகளுக்கிடையில் இடம் பெற்ற பேச்சு ஒன்றின்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஹற்றன் - டிக்கோயா நகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் புதிய கட்டடங்கள் நிர்மாணித்தல், தற்போதிருக்கும் கட்டடங்களை விஸ்தரித்தல் போன்ற நடவடிக்கைகளை இடை நிறுத்தி வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் சட்ட விரோத நிர்மாணங்களைக் கண்டறிந்து அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.(204)

# பிரதேச சபைக்குத் தெரிவான உறுப்பினர்கள் மக்களுக்காக சேவையாற்ற வேண்டும்

## தவிசாளர் கே.பி.எஸ்.ஹமீட் தெரிவிப்பு

கோறளைப்பற்று, பிரதேச சபைக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள அனைத்து உறுப்பினர்களும் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் பிரதேச சபையின் தவிசாளர் கே.பி. எஸ்.ஹமீட் . பிரதேச சபையின் செயலாளர் ரீ.தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்ற முதலாவது கூட்டம் சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

எமக்கு சபையை நடத்துவதற்கு கட்சிப் பாகுபாடு முக்கியமானதல்ல. நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து பிரதேசத்தின் அபிவிருத்திக்காகப் பாடுபட்டு உழைத்து பிரதேசத்தை அனைத்துத் துறைகளிலும் அபிவிருத்தியடையச் செய்வது எம்மை நம்பி வாக்களித்த மக்களுக்கு நாம் செய்யும் நன்றிக்கடனாகும்- என்றார். (204)

# ஐம்பது ஆயிரம் ஏக்கரில் மட்டக்களப்பில் சிறுபோகம்

மட்டக்களப்பு,ஏப்.11

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த வருடம் 50 ஆயிரம் ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக மாவட்ட விவசாயத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் இரா.ஹரிகரன் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு 50 ஆயிரம் ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படுவதற்கான கணிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த சிறு போகத்துடன் ஒப்படும்போது ஆயிரம் ஏக்கர் அதிகமானது எனவும் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த பெரும் போகத்தின்போது இந்த மாவட்டத்தில் இரு தடவைகள் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட நெற்செய்கையாளர்கள் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வார்களாயின் அவர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு இரண்டு புசல்வீதம் விதைநெல் இலவசமாக வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (204)

# அரச ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை

திருகோணமலை,ஏப்.11

கிண்ணியா கல்வி வலயத்தில் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் உண்மையாக வெள்ள அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு நிவாரணக் கொடுப்பனவு வழங்குமாறு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

கணவரும் மனைவியும் நிவாரணக் கொடுப்பனவு பெற விண்ணப்பித்திருந்தால் இவர்களில் ஒருவருக்கு இந்தக் கொடுப்பனவை வழங்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (204)

31 ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு: 20.03.1921
உதிர்வு: 12.03.2011



எம் குடும்பத் தலைவியாகத் திகழ்ந்து பண்பிற்கும் பாசத்திற்கும் உறைவிடமாய் விளங்கிய எம் தெய்வமான

திருமதி மாணிக்கம் லட்சுமி அவர்கள்

இறைவனுடன் சங்கமித்த வேளையில், எமது துயரத்தில் பங்குகொண்டோர் தொலைபேசி, கடிதம் மூலமும் அனுதாபச் செய்திகளை அனுப்பியோர், உடன் நின்று ஒத்தாசை புரிந்தோர், அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டோர் மற்றும் அனைத்துக் கிரியைகளிலும் கலந்துகொண்டு ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்த அனைவருக்கும் இதய பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் இன்று(11.04.2011) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'சிவ இல்லம்', ஆழக் கிணற்றடி,
பொலிகண்டி.
(48,24,25)
பேரப்பிள்ளைகள்.

# விசேட ரயில் சேவைகள்

புத்தாண்டை முன்னிட்டு கொழும்பு கோட்டையிலிருந்து பண்டாரவளை வரை விசேட நகர் சேர் கடுகதி ரயில் சேவையொன்றை நடத்த ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முதல் மே மாதம் முதலாம் திகதி வரை இந்தச் சேவை நடத்தப்படும்.

# வியாபாரிகள் கைது

போலியாகத் தயாரிக்கப்பட்ட தராசுகளைப் பயன்படுத்தி கண்டி மத்திய சந்தையில் பொருள்கள் நிறுவை செய்த இரு வியாபாரிகளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தத் தராசுகள், 500 கிராம் நிறுவை செய்யும் போது 180 கிராம் குறையும் விதத்தில் போலியாகத் தயாரிக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.(204)

உத்தியோகபூர்வ முடிவுகள்

சுபிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 601
திகதி 2011/04/09

சுப்பர் இலக்கம்: 19
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 31 41 44 47

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 12,023,359.20 | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 1,000,000.00 | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 50,000.00 | 14 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 2,000.00 | 271 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 1,000.00 | 527 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 100.00 | 13,438 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 1 இலக்கம் சரியாக இருப்பின் | ரூ. 40.00 | 7,791 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாக இருப்பின் | ரூ. 20.00 | 193,138 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாக இருப்பின் | ரூ. 20.00 | 31,184 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 8,910,880.00

அடுத்த புதன்கிழமை ரூ. 12,298,756.80

தேசிய லொத்தர் சபை
இணையதளம்: www.nlb.lk

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் - 115
திகதி - 09.04.2011
ஜாதிக சம்பத Jathika Sampatha
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: Y
அதிர்ஷ்ட இலக்கம்: 04
வெற்றி இலக்கம்: 0 0 3 6 0

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | Y | 04 | 0 | 0 | 3 | 6 | 0 | ரூ. 14,660,780.00 | பரிசு - |
| 1 பரிசு | | 04 | 0 | 0 | 3 | 6 | 0 | ரூ. 2,000,000.00 | பரிசு 01 |
| 2 பரிசு | | | 0 | 0 | 3 | 6 | 0 | ரூ. 100,000.00 | பரிசு 02 |
| 3 பரிசு | | | | 0 | 3 | 6 | 0 | ரூ. 10,000.00 | பரிசு 30 |
| 4 பரிசு | | | | | 3 | 6 | 0 | ரூ. 1,000.00 | பரிசு 304 |
| 5 பரிசு | | | | | | 6 | 0 | ரூ. 50.00 | பரிசு 2968 |
| 6 பரிசு | | | | | | | 0 | ரூ. 20.00 | பரிசு 28692 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 0 | 0 | 3 | 6 | | ரூ. 1,000.00 | பரிசு 32 |
| 8 பரிசு | | | 0 | 0 | 3 | | | ரூ. 100.00 | பரிசு 309 |
| 9 பரிசு | | | 0 | 0 | | | | ரூ. 50.00 | பரிசு 3002 |
| 10 பரிசு | Y | | | | | | | ரூ. 20.00 | பரிசு 11833 |
| 11 பரிசு | Y | 04 | | | | | | ரூ. 100.00 | பரிசு 1362 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,112,100.00

தேசிய லொத்தர் சபை
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு
ரூ.14,660,780.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பளை ரயில் நிலையத்தில் தமிழ் தெரிந்த அதிகாரிகள் இல்லை

கம்பளை ரயில் நிலையத்தில் தமிழ் தெரிந்த அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் இல்லாமையால் தமிழ் பேசும் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ரயில் நிலையத்திற்கு வரும் பெருந்தோட்டப்புற மக்கள் உட்பட தமிழ் பேசுவோர் தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதில் பெரும் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர்.

ரயில் நிலையத்திற்கு வரும் பொதிகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக தமிழ்மொழி மூலமான ஆவணங்களைக் கையாள முடியாதநிலை நிலவுவதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

மலையகத்தின் பிரதான நகர்களான ஹற்றன் , பதுளை, கண்டி போன்ற பகுதிகளுக்குச் செல்லும் பெருந்தொகையான பொதுமக்கள் இந்த ரயில் நிலையத்தையே நாடி வருகின்றனர்.

தமிழ் தெரிந்த அதிகாரிகள் இல்லாமையால் ரயில் நேர சூசி தொடர்பான அறிவித்தல்களும் சிங்கள மொழியில் மட்டுமே வழங்கப்படுகின்றன.

தமிழ்பேசும் மக்களின் தேவை கருதி இந்த ரயில் நிலையத்தில் தமிழ் தெரிந்த அதிகாரிகளை நியமிக்க உரிய அதிகாரிகள் முன்வர வேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (204)

# திருகோணமலையில் 3 மாதங்களுக்குள் 90 பேர் காச நோயினால் பீடிப்பு

திருகோணமலை மாவட்டத்தில் இந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களுக்குள் காச நோயினால் பீடிக்கப்பட்ட 90 பேர் இனங்காணப்பட்டுள்ளனர் எனக் காசநோய்த் தடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் வைத்திய அதிகாரி டாக்டர் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

காசநோய் விழிப்புணர்வு வார நிறைவில் டாக்டர் சுரேஷ் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். 2009ஆம் ஆண்டில் 153பேரும், 2010 ஆம் ஆண்டில் 264 பேரும் காசநோயினால் பீடிக்கப்பட்டனர். அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

காசநோய்த் தடுப்புப் பிரசார நடவடிக்கையாக கடந்த வியாழக்கிழமை திருகோணமலை நகரில் விழிப்புணர்வு ஊர்வலம் நடத்தப்பட்டது. கிழக்கு மாகாண சுகாதார அலுவலகத்திலிருந்து ஆரம்பமான விழிப்புணர்வு பவனி நீதிமன்ற வீதி, தபால் கந்தோர் சந்தி ஊடாகத் திருகோணமலை பொது வைத்தியசாலையைச் சென்றடைந்தது. மாகாண சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் எம்.தேவராஜன் உட்படப் பலர் இந்த ஊர்வலத்தில் பங்குபற்றினர்.

## ஆர்ப்பாட்டம்....



தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் கல்முனை அலுவலகத்தை, அம்பாறை அலுவலகத்துடன் இணைப்பதற்கு எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளைக் கண்டித்து கடந்த வெள்ளிக்கிழமை காலை அமைதி ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் கல்முனை அலுவலகத்துக்கு முன்பாக நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் உள்ளிட்ட அமைப்பின் பிரதிநிதிகளும் பொதுமக்களும் கலந்துகொண்டனர். (204)

# உணவகத்தின் காஸ் சிலிண்டர் வெடித்ததால் ஹற்றன் நகரில் 7 கடைகள் எரிந்து சாம்பல்

ஹற்றன் நகர் பிரதான வீதியில் கடந்த புதன்கிழமை மாலை ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் 7 வர்த்தக நிலையங்கள் எரிந்து சாம்பலாகியுள்ளன.

இந்தத் தீ விபத்தினால் எவருக்கும் காயங்கள் ஏற்படாதபோதும் பல கோடி ரூபா பொருள்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

உணவகமொன்று, பலசரக்குக் கடைகள் மூன்று, நகைக் கடைகள் உட்பட 7 கடைகளே இவ்வாறு சாம்பராகியுள்ளன.

தீ ஏனைய கடைகளுக்குப் பரவுவதைத் தடுக்கும் வகையில் டோசர் இயந்திரம் மூலம் கடைகளின் சுவர்கள் இடிக்கப்பட்டதால் மேலும் சில கடைகளின் பொருள்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

பொலிஸாரும் பொதுமக்களும் இணைந்து தீயை அணைப்பதற்கு முயன்றபோதும், சுமார் ஒரு மணித்தியாலத்திற்குப் பின்னர் நுவரெலியா மாநகரசபையின் தீயணைக்கும் பிரிவினர் வந்தே தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

தீ விபத்து ஏற்பட்ட இடத்துக்கு வருகை தந்த அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் உடனடி நடவடிக்கைகளுக்கு ஆலோசனை வழங்கினார். இந்தத் தீ விபத்து தொடர்பாக அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார். ஹற்றன் நகரில் தீ விபத்து ஏற்பட்டதன் பின்பு நகரின் பாதுகாப்பிற்காகப் பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இந்த விபத்துத் தொடர்பான விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# எல்ல நியூபேர்க் தோட்ட மேற்பிரிவு குடும்பங்களுக்கு விரைவில் மாற்றுக் குடியிருப்புக்கள் அமைக்க ஏற்பாடு

## மாகாணசபை உறுப்பினர் அரவிந்குமார் தோட்ட அதிகாரிக்கு கடிதம்

பதுளை, ஏப்.11

இயற்கை அனர்த்தத்தினால் பாதிப்படைந்திருக்கும் எல்ல நியூபேர்க் தோட்ட மேற்பிரிவைச் சேர்ந்த 42 குடும்பங்களுக்கு துரிதமாக மாற்றுக் குடியிருப்புகள் அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஊவா மாகாண சபை உறுப்பினர் அ.அரவிந்குமார் எல்ல, நியூபேர்க் தோட்ட அதிகாரியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாகத் தோட்ட அதிகாரிக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு,

2011 ஆம் ஆண்டு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் சுய வீடமைப்புக் கடன் திட்டத்தின் கீழ் நியூபேர்க் மேற்பிரிவைச் சேர்ந்த 42 தொழிலாளர் குடும்பங்கள் அப்பிரிவின் 6 ஆம் இலக்க தேயிலைக் காணியில் வீடுகளைக் கட்டினர். தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து இவர்கள் பெற்றுக்கொண்ட வீடமைப்புக்கான கடன் மீள்செலுத்தல் 2013 ஆம் ஆண்டு இறுதியிலேயே பூர்த்தியடைகிறது.

2006 ஆம் ஆண்டு பெய்த கடும் மழை காரணமாக இந்த வீடமைப்புத்திட்டம் மேற்கொள்ளப்பட்ட பகுதிகளில் நில வெடிப்புகளும், மண்சரிவிற்கான அறிகுறிகளும் தென்படவே அங்கு வாழும் சகல குடும்பங்களும் அந்தப்பிரதேசத்திலிருந்து வெளியேற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. தமது கடின உழைப்பினூடாகவும் பொருளாதார சிக்கலுக்கு மத்தியிலும் அமைக்கப்பட்ட வீடுகளிலிருந்து வெளியேற வேண்டும் என்ற தகவல் அவர்களுக்குப் பேரதிர்ச்சியைக் கொடுத்தது. அறிவுறுத்தல்களை உதாசீனம் செய்து தொடர்ந்தும் அங்கேயே வசித்து வருகின்றனர்.

இந்தநிலையில் அண்மையில் பெய்த அடைமழையினால் அங்கிருந்து முற்றாக இடம்பெயரவேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. புதிய வீடமைப்புத் திட்டமொன்றை ஏற்படுத்தி இவர்களை அங்கே குடியேறுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதற்காகத் தோட்ட நிர்வாகம் சுமார் 6 ஏக்கர் காணியை இலக்கம் 2 என்ற தேயிலை மலையில் ஒதுக்கி கொடுக்க முன்வந்துள்ளது. புதிய கட்டடங்கள் அமைப்பது தொடர்பான அரசின் அறிவுறுத்தலுக்கு இணங்க இந்தக்காணி சம்பந்தமாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் சாதகமான அறிக்கையும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த 42 குடும்பங்களும் ஏற்கனவே பெற்றுக்கொண்ட வீடமைப்புத் திட்டத்திற்கான கடனைத் திருப்பிச் செலுத்தி வரும் நிலையில் புதிதாக வீடு அமைப்பதற்கான பொருளாதார வசதி சிறிதும் இல்லாமையினால் புதிய வீடமைப்புத் திட்டத்தை ஏற்படுத்துவதில் பல்வேறு சிக்கல்கள் உருவாகியுள்ளன.

இங்கு 42 குடும்பங்களுக்குப் புறம்பாக லயன் அறைகளில் வசிக்கும் மேலும் 42 குடும்பங்களையும் அப்புறப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியுள்ளது. அத்தோடு வணக்க ஸ்தலங்களையும் புதிதாக நிர்மாணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தமாக 80 இற்கும் அதிகமான குடும்பங்களுக்குப் புதிதாக வீடமைப்புத் திட்டத்தை ஏற்படுத்த வேண்டியுள்ளது. ஏற்கனவே வீட்டுக் கடனைப் பெற்ற 42 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மேலும் கடன் பெறமுடியாத நிலையில் குடிசைகளையாவது அமைத்துக்கொண்டு வாழ்வோம் என்ற நிலையில், இந்த விடயம் எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

அந்தத்தோட்டத்தில் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் 80 குடும்பங்களுக்குமாக நிரந்தர வீடுகள் அமைக்கும் திட்டத்தை தோட்ட நிர்வாகத்துடன் இணைந்து மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் ஆரம்ப ஏற்பாடாகவே தோட்ட நிர்வாகத்துக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது - என்று உள்ளது.

# மாணிக்கக்கல் அகழ்வு; மக்கள் சிரமம்

கொழும்பு, ஏப்.11

பொகவந்தலாவை மஹா வெலி காட்டில் சிலர் சட்ட விரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபடுவதனால் தாம் பல அசௌகரியங்களை எதிர் கொள்வதாக அந்தப்பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பிரதேசத்தில் சட்ட விரோத மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபடும்போது காசல்ரீ நீர்த்தேக்கத்தில் சேற்று நீர் நிரம்பி விடுவதால் மின்சார உற்பத்தி நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அதேவேளை காசல்ரீ மற்றும் மவுசாகலை நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறைந்து வருவதால் இந்த நீர்த்தேக்கங்களை அண்மித்த பகுதிகளிலும் அண்மைக்காலமாக சிலர் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த விடயம், குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் ஊடக அடக்குமுறைகளை சர்வதேச கவனத்துக்கு கொண்டுவருவோம்

## மங்கள எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.11

இலங்கையில் இடம்பெறும் ஊடக அடக்குமுறையை சர்வதேசத்தின் கவனத்திற்குக் கொண்டுவர ஐக்கிய தேசியக் கட்சி எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கும்.

இவ்வாறு தெரிவித்தார் ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் ஊடக அடக்குமுறை என்றுமில்லாதவாறு அதிகரித்துவிட்டது. மஹிந்தவின் ஆட்சியில்தான் சிறந்த ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க கொல்லப்பட்டார்.

அதேபோல் இன்னும் பல ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர். ஊடக நிறுவனங்களுக்கு குண்டுகள் வீசப்பட்டன.

இப்போது இதை விடவும் அதிகமான ஊடக அடக்குமுறை இடம்பெறுகின்றது. தன்னால் கட்டுப்படுத்த முடியாத சுயாதீன ஊடக நிறுவனங்களை அரசு தாக்குகின்றது.

அந்த அடிப்படையில்தான் லங்கா ஈ நியூஸ் இணையத்தளத்தின் ஆசிரியர் பெனாட் ரூபசிங்க கைதுசெய்யப்பட்டார். இந்த நிறுவனம் அரசை மாத்திரமின்றி ஐக்கிய தேசியக் கட்சியைக்கூடக் கடுமையாக விமர்சிக்கின்றது. விமர்சனங்களைத் தாங்கிக்கொள்ள முடியாததால் அரசு அடக்குமுறையில் இறங்குகிறது.

இவ்வாறான அடக்குமுறையில் இருந்து ஊடகங்களைப் பாதுகாக்க நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். அடக்குமுறைக்கு எதிராக நாம் உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் போராடுவோம். இதை சர்வதேசத்தின் கவனத்துக்கு கொண்டுவருவோம் - என்றார்.

# தமிழக அரசியல் களத்தில் இலங்கையை உதைபந்தாட்டமாக பயன்படுத்தாதீர்கள்

கொழும்பு, ஏப். 11

. தமிழக அரசியல் களத்தில் இலங்கையை உதைபந்தாட்டமாகப் பயன்படுத்த வேண்டாம். தமிழ் மக்களைப் பலிக்கடாக்களாக மாற்றவேண்டாம்.

இவ்வாறு தெரிவித்தார் மின்சக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற அவசரகாலச் சட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு-


இலங்கை மீதான அரசியல் சுற்றிவளைப்புகளை சர்வதேசம் இன்னும் கைவிடவில்லை. கடந்த 2009 ஆம் ஆண்டு நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் போனவைகளைத் தற்போது நிறைவேற்றுவதற்கு சிலர் முயற்சி செய்கின்றனர். அதன் ஓர் அங்கமாக ரொபர்ட் ஓ பிளேக், புலம்பெயர் தமிழர் அமைப்புக்களை நாடி அதன் ஊடாக இலங்கையில் தலையிட முயற்சிக்கிறார்.

இலங்கை அமெரிக்காவின் கைப்பொம்மை அல்ல. இராணுவத்தினரின் சமூகப் பணிகளை சிலர் குரோதப் பார்வையுடன் நோக்குகின்றார்கள். 1983, 1987ஆம் ஆண்டுகளில் இந்தநாட்டில் நிலவிய நிலைமைகளை மீண்டும் ஏற்படுத்துவதற்கு இடமளிக்க மாட்டோம். 2009ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்படவிருந்த நிலைமையே இன்று லிபியாவிலும், ஐவரி கோஸ்டிலும் ஏற்பட்டிருக்கின்றது. - என்றார்.

# மரங்களில் மின்சார வயர்கள் மின் தாக்கத்தால் மக்கள் அச்சம்

கண்டி நகரில் பிரசித்தி பெற்ற கண்டி வாவியைச் சுற்றி மின் கம்பங்களுக்குப் பதிலாக மரங்களைப் பயன்படுத்தி மின்சார வயர்களை பொருத்தியிருப்பதால் மக்கள் அச்சமடைந்துள்ளனர். இந்த மின் வயர்கள் நிலத்திலிருந்து கைகளில் பிடிக்கக்கூடிய உயரத்திலேயே காணப்படுகின்றன என்றும் விசனிக்கப்படுகின்றது. இதனால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

## பார்வையிடல்...



ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் தெற்கு அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணப் பணிகள் இடம்பெறுகின்றன. ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக் கான இயக்குநர் கலாநிதி ரிச்சர்ட்வோக்ஸ் இதனைப் பார்வையிடுகின்றார். (204)

# 2 ஆயிரம் பேக்கரிகளுக்கு மூடுவிழா; ஐயாயிரம் பேர் தொழிலின்றி நிர்க்கதி நிலை

கொழும்பு, ஏப்.11

கடந்த இரண்டுவருடங்களுக்குள் நாடளாவிய ரீதியில் சுமார் இரண்டாயிரம் பேக்கரிகள் மூடப்பட்டுள்ளன. இதனால் அவற்றில் பணிபுரிந்த ஐயாயிரம் தொழிலாளர்கள் தமது வேலைகளை இழந்து நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்று அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

கோதுமைமா மற்றும் இதர பொருள்களின் விலைகள் அதிகரித்து பேக்கரிகள் நஷ்டத்தில் இயங்க வேண்டிநிலை ஏற்பட்டதையடுத்தே அவை மூடப்பட்டன.

50 கிலோ எடைகொண்ட கோதுமை மா மூடையொன்றின் விலை 3,500 ரூபா வரை உயர்ந்துள்ளது. இதர பொருள்களின் விலைகளும் கணிசமான அளவு உயர்ந்துள்ளன.

நிர்ணயிக்கப்பட்ட விற்பனை விலைக்கு உற்பத்திகளை விற்க முடியாத காரணத்தாலேயே பேக்கரிகள் மூடப்பட்டன என சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்தநிலை நீடித்தால் மேலும் பல பேக்கரிகள் மூடப்படலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# யுத்த காலத்தில் வடக்கில் இழந்த காணிகளை உரிமையாளர் மீளப் பெறுவதற்கு நடவடிக்கை

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 11

யுத்தம் நிலவிய காலப் பகுதியில் வடக்கில் பறிபோன காணிகளை அவற்றின் உண்மையான உரிமையாளர்கள் மீளப் பெற்று அவற்றில் குடியமர்வதற்கும், பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கும் சட்டரீதியான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்படவுள்ளன.

இவ்வாறு நீதியமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இலங்கைக்கான ஜேர்மனியத் தூதுவர் ஜென்ஸ் புளொட்னர், நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமை அவரது அமைச்சில் சந்தித்து உரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் சமாதானம் நிலவும் சூழ்நிலையில் யுத்தப் பாதிப்புகளுக்கும், இழப்புகளுக்கும் உள்ளான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நீதித்துறையின் விஸ்தரிப்பு, பரவலாக்கம் என்பனவே இந்தச் சந்திப்பின்போது இடம்பெற்ற உரையாடலின் கருப்பொருளாக அமைந்தன. அதனோடு தொடர்பான மீள்குடியமர்வு, இடம்பெயர்ந்த மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் என்பனவும் கவனயீர்ப்பைப் பெற்றன.

அண்மையில் தாம் முல்லைத்தீவுக்கு பயணித்து நிலைமையை ஆராய்ந்தபோது ஒரு காட்டுப் பிரதேசத்தில் சுமார் இருபது மைல் தொலைவில் புதர்மண்டியிருந்த ஒரு முஸ்லிம் பாடசாலையை அண்மித்த இடத்தை பார்வையிட்டார். அங்கு மீள்குடியமர வந்திருந்த முஸ்லிம்கள் சிலரின் பரிதாபநிலையைக் கண்டு தாம் கவலையடைந்தார் என்றும் ஜேர்மனியத் தூதுவர் அமைச்சர் ஹக்கீமிடம் தெரிவித்தார்.

ஒரு குடும்பமாக வெளியேற்றப்பட்டவர்கள் இருபதாண்டு காலப்பகுதியில் நான்கு குடும்பங்களாகப் பெருகிய நிலையில் பிறந்து வளர்ந்த பூமிக்கு மீண்டும் வந்திருந்ததைக் காணக் கூடியதாக இருந்ததாகவும் தூதுவர் விவரித்தார்.

நிலத்துக்கு உரிமை கோருவதும், அதற்கான உரித்தை நிரூபிப்பதும் மிகவும் சிக்கலானவையாக இருப்பதால், அவற்றை உரிய முறையில் அணுகி பிரச்சினையைச் சுமுகமாகவும், நீதியாகவும் தீர்த்து வைப்பதற்கு தாம் காணி அமைச்சின் ஒத்துழைப்புடன் தேவையான நடவடிக்கைகளை மேற் கொள்ளவுள்ளார் என்றும் அமைச்சர் ஹக்கீம் கூறினார்.

அது தொடர்பில் சட்ட வரைவு மேற்கொள்ளப்பட்டது என்றும், விரைவில் அது நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நில அளவையாளர்களின் பற்றாக்குறைக் காணிகளை மீளப் பெறுவதில் அவற்றின் உண்மையான உரிமையாளர்களுக்கு சிக்கல்களையும், தாமதத்தையும் ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவித்த அமைச்சர் ஹக்கீம், காணிப் பதிவேடு, காணிக் கச்சேரிகள் ஊடாகவும் இந்த மீள்குடியமர்வோரின் நிலப் பிரச்சினைக்கு உரிய தீர்வுகளைக் காணமுடியும் எனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

தாமும் முல்லைத்தீவு போன்ற பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு விரைவில் செல்லவுள்ளார் என்று ஜேர்மனியத் தூதுவரிடம் கூறிய அமைச்சர் ஹக்கீம், வெளியேற்றப்பட்டவர்களின் காணிகளை ஏனையவர்களுக்கு விற்பதில் விடுதலைப் புலிகள் ஈடுபாடு காட்டினர் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

சமாதானப் பேச்சுக்கள் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் வெளிநாடுகளில் நடைபெற்ற காலப் பகுதியில் தாமும், புலிகளின் கிழக்குப் பிராந்தியத் தளபதி கருணா அம்மானும் 'குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுக்குச் சொந்தமாக இருந்து அவர்களிடமிருந்து அபகரிக்கப்பட்ட பயிர்ச்செய்கை நிலங்களை மீள முஸ்லிம்களிடமே கையளிப்பது தொடர்பாக நேருக்கு நேர் பேச்சுக்களில் ஈடுபட்டனர் எனவும் குறிப்பிட்டார்.

அதன் பயனாக சிவில் சமூகத்தினர் மத்தியில் நடந்த சில சுற்றுப் பேச்சுக்களின்போது குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டது. இருந்த போதிலும் பின்னர் சுமுகமாகப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதில் பின்னடைவு ஏற்பட்டது எனவும் அமைச்சர் ஹக்கீம் கூறினார்.

இப்பொழுது நிலைமைகள் மாறிவிட்டன என்றும் இவ்வாறான முக்கிய பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளைக் காண்பதற்கான காலம் கனிந்துள்ளது என்றும் நம்பிக்கை வெளியிட்டார் அமைச்சர் ஹக்கீம்.

வடக்கு, கிழக்கில் போதியளவு தமிழ் நீதிபதிகள் உள்ளனரா என ஜேர்மனியத் தூதுவர் வினவியபோது, அதற்குப் பதிலளித்த மு.கா.தலைவரும் நீதி அமைச்சருமான ஹக்கீம் தமிழ் பேசும் நீதிபதிகள் வடக்கு, கிழக்கில் மட்டுமல்ல, உயர்நீதிமன்றம் உட்பட எல்லாவித நீதிமன்றங்களிலும் பணியாற்றுகின்றனர்- என்றார். (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் ஓய்வுபெற்ற கணித ஆசான் தம்பிராசா சிவசுப்பிரமணியத்துக்கு கல்லூரியின் அதிபர் கு.விமலன் பொன்னாடை போர்த்திப் பாராட்டுப் பத்திரம் வழங்கிக் கௌரவிக்கின்றார். கல்லூரியின் பிரதி அதிபர் இ.ஆனந்த நடராசா, மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் எஸ். சிவநேஸ்வரன், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் வ.ஸ்ரீகாந்தன் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

# தமிழ் மொழியில் ஆங்கில சொற்பதங்கள் அதிகமாகக் கலக்கப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்,ஏப்.11

தமிழ்மொழியில் ஆங்கில சொற்பதங்கள் அதிகமாகக் கலக்கப்பட்டுள்ளதால் எது தமிழ்மொழி என்று தேடி அறிய வேண்டிய காலமாகவுள்ளது என தமிழ் ஆசிரிய ஆலோசகர் திருமதி கௌ.முகுந்தன் தெரிவித்தார்.

யாழ். வைத்தீஸ்வராக்கல்லூரியின் தமிழ்ப் பேரவை நடத்தும் முத்தமிழ் விழாவும், தமிழ் 'அலைகள்- 03 நூல்' வெளியீட்டு விழாவும் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர்களாகிய நாங்கள் பல்வேறு சமயங்களில் நெறி தவறிவிடுவதால் சிறந்த தமிழினைப் பேசுவதும் எழுதுவதும் அருகியே வருகிறது.

குழந்தைகளுக்குப் பெயர் சூட்டும்போது எண் சோதிடத்தை மட்டும்தான் பார்க்கின்றனர். சூட்டப்படும் பெயரின் அர்த்தம் என்ன, தமிழ் மொழியா என்றெல்லாம் யோசிப்பதில்லை.

தமிழர்கள் தம்மொழியோடு ஒழுக்கம், பண்பாடு, கலாசாரம் ஆகியவற்றையும் சேர்த்துப் பாதுகாக்கவேண்டும்.

தமிழ்மொழியினை மாணவர்களிடையே பரப்புவதற்கு பாடசாலைகளில் வருடத்தில் ஒருமுறையாவது இவ்வாறான தமிழ் நூல்களினை எழுதி வெளியிடுவது வரவேற்கத் தக்கதாகும்.

இந்த நிகழ்வில் தமிழ் பேரவையினால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்பட்டதோடு, கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ். பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட பட்டிமன்றத்தில் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி இரண்டாம் இடத்தினையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-311)

# ஒழுக்க விழுமியப் பண்புகளுடன் பெண்பிள்ளைகளை வளர்த்தெடுக்கவும்

சுன்னாகம்,ஏப்.11

அன்பு, பொறுமை, ஒழுக்க விழுமியப் பண்புகள் நிறைந்தவர்களாகப் பெண்பிள்ளைகளை வளர்த்தெடுக்க வேண்டியது அவசியமாகும் என வலிகாமம் கல்விவலயக் கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.நாகராஜா தெரிவித்தார்.

சுன்னாகம் பொதுநூலகத்தில் வலி. தெற்குப் பிரதேச சபையால் பிரதேச சபையின் பிரதம முகாமை உதவியாளர் ஒ.சுகுணராஜ தலைமையில் நடைபெற்ற மகளிர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்:

வரலாற்றுக் காலந்தொட்டுப் பெண்கள் முதன்மை ஸ்தானத்தை வகித்து வந்துள்ளனர். ஆயினும் பிற்காலத்தில் பெண்கள் தொடர்பான சமூக மதிப்பீடுகள் தளர்வடைந்தன. ஆண் சிந்தனை நோக்கில் பெண்கள் பாதிக்கப்பட்ட நிலை காணப்பட்டது.

இன்று உலகில் எல்லாத் துறைகளிலும் பெண்கள் தமக்குரிய இடத்தைத் தக்க வைத்து முன்னேறியுள்ளனர். பெண்கள் நேரிய சிந்தனையுடன் சிறந்த மனப்பாங்குடன் மற்றவர்களின் கருத்துக்களை மதித்து, வாழ்வின் சவால்களை வெல்லும் வகையில் செயலாற்ற வேண்டும்.

பெண்பிள்ளைகளை நல்ல முறையில் வளர்த்தெடுக்க வேண்டிய பெரும் பொறுப்பு பெற்றோருக்கு உள்ளது. சமூக, ஒழுக்க விழுமியங்களைப் பேணுபவர்களாக, அன்பு, பொறுமை முதலிய பண்புகளைக் கொண்டவர்களாக வளர்த்தெடுக்க வேண்டியது அவசியமாகும்.

தொலைபேசி மற்றும் இணையத்தளப் பாவனை காரணமாகப் பெண்பிள்ளைகள் தமது வாழ்க்கையைச் சீர்குலைக்கும் நிலைமை காணப்படுகிறது. பல பெண்பிள்ளைகள் நெறி பிறழ்ந்து கஷ்டமுறுவதையும் அவதானிக்க முடிகிறது.

எனவே தான் சமூகத்தின் சிறந்த பிரஜைகளாகப் பெண்பிள்ளைகளை வளர்த்தெடுப்பது அவசியமாகின்றது என்றார்.

ஆர்க் விசேட பாடசாலை அதிபர் அருட் சகோதரி வசந்தி பிரான்ஸிஸ், வலி. தெற்குப் பிரதேச சபை முகாமை உதவியாளர் திருமதி சிவசோதி தர்மராஜசிங்கம் ஆகியோரும் நிகழ்வில் உரையாற்றினர். பா.மகாலிங்கசிவத்தின் தலைமையிலான பட்டிமன்றமும் கலை நிகழ்ச்சிகளும் இந்த நிகழ்வில் இடம்பெற்றன. (எ-38)

# வடமாகாணம் எதிர்காலத்தில் முதல் இடங்களுக்குள் வரவேண்டும்

## விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர்

வலி.வடக்கு,ஏப்.11

வடக்கு, கிழக்கு இணைந்து இருந்த காலத்திலும் வடக்கு, கிழக்கு பிரிக்கப்பட்ட பின்னரும்கூட வடமாகாணம் பின் தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது என்று வட மாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை தெரிவித்தார்.

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற மெய்வன்மைப் போட்டிகள் பிரதேச செயலாளர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்:-

வடமாகாணம் எதிர்காலத்தில் முதல் ஐந்து இடங்களுக்குள் வரவேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் வடமாகாண ஆளுநர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

இந்தவகையில் இந்தாண்டு வெற்றிடமாக உள்ள பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பிரிவுகளில் விளையாட்டு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். இதேபோன்று மாவட்ட ரீதியாக விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

வடமாகாணத்தில் உள்ள 33 பிரதேச உதவி அரச அதிபர் பிரிவுகளில் இதுவரை யாழ். மாவட்டத்தில் 6 போட்டிகளும் கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு போட்டியுமாக ஏழு போட்டிகள் நிறைவடைந்த நிலையில் உடுவில் பிரதேச செயலகம் எட்டாவது போட்டியை நிறைவு செய்துள்ளது.

கடந்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக உதவி அரச அதிபர் பிரிவுகளில் மெய்வன்மைப் போட்டிகளை நிறைவு செய்து மாவட்ட மட்டப்போட்டிகளையும் விரைவில் நடத்தி முடிக்கும்படியும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

போட்டிகளை உரிய அலுவலர்கள் நடத்தி முடிப்பதன் மூலமே மாகாண போட்டிகளை நிறைவு செய்து தேசிய மட்டப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள வீர, வீராங்கனைகளுக்கு உரிய பயிற்சிகளை வழங்கக் கூடியதாக இருக்கும்.

40 கழகங்கள் பதிவு செய்துள்ளதாகக் கூறப்பட்ட போதிலும் நடைபெற்ற போட்டிகளில் மூன்று, நான்கு கழகங்கள் மட்டுமே கலந்துகொண்டுள்ளமையையும் காணக்கூடியதாக இருக்கின்றது- என்றார். (எ-86)

# நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம்,ஏப்.1

வண்ணை கோம்பயன் மணல் இந்து மயான பரிபாலன சபையின் புதிய நிர்வாக சபையினர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சபையின் தலைவர் வி.ஆர்.ரஞ்சன், செயலாளர் என்.ரி.எஸ். சுபநாதன், பொருளாளர் கே.தம்பிராஜா, உபதலைவர்கள் ஆர்.செல்வவடிவேல், எ.வரதராஜா, உபசெயலாளர் கே.ஜெயச்சந்திரன்.

அங்கத்துவ உறுப்பினர்களாக எஸ்.முருகநந்தன், எம்.பத்மநாதன், எஸ்.செல்வகுமார், வி.தயாபரன், எம்.கணபதிப்பிள்ளை, ஆர்.சந்திரபாலன், ஆர்.இராசலிங்கம், என்.பாலகுமார், ஆர்.முத்துலிங்கம், உள்ளக கணக்காய்வாளராக எஸ்.ஆர்.லோகநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ம-313)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.11

வலி.தெற்கு உடுவில் பிரதேச சங்கத்தின் பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன் தலைவர் த.கைலாசநாதன், உபதலைவர் என்.சண்முகவேல், செயலாளர் திருமதி ச.கல்யாணசுந்தரேசன், உபசெயலாளர் எஸ்.நடேசு, பொருளாளர் பொ.கமலநாதன், நிர்வாக உறுப்பினர்களாக எஸ்.ஜெயராஜா மகேந்திரதாசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ம-313)

* * *

கொடிகாமம்,ஏப்.11

கொடிகாமம் அஞ்சலக அபிவிருத்திச் சபையின் புதிய நிர்வாகசபை அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தலைவர்திருமதி யோ.வல்லிபுரநாதனம், உபதலைவர் சி.அருளம்பலம், செயலாளர் த.கந்தையா, உபசெயலாளர் க.பாலசிங்கம்.

நிர்வாக உத்தியோத்தர்களாக க.ஞானலிங்கம், செ.ஜெயசேகரம், அ.திருநாவுக்கரசு, வே.இரத்தினசிங்கம், இ.கந்தையா, ஜீ.ஞானேஸ்வரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ம-122)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.11

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக் கிளையின் பகிரங்க சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

தலைவர் எம்.எக்ஸ்.சர்வானந்தன், உபதலைவர் க.தேவராஜா, செயலாளர் ஐ.மர்க் கண்டன், உபசெயலாளர் திருமதி எம்.ஜே.எப்.சேவியர் பொருளாளர் மு.இராஜசிங்கம்.

நிர்வாக உறுப்பினர்களாக நீ.பீற்றர், த.சிவசுப்பிரமணியம் ஆகியோரும் உள்ளகக் கணக்காய்வாளராக இ.சிவயோகனும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். (ம-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
சோர்வின்றி உற்சாகம், தெம்புடன் செயற்படும் நாள். சிலர் உங்களை நம்பி முக்கிய வேலைகளை ஒப் படைக்கலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ளலாம். பெண்களால் சந்தோஷம் உண்டு. அதிக விலைக்கு வாங்க நினைத்த பொருள் ஒன்றை குறைந்த விலைக்கு வாங்குவீர்கள்.

**இடபம்:**
நிச்சயம் முடிந்து விடும் என நினைத்த காரியம் ஒன்றில் கடைசி நேரத்தில் தடை ஏற்படலாம். சிறிய பிரச்னை ஒன்றுக்காக குடும்ப உறுப்பினர்களுடன் பெரிய அள வில் சண்டை போடலாம். பொழுதுபோக்கு உல்லாச விடயங் களில் நாட்டம் செல்லும். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம். பிள்ளைகளுக்கு நல்ல யோசனை சொல்வீர்கள்.

**மிதுனம்:**
இளைய சகோதரர்கள் உங்களின் முயற்சிக்கு துணை யாக இருப்பர். உங்களுக்காகவோ, பிள்ளைகளுக் காகவோ ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்க லாம். புதியவர்கள் சிலரின் அறிமுகம் கிடைக்கும். உங்களின் தொழில் ரீதியான செயற்பாடுகளைப் பார்த்து மற்றவர்கள் வியப்படைவர்.

**கடகம்:**
எதிலும் மனஉறுதியுடன் செயல்படுவீர்கள். சுயநலத் தோடு நடந்து கொள்ளும் சிலரைப் பார்த்து எரிச்சல் அடையலாம். மனைவி, குழந்தைகள் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வெளியூர்களில் இருந்து வரும் சிலருக் காக காத்திருக்கலாம். எதிர்பார்த்தது போல, சில விடயங்கள் நடக்காமல் அதிருப்தி அடையலாம். மறதியால் அவதியுண்டு.

**சிங்கம்:**
பிள்ளைகள் வழியில் சுபச் செலவுகளை சந்திக்கலாம். ஒரு விடயம் பாதகமாக நடப்பது போல தோன்றினா லும், இறுதியில் சாதகமாக நடக்கலாம். உறவினர்கள் சிலரின் செயற்பாடுகளால் சந்தோஷம், மகிழ்ச்சி அடைவீர்கள். உல்லாசமாக பொழுதுபோக்குவதில் நாட்டம் செல் லும். உடல் நலம் இல்லாமல் இருக்கும் ஒருவரைப் பார்க்க நேரிடலாம்.

**கன்னி:**
நேற்று செய்யாமல் விட்ட சில வேலைகளால் இன்று அவதிப்படலாம். உங்களுக்கு வேண்டிய காரியம் ஒன்றை சாதிப்பதற்காக மற்றவர்களை நச்சரிப் பீர்கள். வீட்டை சீரமைப்பதில், அழகாக வைத்தி ருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். குடும்பப் பெரியவர்கள் உங்களுக்கு நல்ல ஆலோசனை சொல்லலாம்.

**துலாம்:**
வசதி, வாய்ப்புகள் அதிகரிக்கும். உறவுப் பெண்கள் வழியில் உதவி கிடைக்கலாம். சொத்துக்கள் வாங்க, விற்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. குழந்தைகளின் செயற்பாடுகளை நினைத்து பெருமை அடைவீர்கள். குடும்பத்தினருக்கு தெரியாமல் சில விடயங்களை மறைப்பீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும்.

**விருச்சிகம்:**
மதிப்பு, கௌரவத்திற்கு பாதிப்பு வரலாம். நீங்கள் பெரியளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம். சிலரின் செயற்பாடுகள் உங்களின் கோபத்தைத் தூண்டும் வகையில் அமையலாம். நன்றி மறந்த ஒருவரை நினைத்து வருத்தம் அடைவீர்கள். ஆசைப்பட்டு சில வேலைகளை செய்தும் அதில் திருப்தி இல்லாமல் போக லாம்.

**தனுசு:**
செலவுகளில் தாராளம் காட்டும் நாள். சொல் வாக்கைக் காப்பாற்ற துடிப்போடு செயற்படுவீர்கள். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். பிரியமான உறவினர்களின் சந்திப்பு நிகழும். நண்பர்களுடன் கேளிக்கை, கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். மற்ற வர்களின் செயற்பாடுகளை பார்த்து சில விடயங்களில் பாடம் கற்பீர்கள்.

**மகரம்:**
சில நாள்கள் கழித்து செய்யலாம் என நினைத்த வேலை ஒன்றை இன்றே செய்வீர்கள். எதிர்பாராமல் நண்பர் ஒருவரைச் சந்திக்கலாம். மனதிற்கு இனிய சம்பவங்கள் வீட்டில் நடக்கலாம். கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரலாம். வெளியூர்களில் இருந்து சிலர் உங்களிடம் நல்ல தகவல்களை சொல்லலாம். அனுகூலமான நாள்.

**கும்பம்:**
ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள். குடும்பத்தினருடன் கோயில்களுக்கு செல்லலாம். விருந்து, விசேடங்களால் மகிழ்ச்சி அடைவீர்கள். வழக்கமாக செய்யும் வேலை ஒன்றை இன்று செய்ய முடியாமல் போகலாம். சிறிய வேலை ஒன்றுக்கு பெரிய அளவில் அலட்டுவீர்கள்.

**மீனம்:**
வேண்டாத விவகாரங்களில் தலையிட்டு மன உளைச்சல்களுக்கு ஆள்படலாம். உறவினர்களுக்காக கணிசமான பணத்தைச் செலவு செய்யலாம். குடும்ப உறுப்பினர்கள் உங்களின் யோசனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கலாம். கனவுகளால் மனக்குழப்பங்கள் அதிகரிக்கலாம். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும்.

# சிறுவர்களுக்கு ஊடக அறிவு அவசியமான ஒன்று

(22.03.2011 அன்று) யாழ். கல்வி வலயத்தின் ஆசிரிய வள நிலையத்தில் தேசிய கல்வி நிறுவனத்தினால் நடத்தப்பட்ட தொடர்பாடல் ஊடகக் கல்வி செயலமர்வில் "சிறுவர்களுக்கான ஊடகத் தகவல் அறிவின் முக்கியத்துவம்" பற்றி ஆசிரிய பயிற்றுவிப்பாளரும் வளவாளராகவும் செயலாற்றிய யாழ்.கொக்குவில் இந்து ஆசிரியர் ப. இராஜேஸ்வரன் வழங்கிய கருத்துரையின் தொகுப்பு இங்கு இடம்பெறுகின்றது.

இன்று ஊடகங்களின் ஆதிக்கத்தினால் சிறுவர் களைப் பொறுத்தவரையில் 'மிரட்டுவது மீடியா' என்ற பத விளக்கம் அதீத கவனத்தைப் பெறுவதாக அமை கின்றது. ஊடகங்கள் சிறுவர்களை மையப்படுத்தியதான தகவல் அறிக்கையிடல் களை, தகவல் பரிமாற்றங்களை முதன்மைப் படுத்தியுள்ளன என்று ஊடக ஆய்வுகள் சுட்டிக்காட் டுகின்றன. சிறுவர் என்பவர் யார்? இவர்களின் உள்ளங்கள் எவ்வாறு இயங்குகின்றன? அவர் களின் இயல்புகள் எவை? சிறுவர் உள்ளங்களின் நடத்தை எவ்வாறு இயங்குகின்றது? ஊடகங்களை எவ்வாறு பயன்படுத்த முனைகின்றனர்? எவ்வாறு சிறுவர்கள் ஊடகங்களை விரும்புகின்றனர்? போன்ற ஏழு வினாக்களுக்கான முன் அனுபவங் களைக் கொண்டதாக ஊடக நிறுவனங்களின் கொள்கையாக்கம் மற்றும் உள்ளடக்கங்கள் வடிவமைக்கப்பட்டு முறையான திட்டமிடல் களூடாக முன்னெடுக்கப்படுகின்றன என்ற கருத்தியலும் முன்வைக்கப்படுகின்றன. இத்த கைய பின்னணியை அடிப்படை யாகக் கொண்டு சிறுவர்களுக்கான ஊடகத் தகவல் அறிவு பற்றிய சிந்தனையை அணுகமுடியும்.

பொதுவாகச் சிறுவர்கள் என்பவர்கள் சட்டப்படி பதினெட்டு வயதுக்கு உட்பட்டவர்கள் என்றும், சமூக ரீதியில் பால வயதினர் எனவும், பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் வழிகாட்டலின் கீழ் சீவிப்பவர்களாக இருப்பவர்களைக் குறிக்கின்றது. ஒருகாலத்தில் ''வளர்ந்த மனிதனின் சிறிய உருவமே பிள்ளை'' என்று கருதினர். நவீன உளவியலில் சிக்மன் பிராய்ட் என்பவர் ''பிள்ளை என்பது பிள்ளையே என்று அல்லாமல் வளர்ந்த மனிதனின் சிறிய உருவமல்ல'' என்ற புதிய கருத்தியலை முன்வைத்தார். பிஜாஜே என்ற உளவியலாளர், ''ஒவ்வொரு பருவத்திலும் பிள்ளை யின் உளவிருத்தியானது ஓர் ஒழுங்கு முறைப்படி நடை பெறுகிறது'' எனச் சுட்டிக்காட்டுகின்றார். இதில் சூழலின் தாக்கம் கணிசமான பங்கைப் பெறுவதாகக் குறிப்பிடுகின்றார். சூழல் காரணியில் ஊடகங்கள் பிள்ளைகளின் வயது நிலை, தன்மை களுக்கு ஏற்ப சாதக - பாதக தாக்கங்களை ஏற்படுத் துவதாகவும், மனித வாழ்க்கையின் ஆரம்பப் பருவ மான பிள்ளைப் பருவம் அதீத கவனத்தைப் பெறுவ தாகவும் சுட்டிக் காட்டுகின்றார். பிள்ளையின் மொழி நிலைகள், பழக்க வழக்கங்கள், எண்ணங்கள், செயற் படும் நடத்தைப் பாங்குகள், எண்ணவாக்கங்கள் போன்ற இயல்பு நிலைகளை உருவாக்குவனவாக ஊடகங்கள் அமைந்து விடுகின்றன.

### ஊடகங்களின் இலக்குப் பிரிவு

ஊடகங்கள் அதிகம் இலக்கு வைக்கும் பிரிவி னர்களாகப் பெண்கள், இளைஞர்கள், சிறுவர்கள் காணப்படுகின்றனர். இதில் சிறுவர்களைப் பொறுத்த மட்டில் இவர்கள் மென்மையான உள அமைப்பைக் கொண்டுள்ளனர். இவர்களை விரை வாக எழுச்சியுறச் செய்ய முடியும் என்பதாலும் சுதந்திர நுகர்வோனாகவும் தேர்வு செய்பவனாகவும் கொள்வனவு செய்பவனாக இல்லாமல் இருப் பதுவும் இலக்குக்கான பிரதான பின்னணிக் காரணிகளாக அமைகின்றன எனலாம். சிறுவர் களைப் பொறுத்தவரையில் இலத்திரனியல் ஊடகமான தொலைக்காட்சி, வானொலி என்ப உயர்மட்டப் பாவனையிலும் செய்தித்தாள் அதாவது அச்சு ஊடகம் குறைந்தளவு பயன்பாட்டு நிலையில் இருப்பதாக ஊடக ஆய்வு அறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன.


### நவீன ஊடகங்களின் ஆதிக்கம்

சமகாலத்தில் மரபு சார்ந்த தொடர்பாடல் மற்றும் ஊடகப் பயன்பாடுகள் அருகி, அதனை நவீன ஊட கங்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. முன்னைய காலங்களில் குழந்தைக்குச் சோறு ஊட்டுவதற்குப் பல கதைகள், பாட்டுக்கள் கூறப்படுவது வழக்கம். அந்த இடத்தை இன்று தொலைக்காட்சிப் பெட்டி தன தாக்கிக் கொண்டுள்ளது. தொலைபேசி இணையத்தள பயன் பாடுகள், நவீன ஊடகம் என்ற ஒரு நிலையில் வளர்ச்சி அடைந்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

மகிழ்ச்சிகரமாக இருத்தல், திகிலூட்டலைப் பெறுதல், பொழுதுபோக்கு , தொடர்பு கொள்ளல், தகவல் பரிமாறுதல், தகவலை அறிதல், அடையாளப்படுத்துதல், மேற்பார்வை செய்தல் போன்ற தேவைகளுக்காகப் பொதுவாக ஊடகங்கள் பயன்படுத்துகின்றன. தகவல் என்பது தரவுகளைச் சேகரித்து தணிக்கை செய்து, வியாக்கியானம் செய்து பொதுமக்களை அடையச் செய்யும் செயன்முறையாகும். Stafford Beer என்பவர் ''எங்களை மாற்றமடையச் செய்தல் தகவல்'' எனக் குறிப்பிடுகின்றார். மனித உள்ளத்தை எழுச்சியடையச் செய்து, அறிவைப் பெருக்க உதவுதல் எனவும் தரவு களை தணிக்கை செய்து தரமுள்ள தகவல்களாக வாசகர்களை ஏற்கச் செய்யக் கூடிய கருத்தாழமுள்ளதாக அமைதல் என்றும், சூழ்நிலைக்கு ஏற்ப சரியான தீர்மானம் மேற்கொள்ள உதவுதல் எனவும் பொருள் படுகின்றது.


### ஊடகத் தகவல் அறிவு

ஜனநாயக சமூகம் ஒன்றில் ஊடகம் செய்யும் பணி களை உணர்ந்து கொள்ளல், மதிப்பிடுதல், உள்ளடக் கத்தின் குறை, நிறைகளைச் சீர்த்தூக்கிப் பார்த்தல், என்றும் ஊடகங்களுடன் தொடர்பை ஏற்படுத்தி அவை தெரிவிக்கும் கருத்துகளை விளங்கி, மதிப்பீடு செய்து பல்வேறு சந்தர்ப்பங்களில் கருத்துப் பரிமாற்றம் செய்யும் ஆற்றல், என்றும் தகவல் அறிய வழி தேடுதல், மக்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்த உள்ள உரிமையை உணரவைத்தல், தகவல் அறியும் வழிமுறைகளைப் பாதுகாத்தல், மக்களைப் பங்கு கொள்ளவும் அவர்களின் குரல் ஒலிக்கச் செய்தல், ஊடகம் வழங்கும் தகவல்களை நுணுக்கமாக ஆராய்ந்து சரியாக எடைபோடுதல், ஊடக உள்ளடக்கங்களைக் கிரகிக்கும் தன்மையை அதிகரிக்கச் செய்தல் என்று யுனெஸ்கோ சுட்டிக்காட்டுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






ஊடகத் தகவல் அறிவு என்னும் போது ஊடகங்கள், ஊடகத் தகவல் மையங்கள் ஆகியவற்றுடன் நெருங்கிப் பழகும் ஆற்றலை அக்கறைப்படுத்துதல், அவற்றின் உள்ளடக்கங்களைப் புரிதல், சுருக்கத்தை ஏற்படுத்தல், சுயவெளிப்பாடு செய்தல், ஊடக உள்ளடக்கங்களைக் கலவை செய்து கருத்துள்ள புதிய பரிமாணம் கொடுக்கும் திறன் தகவு நிலைகளை கட்டியெழுப்புதலாக அமைகின்றது.

### ஊடகங்களின் தாக்கங்கள்

சமூகத்தில் ஊடகங்களின் தாக்கங்கள் என்பது இரு நிலைகளில் உணரப்படக்கூடியதாக உள்ளன. ஒன்று சாதகமான நிலைமை. இன்னொன்று பாதிப்பான அம்சங்களாக அமைகின்றன. சிறுவர்களைப் பொறுத்த மட்டில் தொலைக்காட்சிப் பயன்பாட்டினால் அதிக விளைவுகள் எதிரான இயல்புகளை உருவாக்கிவிடுகின்றன. சிறுவர்களது நாளாந்த நேர அட்டவணையைத் தீர்மானிக்கும் சக்தியாகவும் நடத்தைகள், எண்ணங்கள், மொழிநடை, உணர்ச்சி வெளிப்பாடுகளை மாற்றங்களுக்கு உட்படுத்துபவையாகவும் அமைந்து விடுகின்றன. சிறுவர்களிடையே வன்முறை வெளிப்பாடுகள், வன்மொழிப் பிரயோகங்கள், தவறான நுகர்வுகள், பழக்க வழக்கங்களுக்கு இசைவாதல் நிலைமைகளைத் தோற்றுவிப்பதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

சிறுவர்களின் வயதுக்குப் பொருத்தமில்லாத நடத்தை வெளிப்பாடுகள், இடைத்தொடர்பை உருவாக்குதல், குறிப்பிட்ட பொருள் சேவை தொடர்பான எண்ணக்கருவை உருவாக்கல், சமூக தொடர்புகளை ஏற்படுத்த வழிகாட்டுதல் அல்லது தூண்டலை வழங்குதல் மற்றும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான போலியான காரணிகளைச் சிறுவர் மத்தியில் உருவாக்குதல், போலச் செய்தல், பயனுள்ள பொழுதுபோக்கு நாட்டமின்மை உருவாகுதல், தவறான உணர்வுகளுக்கான வடிகாலாக ஊடகங்களைப் பயன்படுத்த முனைதல், சிறுவர்களின் சுதந்திரமான சிந்தனை வளர்ச்சிக்குத் தடையாகவும் சுய இயங்கு நிலைக்கான தவறான வழிகாட்டியாகவும் அமைந்துவிடுகின்றன.

அத்துடன் சிறுவர்களுக்கு உடல், உள ரீதியான பாதிப்புக்களையும் ஏற்படுத்துகின்றன. உடல் பருமன் அதிகரித்தல், சுறுசுறுப்பின்மை போன்ற உடல் பாதிப்புக்களை ஏற்படுத்துவதாக வைத்திய அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

### ஊடகத் தகவல் அறிவுக்கான அணுகுமுறைகள்

ஊடக அறிக்கையிடல்களைப் பெறுபவர்களைப் பெறுநர் என்று குறிப்பிடுகின்றது. இவர்களில் மூன்று வகையான பிரிவினர் உள்ளனர் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது. ஊடகம் தொடர்பான விமர்சன ரீதியிலான அறிவு, விளக்கம், மனப்பாங்கு, தேர்ச்சி அற்ற நிலையுடனும் ஊடகம் முன்வைக்கும் விடயங்களை முழுமையாக முன்வைப்பவர் செயற்படாத பெறுநர் எனவும் ஊடகம் தொடர்பான திறன், திறனாய்வு மிக்கவர்கள் செயற்படு பெறுநர் எனவும் ஊடக உள்ளடக்கங்களைப் பகுப்பாய்வு செய்யும் ஆற்றல் இருந்தும் அதனைப் பிரயோகிக்காதவர்கள் மந்தபெறுநர் எனவும் அழைக்கப்படுகின்றனர்.

சிறுவர்களுக்கான ஊடகத் தகவல் அறிவு என்பது மேற்காட்டப்பட்ட பெறுநர்களில் செயற்படு பெறுநர்களாக மாற்றுவதற்கான தூண்டல்களை, அதாவது மாற்றங்களை ஏற்படுத்துவதாக அமைய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஊடகங்கள் ஏற் படுத்தும் தாக்கங்களை இழிவளவாக்குவதற் கும் விழிப்புணர்வு மிக்க பெறுநர்களாக, அதாவது செயற்படு பெறுநர்களாக சிறுவர்களை எதிர்கால நோக்கில் தேர்ச்சி பெற செய்யும் பயன்படுதல் அடிப்படையான அம்சமாகின்றன.

சிறுவர்களிடம் ஊடகக் கல்விச் செயற்பாடுகள் ஊடாக ஊடக உள்ளடக்கங்களை விசாரணை செய்தல், பகுப்பாய்வு செய்தல் போன்ற பயிற்சிகளை வழங்குதல், முன் வைக்கும் விடயங்களைச் சரியாக விளங்கும் ஆற்றல், ஊடகம் மறைக்கும் விடயங்களை ஊகித்து அறியும் ஆற்றல், ஊடக நிகழ்ச்சி நிரலை இனங்கண்டு கொள்ளல், ஊடக உத்திகள், உபாயங்களை நுணுகி ஆராய்தல், ஊடகங்களில் வெளிவரும் விடயங்களைப் பயனுள்ள வகையில் தெரிதல், அதனைப் பயனுள்ளதாக்குதல், ஊடக அபிப்பிரா யங்களைக் கட்டியெழுப்புதல், முன் வைத்தல், ஊடக நிறுவனக் கட்டமைப்பு, பணித் துறையை விளங்குதல், உள்ளடக்கங்கள் தொடர்பான துலக்கங்களை வெளிப்படுத்துதல், சமூக அபிவிருத்திக் கான ஆக்க ரீதியிலான ஊடகத் திறனை ஆய்வு செய்யும் உணர் திறன்மிக்க ஊடக கலாசார எழுச்சிகளுக்கும் உந்துதல்களுக்கும் சமூகப் பிரதிநிதித்துவ ஊட்க அறிவு நிலைகள் கட்டி எழுப்பப்படல் என்பன அடிப்படையாகின்றன.

ஊடகங்களை கற்றலுக்காகப் பயன்படுத்தும் வழி முறைகளை இனங்கண்டு கொள்ளல். இன்று Education + Entertaiment = Edutainment என்ற பதம் ஊடகங்களையும் பொழுதுபோக்கையும் இணைத்து பொழுதுபோக்கு நிகழ்ச்சி உள்ளடக்கங்கள் ஊடாக அறிவூட்டல் என்ற புதிய சிந்தனை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. ஊடக வழி மூலம் வாசிக்கக் கற்றல், புதிய சொற்களை அறிதல், வாக்கிய முறைகள், கருத்தை உருவாக்கல், தகவல்களை அறிவோடு சேர்த்தல், செவிமடுத்தல் திறன், பேச்சுப்பாணி, ஆக்கத்திறன், அழ கியல் எண்ணம், இரசனை, காட்சி உணர்வு, காட்சியும் அறிவும் இணைதல், கட்புல செவிப் புலவிருத்தி, ஐம்புலன் வழி மூலம் கற்றல் என ஊடகங்கள் கற்றல் செயல்முறையில் பங்களிப்புப் பெறுவதை உணர்தல், அதனைப் பொருத்தமாகக் கையாளப் பழகுதல் ஊடகத் தகவல் அறிவு நிலையூடாகவே சாத்தியமாகின்றன.

### ஊடகங்களின் கடமையும் பொறுப்பும்

பொதுவாக ஊடகங்களின் கடமையும் பொறுப்புக்களும் என்பது மிகப் பரந்துபட்ட இயல்புகளை உள்ளடக்கியது எனலாம். சமூகப் பிரதிநிதித்துவம் ஊடகக் கடமையையும் பொறுப்பையும் முதன்மைப்படுத்து கின்றன. சமூகத்தில் நீதி, நியாயம் நிலைக்கப் பேசுதல் தகவலை வழங்குதல், ஆள்பவர் ஆளப்படுபவரிடையே சீரான தகவல் அளித்தல், ஜனநாயக வாழ்க்கைக்கு உதவுதல், கருத்தைப் பரவலாக்குதல், பிரச்சினை தீர்க்க உதவுதல், சமூகப் பொறுப்பை உணரச் செய்தல், பண்பாட்டு கலாசார அம்சங்களை வெளிக்கொணர்தல், விழிப்புணர்வூட்டல் என்று இதன் நிலைகள் விரிவடைகின்றன.

(26 ஆம் பக்கம் பார்க்க)

# வானிலை தெரிவிக்கும் விலங்குகள்



அஷ்காபாத் என்னும் நகரில் புவியியல் விஞ்ஞானி ஒருவர் நாய்க்குட்டி ஒன்றை வளர்த்து வந்தார். ஒரு நாள் முன்னிரவு மேசைக்கு முன்னால் உட்கார்ந்து அந்த விஞ்ஞானி ஏதோ கணக்குப் போட்டுக் கொண்டிருந்தார்.

அவருக்கு ஒரு சின்னப் பெண் குழந்தை இருந்தது. அது தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தது. அந்த நாய்க்குட்டியும் ஒரு மூலையில் தூங்கிக் கொண்டிருந்தது. ஒரே அமைதி. அந்த நேரத்தில் திடீரென நாய்க்குட்டி துள்ளி எழுந்து குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஓடியது.

அதைப்பார்த்த விஞ்ஞானி அந்த நாய்க்கு வெறி பிடித்துவிட்டது என்று முடிவுசெய்து தன்னுடைய கைத்துப்பாக்கியை எடுத்துக் கொண்டு ஓடி வந்து நாய்க்குட்டி எங்கே என்று தேடிக்கொண்டிருக்கையில் வீடு இடிந்து விழுகிறது. காரணம் பூமி அதிர்ச்சி!

பூமி அதிர்ச்சி உண்டாகப் போகிறது என்பது அந்த நாய்க்குட்டிக்கு முன்னரே தெரிந்துவிட்டது. அதுதான் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வெளியே ஓடி வந்தது. அதன் மூலம் அந்தக் குடும்பத்தையே காப்பாற்றிவிட்டது.

இந்தச் சம்பவம் நடப்பதற்கு மூன்று நாள்களுக்கு முன்னரே சில பிராணிகளுக்கும் இப்படி நடக்கப்போவது தெரிந்திருக்கிறது. அந்த நகரத்திலுள்ள பாம்பு, பல்லி எல்லாம் தாம் தங்கியிருந்த வளையை விட்டு வெளியே ஓடி வந்து விட்டன. அதேபோல் கட்டடங்களில் இருந்த புறாக்களும் பறந்து போய் விட்டன.

யுகோஸ்லேவியாவில் ஒரு நகரத்தில் மிருகக்காட்சிச் சாலையில் இருந்த கழுதை, புலி, யானை பறவை எல்லாம் கத்த ஆரம்பித்தன. நீர் யானை அதற்கென்று போடப்பட்டிருந்த தடுப்பையும் தாண்டிக் குதித்து வெளியே வந்துவிட்டது. மறுநாள்தான் எல்லோருக்கும் விசயம் புரிந்தது. அடுத்த நாள் காலையிலேயே அங்கே பூமியதிர்ச்சி உண்டாகிவிட்டது.

இதையெல்லாம் அவை எப்படி முன் கூட்டியே புரிந்து கொள்கின்றன? அதுதான் படைப்பின் இரகசியம். அதைக் கண்டு பிடிப்பதற்குத்தான் மனிதன் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறான். விஞ்ஞானிகளின் ஆராய்ச்சியெல்லாம் ஒருபக்கம் இருக்கட்டும். வீட்டுக்குள்ளேயே சில ஆராய்ச்சிகளை செய்து பாருங்கள். சில விடயங்களை அவதானித்துப் புரிந்து கொள்ளுங்கள்.

பூனைக் குட்டியைக் கவனித்துப் பாருங்கள். அது தன்னுடைய பாதத்தினால் சுவரில் கீறிக்கொண்டிருக்கும். அப்படிக் கீறினால் கண்டிப்பாக மழை வரும். சிட்டுக் குருவி புழுதியிலே விழுந்து புரளும், சிறகுகளைப் படபட என்று அடிக்கும். அப்படியென்றாலும் மழை வரப்போகிறது என்றுதான் அர்த்தம். சில சமயம் பூனைக்குட்டி மல்லாந்து படுத்துக் கொண்டு பாதத்தை மேலே தூக்கும். அப்படியும் இப்படியும் புரளும். இப்படி செய்தால் அன்றைக்கு மழை இருக்காது. வாத்து சில சமயம் தன்னுடைய அலகை இறக்கைக்குள் புதைத்து வைத்திருக்கும். அப்படிச் செய்தால் குளிர்காலம் வரப்போகிறது என்று அர்த்தம்.

பறவைகள், பிராணிகள் ஆகியவற்றின் நடவடிக்கைகளைப் பார்த்துவிட்டு அவற்றை அடிப்படையாக வைத்துத்தான் காலநிலையை அறிகின்ற கருவிகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ஒன்றுமட்டும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இயற்கையின் சீற்றம் என்று சொல்கின்றோம். ஆனால் இயற்கை ஏன் கோபப்படுகிறது? இயற்கையை நாம் அனுசரித்துப் போவதில்லை, அதனால் தான்.

காடுகளை அழிக்கக் கூடாது. விலங்குகளைக் கொல்லக் கூடாது. இயற்கை ஏற்படுத்தி வைத்திருக்கும் சமனிலையைக் கெடுக்கக் கூடாது. அதைப் புரிந்து கொண்டு வாழ்ந்தோம் என்றால் பூமியும் நடுங்காது; நாமும் நடுங்க வேண்டிய தேவையில்லை.

ஒருத்தர் மதுக் கடைக்குப் போய் நிறையக் குடித்து விட்டார். அதற்குப் பின்னர் ''இது மிகவும் அற்புதமான மதுபானம் போல இருக்கிறது. உள்ளே போன உடனே இந்தப் பூமியே நடுங்கிற மாதிரி இருக்கிறது எனக்கு'' என்றார்.

இதற்குக் கடைக்காரர் ''நீங்கள் சாப்பிட்டது வெறுந் தண்ணீர்தான் இப்போது ஏற்பட்டிருப்பது பூமி அதிர்ச்சி'' என்றார்.

இந்தக் காலத்தில் இயற்கையில் ஏற்படுகின்ற சிறுமாற்றங்களைக் கூட அலட்சியப்படுத்தக் கூடாது. அவற்றின் ஒவ்வொரு மாற்றத்துக்கும் விளைவு உண்டு என்பதை உணர்ந்து செயற்படுதல் வேண்டும்.

கோ. சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
11 ஏப்ரல் 2011 திங்கட்கிழமை

# அனலைதீவில் விவசாய அபிவிருத்திக்கு மானிய அடிப்படையிலாவது உதவி கிட்டுமா?

நல்ல தண்ணீரும் விவசாயத்துக்கு உகந்த மண் வளமும் கொண்ட பூமி அனலைதீவு.இங்குள்ள மக்களில் கூடுதலானவர்கள் விவசாயிகள். அதற்கு அடுத்துத்தான் மீன்பிடி. ஒருகாலத்தில் அங்கு காணப்படும் அனைத்து வயல் நிலங்களும், தோட்ட நிலங்களும் நெல், புகையிலை, பச்சைமிளகாய், வெங்காயம், காய்கறிப்பயிர்கள் எனப் பச்சைப் பசேல் என்று காட்சியளித்த மண். இன்று, அன்றுபோல் அழகான பசுமை நிறைந்த அனலைதீவைக் காண முடியாது.

அனேகர் புலம்பெயர்ந்துள்ளது மட்டுமன்றி இங்குள்ள விவசாயிகளும் முன்னர்போல் விவசாயத்தில் பெரிய அளவில் ஈடுபடுவதாக இல்லை. ஆர்வம் இருக்கிறது உதவிகள்தான் இல்லை. தற்சமயம் உள்ளூரில் அனுபவம் மிக்க சிறுவயது முதல்கொண்டு இன்று 68வயதுவரை விவசாயத்துடன் மிகுந்த ஈடுபாடு கொண்ட நடராசா, விவசாய சம்மேள னத்தின் முன்னைய தலைவர், செயலாளராகவும் இன்று வரை உறுப்பினராகவும் உள்ள விவசாயி. இப்பொழுது அனலைதீவு வெறும் தரிசு நிலமாக மாறிக் கொண்டிருப்பதாக வருத்தம் கூறுகிறார்.

வழமையாக இங்கு சுமார் 200 ஏக்கர் வரையான நெல் செய்கைக்கான நிலங்கள் தரிசு நிலங்களாகிக் கிடக்கின்றன. விவசாயிகளுக்குத் தமது காணிகளைப் பயன்படுத்தி விவசாயக் கடமைகளை உரியமுறையில் செய்வதற்குப் போதிய நிதிவசதி கிடையாது. செலவீனங்கள் பலமடங்கு அதிகரித்துள்ளன. இம்முறை நெல் செய்கையை அதிகரிக்கும் எண்ணத்துடன் முள் கம்பிகள் வழங்கப்பட்டன. எனினும் விவசாயிகளால்

**லக்ஸ்மன்**

தொடர்ந்தும் வேலைகளைச் செய்ய முடியாமல் போய் விட்டது எனக்கூறினார்.

வயல் நிலங்கள் முட்கம்பிகளால் நன்றாக எல்லையிடப்பட்டிருந்தன. உழவு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தக் கூடியதாக உழவு இயந்திர வசதிகள் இல்லை.



இருக்கும் இயந்திரத்துக்கும் கூலியாக அதிக தொகை கேட்கப்படுகின்றது. அதற்கு விவசாயிகளிடம் வசதியில்லை. சம்மேளனத்துக்கென உழவு இயந்திரம், லான் மாஸ்டர், மருந்து தெளிக்கும் கருவிகள் வழங்கப்புட வேண்டும். தற்போது இருந்த சில கருவிகள் முழுமையாகப் பழுதடைந்து விட்டன எனவும் தெரிவிக்கப்பட்டது. கம நல சேவைகள் திணைக் களம் விதை நெல் வழங்கியது. உழவுக்கான கருவிகள் இன்மையால் செய்கை பண்ண முடியாது போயுள்ளது.

அனலைதீவு வடலூரில் உள்ள மிளகாய் தோட்டம் ஒன்று



குளங்கள் புனரமைக்கப்படவேண்டும். தற்போது வேலன்குளம்,ஆச்சிகோயில்குளம் என்பன கடந்த வருடம் புனரமைக்கப்பட்டுள்ளன. நயினகுளம், தாமரைக் குளம், வடலூர்க்குளம் இவைகள் முழுமையாகப் புனரமைக் கப்படவேண்டும். இதனால் நீர்வளம் பாதுகாக்கப் படும்.இப்போது தீவின் அனைத்துப் பகுதிகளிலும் விவசாயத்தை முன்னெடுக்கப் போதிய நீரில்லை. நூற்றுக்குத் தொண்ணூறு வீதமான மக்கள் விவசாயத்தை நம்பி இருப்பவர்கள். சூடடிக்க என்றாலும் ஒரு படங்குக்கு ஆயிரம் ரூபா செலவாகும் என்கிறார்கள்.

தற்சமயம் மிகவும் குறைந்த அளவிலேயே நெல் செய்கை இடம்பெற்றுள்ளது. விவசாயிகளுக்கு வேண்டிய உதவிகளை வழங்கும் பட்சத்தில் கூடுதலான உற்பத்தி இடம்பெறும். கடந்தகாலங்களில் இங்கு உற்பத்தி செய்யப்பட்ட நெல்லே மக்களின் உணவுத் தேவைக்கு உதவியது. வெளியிடங்களில் இருந்து அரிசியை எடுத்து வரவேண்டிய அவசியம் அனலை தீவுக்கு இருக்கவில்லை. அந்த நிலை மீண்டும் ஏற்பட வேண்டும் என்பது விவசாயிகளின் உள்ளக் கிடக்கை.

நெல் தவிர்ந்த மிளகாய், வெங்காயம், மரக்கறி வகைகள் உற்பத்தியும் இடம்பெறுகின்றன. மிளகாய் உற்பத்தி மிகவும் அபரிமிதமாக உள்ளது. தினமும் இங்கிருந்து காலை, மாலை வேளைகளில் சராசரியாக ஆயிரம் கிலோவரை வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது. வெங்காயச் செய்கையும் திருப்தியளிக்கிறது. தைமாதம் முதல் வைகாசிவரை அதிகரித்த உற்பத்தி இவைகளாகும். புளியந் தீவுப் பகுதியில் விவசாய நடவடிக்கைகள் இடம்பெறுவதில்லை. எனினும் இம்முறை 5 ஆயிரம் அந்தர் வெங்காயம் அங்கு பயிரிடப்பட்டுள்ளது. மழைநீர் தேங்கி நிற்காததனால் பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் இல்லை.

காய்கறிச் செய்கைகள் பெரிய அளவில் உண்டு. மாரிகாலத்தில் இந்தப் பயிர்களுக்கான உற்பத்தியில் விவசாயிகள் கவனம் செலுத்துகின்றனர். தைமாதம் தொடக்கம் பங்குனி,சித்திரை வரை கணிசமான அளவு உற்பத்தி அதிகரித்துக் காணப்படுவதால் அனலைதீவின் தேவைகள் பூர்த்தியாக்கப்பட்டு வெளியிடங்களுக்கும் அனுப்பிவைக்கப்படுகின்றது. யாழ்ப்பாணம், திருநெல்வேலிச் சந்தைகளில் அனலைதீவுக் காய்கறி வகைகளுக்கு நல்ல மவுசு உண்டு. பச்சை மிளகாய் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தம்புல்ளைக்கு இப்போது கொண்டு செல்லப்படுகின்றது.

இவை தவிர, பணப்பயிராகப் புகையிலைக் கன்றுகள் செழித்து வளர்ந்த பகுதிஅது. அனலைதீவுப் புகையிலைக்குத் தென்பகுதியிலும் குறிப்பாக மலைநாட்டி லும் நிறையவே செல்வாக்கிருந்த காலம் இருந்தது. அதனால் அக்காலங்களில் புகையிலை உற்பத்தியில் பெரும் நாட்டம் கொண்டிருந்த விவசாயிகள் இன்று சோர்வடைந்து விட்டனர். புகைத்தல் தடை அவர்களின் பொருளாதார வளத்தின் தடையாகி விட்டது. இதனால் புகையிலை உற்பத்தி பெருமளவு வீழ்ச்சி கண்டுள்ளது.

விவசாய நடவடிக்கைகளுக்காக இலங்கை வங்கி அனலைதீவுக்கு சுமார் ரூபா 50 லட்சம்வரை உதவியாக வழங்கியுள்ளதாகவும் தெரிகின்றது.

அனலைதீவுக்குத் தேவையான அரிசி மற்றும் காய்கறி வகைகளை தாமே உற்பத்தி செய்து தீவின் தேவையைப் பூர்த்தி செய்யவேண்டும் என்பது அவர்களின் கனவாக இருந்தாலும் உரிய வசதிகள், மானிய அடிப்படையிலான உதவிகள் கிடைக்காத பட்சத்தில் அது சாத்தியப்படுமா? என்பது அவர்களின் ஏக்கமாகும். ✱

## மரக்கறித் தோட்டங்களை அமைக்க தொழில்நுட்பப் பயிற்சி நெறிகள்

மரக்கறித் தோட்டங்களை அமைத்தல் தொடர்பான தொழில்நுட்ப பயிற்சி நெறியானது மீண்டும் எதிர்வரும் 18ஆம், 20 ஆம் திகதிகளில் திருநெல்வேலி விவசாயப் பயிற்சி நிலையத்தில் முற்பகல் 9 மணிமுதல் நடைபெறவுள்ளது.

பௌதீக வளங்கள், கால நிலை என்பவற்றுக்கமைய தோட்டத்தைத் திட்டமிடல், கூட்டெரு தயாரித்தல், நாற்றுக்களின் உற்பத்தி மற்றும் நடுகையும் பராமரிப்பும் பயிர்ப் பாதுகாப்பு எனப் பல்வேறு விடயங்கள் பற்றியதான விளக்கங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சி வகுப்பில் அரச அலுவலகத்தின் தோட்டத்தை நடைமுறைப் படுத்துவற்கு பொறுப்பான உத்தியோகத்தரும் அதனைச் செயற்படுத்துகின்றகள ஊழியர்களையும் தனியார் வீட்டுத் தோட்ட உரிமையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் 0212222175 என்ற தொலைபேசி ஊடாகவோ; "மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம், பலாலிவீதி, திருநெல்வேலி" எனும் முகவரியுடனோ தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-9)

## குறைந்த நீருடன் பழ மரங்களை வளர்த்தல்

**மு.ரகுபாலன்**
**(பசுமை ஆர்வலர்)**

எங்கள் ஈழ பூமி வெப்பம் கூடிய காலநிலை, தண்ணீர் தட்டுப்பாட்டுடன் உள்ளது. நிலத்தடி நீரை நம்பியே பெரும்பாலும் விவசாயம் செய்யப்படுகின்றது.

குறைந்த நீருடன் எப்படி பழமரக் கன்றுகளை வளர்க்கலாம்.

பழ மரக்கன்றுகளைத் தோப்பாக, தனியாக நடும் பொழுது அருகில் சற்று ஆழத்துக்கு கிடங்கை வெட்டி அதற்குள் பொலித்தீன் பையைப் போட்டு பொலித்தீனுக்குள் உமியை நிறைய போட வேண்டும். உமிபோட்ட பைக்குள் தாவரத்தின் வேர்ப்பகுதி ஒன்றை விடுதல் வேண்டும்.

பின்னர் நீரை உமிபோட்ட பொலித்தீன் பைக்குள் ஊற்ற வேண்டும். நீரை ஆவியாகாது குளிர்மையாக உமிவைத்துக்கொள்ளும்.

உமிபோட்ட பைக்குள் நீரை ஊற்றினால் நீர்த் தன்மையை நெடுநாளைக்கு உமி உலராமல் வைத்திருக்கும்.

உமி போட்ட பைக்குள் விட்ட வேர் மூலம் தாவரம் தனக்குத் தேவையான நீரைப் பெற்றுக் கொள்ளும்.

தேவையில்லாமல் நீரை ஊற்றாமல் இப்படியான திட்டம் மூலம் பழமரங்களைக் குறைந்த நீருடன் வளர்த்து நல்ல பலனைப் பெறலாம்.

குறைந்த நீருடன் கூடிய பலனைப் பெற இந்தத் திட்டம் உதவும். நன்னீரையும் சேமிக்கலாம். வறண்ட காலநிலையுடைய எங்கள் விவசாயிகளுக்கு இது பொருண்மிய ரீதியாக உதவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டு வாழ்க்கை நெறியைப் பின்பற்ற வரம் தந்த அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன்

ஆலய வழிபாடு என்பது நீதி, நேர்மை, ஒழுக்கம், அமைதி என்பவற்றை நிலை நிறுத்த உதவுகின்றது. 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்றார் ஔவையார். ஆலய தரிசனம் குரு, இலிங்க, சங்கம வழிபாட்டுக்கு அடிகோலுகின்றது. ஆலயம் சென்று வழிபடுவோரின் வினைகளாகிய பஞ்சுப் பொதிகள் திருவருளாகிய அனற்பொறியால் வெந்து சாம்பராகின்றன. 'மாலற நேயமும் மலிந்தவர் வேடமும் ஆலயந்தானும் அரனெனத் தொழுமே' என்று செப்புகிறது சிவஞான போதம்.

''காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக, வாய்மையே தூய்மையாக, மனமணியிலிங்கமாகப்..'' பாவனை செய்து வழிபடும் அகவழிபாட்டுப் பக்குவத்தை திருவருள் பெற்ற அனுபூதிச் செல்வர்களான நால்வர்களும் ஆழ்வார்களும் அடைந்திருந்தாலும் தலங்கள் தோறும் நடந்து சென்று வழிபட்டதோடு அல்லாமல் 'சேரவாரும் செகத்தீரே'' என மக்களையும் அழைத்து ஆலய வழிபாட்டுக்கு உட்படுத்தினர். ஆலயம் சென்று வழிபடுவோரின் உள்ளத்தை ஆண்டவன் தனக்கு ஆலயமாகக் கொண்டு வாசம் பண்ணி அருள்பாலிக்கிறான்.


அந்தப் பரம்பொருளின் உடலில் சரிபாதி வடிவந்தாங்கி ஆன்மாக்களின் முப்பிணி நீங்கவும், இகபரசுகம் பெறவும் அருள்புரிபவள் உலக மாதாவாக விளங்கும் பராசக்தி அன்னை. இவள் பல வடிவங்களில் பல நாமங் களில் பல்வேறு இடங்களில் காட்சி தந்து அருளாட்சி புரிந்து வருகிறாள். உலகில் வெப்பு நீங்கித் தண்மையும் குளிர்ச்சியும் பரவ அருள் தரும் வடிவாக மகாமாரித் தாயாகவும் வீரமும், ஆயுளும் தர உக்கிர மாரியாகவும், இளமையும், சுகங்களும் பொழிய முத்துமாரியா கவும் வீற்றிருக்கிறாள்.

இந்த வகையிலே, அரியாலை பிரப்பங்குளம் பதியிலே பன்னெடுங்காலமாகக் கோயில் கொண்டு வழிபடுமடியவர் குறை தீர்த்துவரும் மகாமாரி அம்மன் ஆலயம், அரியாலை வாழ்மக்கள் பொது நல நோக்கும் சமூக அக்கறையும், கலை, விளையாட்டு உயர்வுகளும் கொண்டவர்கள் மட்டுமல்ல, ஆன்மீகத் துறையிலும் அளவில்லா ஈடுபாடு கொண்டவர்கள் என்பதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகின்றது.

இந்த ஆலயம் கண்டி வீதியில் உள்ள மாம்பழம் சந்திக்குத் தெற்காக இலந்தைக்குளம் வீதியில் பிரப்பங்குளத்தை அண்மித்த பகுதியில் அழகுற அமைந்துள்ளது. நாளுக்கு நாள் அழகும், அருளும் சொட்டும் வகையில் கலை, கலாசார மையமாக விளங்கும் இந்தக் கோயிலில் எழுந்தருளி இருக்கும் மகாமாரி அம்மன் அடியார்களுக்கு வேண்டிய எல்லாச் செல்வங்களையும் அருளி வருகின்றாள்.

அந்தக் காலத்தில் இந்தக் குளத்தின் அருகே பிரம்பு, மற்றும் மூங்கில் என்பன அடர்ந்து வளர்ந்து காணப்பட்டன. இந்த மரங்களின் மூலப்பொருள்களைக் கொண்டு பல கைத்தொழில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. குளத்தின் தெற்குப் பக்கமாக மேட்டு நிலமும் மருதமரங்கள், வில்வமரங்கள்,நெல்லிமரங்கள் போன்ற தல விருட்சங்களும் தென்னை, பலா, கமுகு, விளாத்தி, கொண்டல் போன்ற மரங்களும் ஆங்காங்கே காணப்பட்டன.

தற்போது குடிமனைகள் நிறைந்து காணப்படும் இந்தப் பகுதியில் முற்காலத்தில் மக்கள் நெற்செய்கை, சிறுதானியச் செய்கை, புகையிலை, வாழை, மரவள்ளி, மரக்கறிச் செய்கையிலும் ஈடுபட்டு வந்தமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன. கடவுள் வழிபாட்டிலும் சைவ சமய அனுஷ்டானத்திலும் நம்பிக்கை கொண்டு கூட்டு வாழ்க்கை நெறியைப் பின்பற்றி வந்திருந்தனர்.



இந்த ஆலயம் தோன்றிய வரலாறு தொடர்பாக ஒரு கர்ணபரம்பரைக் கதை தொன்றுதொட்டு செவிவழியாகத் தலைமுறை தலைமுறையாகப் பேசப்பட்டு வருகின்றது. பிரப்பங்குளத்தை அண்டிய நிலப் பகுதியில் சிறுவர், சிறுமியர் ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தனர்.

ஒரு நாள் அவர்கள் தமது தாகம் தீர்க்கும் பொருட்டு இளநீர் பறித்துக் குடித்துக் கொண்டிருந்தவேளை அப்போது ஒரு கிழவி பொல்லை ஊன்றி நடந்து வந்து ''மக்களே எனக்கும் தாகமாக இருக்கிறது இளநீர் தாருங்கள்'' என்று கேட்க, சிறு வர்கள் இளநீரை அந்த ஆச்சியிடம் கொடுத்துவிட்டுக் கால் நடைகளை மேய்க்கச் சென்று விட்டார்கள். பின்னர் வந்து பார்த்தபோது அந்த மூதாட்டியைக் காண வில்லை. 'நாச்சி... நாச்சி... நாச்சி'... என்ற அசரீரி ஒலி மட்டும் கேட்டது. சிறுவர்கள் திகைப்புடன் சென்று விட்டனர்.

**யேசுதாஸ்**

மீண்டும் ஒருநாள் சிறுவர்கள் மந்தைகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது ஓர் அழகான பெண் தலைவிரி கோலத்துடன் வந்து நிற்க, சிறுவர்கள் ''உங்களுக்கு என்ன வேண்டும் ?'' என்று கேட்டனர்.

(தொடரும்)

# சிறார்களின் கல்வி அபிவிருத்திக்கு அத்திபாரமிடும் பாலர் கல்விக் கழகம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

மாணவர்களின் கல்வித் தேவைகளை மட்டுமின்றி, இணைப் பாடவிதான செயற்பாடுகளையும் உடற்கல்விப் பயிற்சியையும் வழங்கி வருகின்றனர்.

1971 ஆம் ஆண்டு தொடக்கம் பாலர்களுக்கிடையில் விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் திட்டத்தை ஆரம்பித்து வைத்துப் பாலர் பாடசாலை மாணவர்களின் விளையாட்டுத் திறன்களுக்கு ஊக்கம் வழங்கினார்கள்.

பாலர் கல்விக் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டத்தின் பிரபல்யமான பாடசாலைகள், மண்டபங்கள் ஆகிய இடங்களில் பாலர் பாடசாலைகள் அனைத்தையும் ஒன்றிணைத்துப் போட்டிகளை நடத்தி வருகின்றமை கழகத்தின் திறமையான செயற்பாடுகளை எடுத்துக் காட்டுகின்றது.

1974 ஆம் ஆண்டு ''தத்ரூப திருமணம்'' நிகழ்வினை யாழ்.இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் அரங்கேற்றி ஸ்ரீ விக்னேஸ்வரா பாலர் பாடசாலை தங்கப் பதக்கத்தை வென்று முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

1986 ஆம் ஆண்டு 18 விரிவுரையாளர்களின் ஆக்கங்களைக் கொண்ட தொகுப்பு நூலாக "பாலர் கல்வியில் விஞ்ஞான அணுகுமுறை'' எனும் பெயரில் முதல் தடவையாகப் பாலர் கல்விக் கழக நூல் வெளியீட்டினைச் செய்தது. அதனைத் தொடர்ந்து இரண்டாவது தடவையாக 1987 ஆம் ஆண்டு கலாநிதி சபா ஜெயராசா எழுதிய ''பியாஜேயும் அறிகை உளவியலும்'' என்னும் நூலை வெளியிட்டது.

இதனைத் தொடர்ந்து 1988 ஆம் ஆண்டு ''மழலைத் தமிழ் இன்பம்'' எனும் நூலும் ''சிறுவர் கதைக் கொத்தை'' என்னும் நூலும் இளஞ் சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன் ஆக்கமாக கழகத்தால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இவ்வாறு வெளியிடப்பட்ட நூல்கள் பாலர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பயனுள்ளதாக அமைந்ததுடன் பாலர் பாடசாலைகளின் சேவை நிலையும் அதிகரிக்கத் தொடங்கியது.

தற்போது பாலர் கல்விக் கழகத்தின் கீழ் 13 பாலர் பாடசாலைகள் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்தப் பாலர் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் தாய்மையுணர்வுடன் கூடிய செயற்பாடுகளே அனைத்து முன்பள்ளிச் சிறுவர்களும் பாலர் பாடசாலைகளுக்கு மகிழ்வுடன் செல்வதற்கு அடித்தளமாக அமைகின்றன.

பாலர் கல்விக் கழகத்தினால் முதல் தடவையாக ஆரம்பிக்கப்பட்ட பிறவுண் வீதி ஸ்ரீ விக்னேஸ்வராப் பாலர் பாடசாலையில் செல்வி ஜெயந்தினி கனகையா, செல்வி சியாமா ஜெகநாதன் ஆகியோர் கடமையாற்றி வருகின்றனர்.

இந்தப் பகுதியைச் சேர்ந்த முன்பள்ளிச் சிறார்களின் கற்றல் நடவடிக்கைகள் அதிகமாக இந்தப் பாடசாலையிலேயே ஆரம்பிக்கப்படுகின்றன.

பாலர் கல்விக் கழகத்தினால் இரண்டாவதாக ஆரம்பிக்கப்பட்ட பாலர் பாடசாலையான யாழ்.வீதி, ஞானக்குழந்தைகள் இல்லம் [illegible] செல்வி. அகில[illegible] மதுசாந்தினி மகேஸ்வரன் ஆகியோர் கடமையாற்றுகின்றனர்.

ஏனைய பாலர் பாடசாலைகளான கோண்டாவில் விக்னேஸ்வரா ஞானக் குழந்தைகள் முன்பள்ளியில் திருமதி சிவானந்தராணி சிறீதரனும், உடுவில் ஞானக்குழந்தைகள் முன்பள்ளியில் திருமதி உஷாதேவி லிங்கேஸ்வரனும் கடமையாற்றி வருகின்றனர்.

**நிஷா**

நந்தாவில் மனோன்மணி பாலர் பாடசாலையில் செல்வி ஜெயந்தி பெருமாள், திருமதி நீலரஞ்சினி வசந்தகுமார் ஆகியோரும் அரசடி ஞானக்குழந்தைகள் இல்லத்தில் திருமதி ஞானகாந்தன் கேதாரபூரணி,செல்வி தவமணி செல்வரட்ணம், செல்வி நதீபா பாலசிங்கம் ஆகியோரும் முடமாவடி ஞானக்குழந்தைகள் பாலர் பாடசாலையில் செல்வி நாகேஸ்வரி வீரமுத்து, திருமதி ஜெசிந்தா கஜீபன் ஆகியோரும், பிறவுண் வீதி ஞானக்குழந்தைகள் முன்பள்ளியில் செல்வி அகல்யா கந்தையா ஆகியோரும் நாவலர் பாலர் சோலையில் செல்வி நிரூபா நீக்கிலஸ்பிள்ளையும், நல்லூர் ஞானக்குழந்தைகள் இல்லத்தில் செல்வி தசாயினி சதாசிவமும் வண்ணார்பண்ணை யாழ்.ஞானக்குழந்தைகள் இல்லத்தில் திருமதி வளர்மதி சத்தியதேவனும், ஆறுகால் மடம் அறிவொளி ஞானக்குழந்தைகள் இல்லத்தில் திருமதி தேவிகா சுதாகரன், செல்வி சுகிர்தா ஆகியோரும், திருநெல்வேலி ஞானக்குழந்தைகள் இல்லத்தில் திருமதி ஸ்ரீவாணி ஜெயதீபன், திருமதி [illegible]கரன், செல்வி சி. விஜய[illegible] ஆகியோருமாக இந்த 13 முன்பள்ளிகளிலும் ஆசிரியர் களாகக் கடமையாற்றி வருகின்றார்கள். பாலர் கல்விக் கழகத்தின்கீழ் இயங்கும் 13 பாலர் பாடசாலைகளிலும் 500 இற்கும் மேற்பட்ட முன்பள்ளி மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆரம்பக் கல்வி மாணவர்களின் கற்றலுக்கு அத்திபாரமாகத் திகழும் பாலர் பாடசாலைகளை நிர்வகிக்கும் பொறுப்பினைக் கொண்டுள்ள பாலர் கல்விக் கழகம் 1966 ஆம் ஆண்டு தொடக்கம் தனது பணியில் எத்தனை இடையூறுகள் வந்த போதும் பின்நோக்கி நிற்காமல் தொடர்ந்து தனது சேவையை வழங்கி வருகின்றது.

தற்போது பாலர் கல்விக் கழகத்தின் தலைவராக யாழ்.செின்.ஜோன்ஸ் கல்லூரியின் ஆசிரியர் எஸ்.பி.காசிநாதனும், செயலாளராக திருமதி தெய்வநாயகி இரட்ண கோபாலும், உப தலைவராக சைவப் புலவர் இராசையா ஸ்ரீதரன், பொருளாளராகக் கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் பொன்னம்பலம் அதிசன் ஆகியோரும் கடமையாற்றி வருகின்றனர். இந்தக் கழகத்தின் நிர்வாக உறுப்பினர்களாக முரளீதரன் சிவராசா, கார்த்திகாயினி சிவராசா, ஆர்.குமாரகுலசிங்கம், ஆனந்தசிவம் ஆகியோர் சேவையில் உள்ளனர்.

இவ்வாறு மாணவர்களின் கல்விச் சேவைக்கு அயராது தம்மை அர்ப்பணிக்கும் ஆசிரியர்களுக்கு மேலதிக பயிற்சி நெறிகளையும் வழங்கி ஆக்கம் கொடுத்து பாலர் பாடசாலைகளைத் தரமுயர்த்தும் சேவையினை வழங்கும் பாலர் கல்விக் கழகத்தின் சேவை இடைவிடாது தொடரும் என்பதில் ஐயமில்லை. (முற்றும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கப்புச்சின்




கப்புச்சின் என்பது ஒருவகைக் குரங்கு இனத்தின் பெயர். இவை உருவத்தில் சிறியவையாகவும் பாரம் குறைந்தவையாகவும் காணப்படும். இந்தக் குரங்குகள் தமக்குரிய உணவைத் தேடும்போது ஒரு மரக்கிளையிலிருந்து மற்றைய மரக்கிளைக்கு இலகுவாகத் தாவிச் செல்லுகின்றன. இந்த வகைக் குரங்குகள் அதிகளவில் அமெரிக்காவிலுள்ள மழைக்காடுகளில் வசித்து வருகின்றன. கப்புச்சின் என்ற பெயர் இவற்றின் தலையிலுள்ள மயிர்க் கற்றைகள் காரணமாகவே சூட்டப்பட்டது.

இந்த வகைக் குரங்களில் நான்கு வகை உண்டு. வெள்ளை நிறத் தொண்டையை உடைய கப்புச்சின் குரங்குகளின் மார்பு, தொண்டை, முகம் ஆகியன வெள்ளை நிறத்தில் காணப்படும். இவற்றின் உடல் பூராகவும் சாம்பல் நிற மயிர்கள் நிறைந்து காணப்படுகின்றன. இவை மிகவும் தோழமையுள்ளனவாகக் காணப்படுவதோடு. குழுவாக வாழும் வழக்கமுடையனவாகவும் இருக்கின்றன. இவற்றின் குழுக்களில் 10 உறுப்பினர்கள் இருப்பர். ஆனால், அநேகமானவை 24 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்.

இவை மிகவும் சத்தமிடக் கூடியவை. காலையில் விழித்ததும் விசில் எழுப்புவதிலும் சத்தமிடுவதிலும் இவை ஈடுபடுகின்றன. இந்த ஓசைகள் இவை தங்கியிருக்கும் மரங்களிலிருக்கும் ஏனைய மிருகங்களை விரட்டிவிடும்.

கப்புச்சின் குரங்குகள் உணவுதேடி நீண்டதூரம் செல்வதில்லை. பூச்சிகள், பழங்கள், இலைகள், விதைகள் என்பவற்றையே இவை உண்ணுகின்றன. அத்துடன் ஏனைய பாலூட்டும் பிராணிகளையும் இவை உண்ணுகின்றன. பட்ட மரங்களின் பட்டைகளின் கீழ் காணப்படும் மூட்டைப் பூச்சிகளைத் தேடுவதில் இவை அதிகமான நேரத்தைச் செலவழிக்கின்றன.

இளம் கப்புச்சின்கள் விளையாடுவதில் அதிக நேரத்தைச் செலவழிக்கின்றன. ஒரு மரத்திலிருந்து வேறொரு மரத்துக்குத் தமது தோழர்களைத் துரத்துவதிலும், ஒருவர் மேல் மற்றொருவர் பாய்வதிலும் இவை நேரத்தைச் செலவிடுகின்றன. இவற்றைப் பார்ப்பதற்கு மிகவும் வேடிக்கையாக இருக்கும். இவை உணவைத் தேடும் போது வரிசை ஒழுங்கில் காணப்படும். வயது முதிர்ந்த குரங்குகள் வரிசையின் முன்பகுதியில் காணப்படும். இளம் குரங்குகள் வரிசையில் பின்னால் காணப்படும். தமக்குக் கிடைக்கும் உணவை ஆண் குரங்குகள் தாமே தனித்து உண்பதில்லை. தமக்கு விருப்பமான பெண் குரங்குகள் மற்றும் குட்டிகளுக்குப் பகிர்ந்தளிக்கின்றன. அத்துடன், உணவு கிடைக்கும் வேளைகளில் இவை அதனை இரகசியமாக உண்பதில்லை. தமது குழுவிலுள்ள ஏனையோரையும் அழைத்து அவற்றைப் பங்கிட்டுக் கொள்கின்றன.

## அறிவின் பெட்டகம்

- தபால் முத்திரை இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டு ஆண்டு?
  **1875 ஆம் ஆண்டு**
- தந்திந் சேவை இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்ட ஆண்டு?
  **1858 ஆம் ஆண்டு**
- இலங்கையில் வானொலி ஒலிபரப்புக் கூட்டுதாபனம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு?'
  **1967 ஆம் ஆண்டு**
- இலங்கையில் முதன் முதலாக தொலைக்காட்சி சேவை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு?
  **1979 ஆம் ஆண்டு**
- இலங்கையில் தனியார் தொலைக்காட்சி சேவை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு?
  **1992 ஆம் ஆண்டு**

**சா.பபிதா**, தரம் 8ஏ,
கோண்டாவில் இராம கிருஸ்ண ம.வி.

## நாடுகளின் புராதன பெயர்கள்



- பிரான்ஸ்-கோல்நாடு
- சீனா- கதாய்
- சுவிற்சர்லாந்து-ஹெல்வி
- மியன்மார்-பர்மா
- தாய்லாந்து-சீயம்
- கம்போடியா-கம்பூச்சியா
- இஸ்தான்புல்-கொன்ஸ்தாந்திநோபிள்
- இந்தியா-பாரதம், இமயநாடு, காந்திதேசம்
- சீயம்-காந்தார தேசம்
- பிரித்தானியா-இங்கிலாந்து, பிரிட்டன், ஐக்கிய இராச்சியம்

**லிஜித்திரா**, 8ஏ,
யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.

## உலகத்தில் மாபெரும் வீரர்கள் யாவர்?




*ஒருநாள் அக்பர் தனது அவையில் அமர்ந்து இருந்தார். அவையில் இருந்தவர்களைப் பார்த்து, ''உலகத்தில் மாபெரும் வீரர்கள் யாவர்? அவர்களுக்கான இலக்கணம் என்று எதனைக் கருதலாம்?'' என்று கேட்டார். ''மாபெரும் சேனை ஒன்றை ஐந்தாறு வீரர்களை மட்டும் தம்முடன் அழைத்துச் சென்று சமாளித்து வெற்றி பெறும் தளபதியே மாபெரும் வீரர்!'' என்றார் ஒருவர். ''தாம் ஆயு தம் வைத்திருக்காத நிலையிலும் எல்லா ஆயுதங்களும் வைத்திருக்கும் ஒருவனை எதிர்த்துப் போரிட்டு வெற்றி கொள்பவனே சிறந்த வீரன்!'' என்றார் இன்னொருவர்.*

*''போர் முனையில் போரிட்டு வீர மரணம் அடைந்த அனைவருமே வீரர்கள்தான்!'' என்பது இன்னொருத்தரின் பதில். இவ்வாறு ஒருவர் பின் ஒருவராகப் பதில் அளித்துக் கொண்டிருக்க பீர்பால் மட்டும் அமைதியாக இருந்தார். அது அக்பருக்கு ஆச்சரியத்தை அளித்தது. ''பீர்பால் என் கேள்விக்கு என்ன பதில்?'' என்றார் அக்பர். ''மன்னர் அவர்களே... என் பதில் சற்று வித்தியாசமானதாக இருக்கும். அதனால்தான் சற்றுத் தயக்கத்துடன் இருந்தேன். தாங்களே கேட்ட பிறகு விடையைச் சொல்லாமல் இருப் பது சரியல்ல. வீரம் என்பது வெறும் உடல் பலத்தைக் கொண்டது அல்ல. உள்ளத்தின் உயர் பண்பே வீரம் என்று நான் கருதுகிறேன். தன்னம்பிக்கையுடன் உழைத்துக் கிடைக்கும் வருவாயை மட்டுமே தன் வாழ்க்கைக்குப் பயன்படுத்திக் கொள்பவன், சுய முயற்சியுடன் தன் கடமைப் பொறுப்பை நிறைவேற்றும் விதத்தில் சோம்பல் இல்லாமல் சுறுசுறுப்புடன் செயற்படுபவன் ஆகியவர்கள் தான் உண்மையான மாபெரும் வீரர்கள் என்று நான் கருதுகிறேன்!'' என்றார் பீர்பால்.*

*''நீர் கூறுவது உயர்ந்த தத்துவம்தான். ஆனால், வாழ்க்கையில் சுயநல நோக்கம் இல்லாமலும் முழுக்க முழுக்கத் தன் உழைப்பை மட்டுமே நம்பி வாழக்கூடிய ஒருவன் இருக்கக் கூடும் என்று நான் நினைக்கவில்லை. சந்தர்ப்பம் கிடைத்தால் எல்லோரும் சுயநல மனிதராகத்தான் இருப்பார்கள் என்பது என் எண்ணம். இதை நான் உனக்கு நிரூபித்துக் காட்ட முடியும்!''என்றார் அக்பர். மறுநாளே அக்பர் தன் நாட்டு மக்களுக்கு உத்தரவு ஒன்றைப் பிறப்பித்தார்.*

*பொதுமக்கள் அனைவருக்கும் ஒருவார காலத்திற்கு மூன்று வேளையும் அறுசுவை உணவு இலவசமாக அளிக்கப்படும் என்பதுதான் அந்தச் செய்தி. விருந்துக்கென விசாலமான பந்தல் அமைக்கப்பட்டு ஒரே சமயத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் அமர்ந்து சாப்பிட வசதிகள் செய்யப்பட்டன. விருந்தளிப்பு நாளும் தொடங்கியது. மக்கள் போட்டி போட்டுக் கொண்டு சாப்பிட வந்தார்கள். யாரும் வேலைக்குச் செல்லவில்லை.*

*விருந்து தொடங்கி மூன்று நான்கு நாள்கள் கழிந்தன. அக்பரும் பீர்பாலும் மாறுவேடம் தரித்துக் குதிரை மீதேறி நாடு முழுவதையும் சுற்றி வந்தார்கள். வீடுகள் எல்லாம் காலியாக இருந்தன. தெருக்கள் எல்லாம் வெறிச்சோடிக் கிடந்தன. மக்கள் மூன்று வேளை உணவைப் புசிக்க விருந்துப் பந்தலில் குழுமிக் கிடந்தனர். ஊரே செயலற்றுக் கிடந்தது. ஒரு கிராமத்து வயல்பக்கமாக அக்பரும் பீர்பாலும் சென்று கொண்டிருந்தனர். அப்போது ஒரு வயலில் வயதான முதியவர் ஒருவர் கடும் வெயிலையும் பொருட்படுத்தாது உழுது கொண்டிருந்தார். அக்பர் அந்த முதியவரை நெருங்கிப் ''பெரியவரே.. இந்தக் கடும் வெயிலிலும் வேலை செய்து கொண்டு இருக்கிறீரே? மன்னர் அனைவருக்கும் ஒருவாரத்திற்கு மூன்று வேளையும் அறுசுவை விருந்து அளிக்கிறாரே.. அதைப்பற்றி உங்களுக்குத் தெரியாதா?'' என்று கேட்டார்.*

*''ஐ...அந்தச் செய்தி என் காதிலும் வந்து விழுந்தது. ஆனால், என்னைப்போல உழைப்பாளிகளுக்கு அறுசுவை விருந்து சாப்பிட ஏது நேரம்?'' என்று சொன்னார் முதியவர். ''அறுசுவை விருந்து கிடைக்கும்போது உழைப்பைச் சில நாள்களுக்கு ஒதுக்கி வைக்கக் கூடாதா? இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டால் அப்புறம் இவ்வளவு அருமையான விருந்தைச் சாப்பிட முடியாதே!'' என்று கேட்டார் அக்பர். ''ஐ... நான் நல்ல உழைப்பாளி. உழைத்துச் சாப்பிட்டுப் பழகிப் போனவன். உழைக்காமல் கிடைக்கும் உணவு என் குடலில் சமிபாடு அடையாது. மேலும் மன்னர் ஒருவார காலத்துக்கு மட்டும்தான் உணவு அளிப்பார். அதன்பிறகு நான் உழைத்துத்தானே சாப்பிட்டு ஆகவேண்டும்? என்னைப் பொறுத்த மட்டில் என் உழைப்புத்தான் எனக்கு எல்லாமே. உழைப்புக்கு மிஞ்சி உயர்ந்ததாக எதுவுமே இருப்பதாக எனக்குத் தெரியவில்லை!'' என்று கூறினார் முதியவர்.*

*பின் 'ஹேய்' என்று மாட்டை அதட்டியவாறு தொடர்ந்து ஏர் உழத் தொடங்கினார். முதியவரின் சொற்களைக் கேட்ட மன்னர் அக்பர் பிரமித்து நின்றார். பின் பீர்பாலை நோக்கி, ''பீர்பால்.. உண்மையிலேயே உழைத்து வாழ்பவர்கள்தான் மாபெரும் வீரர்கள் என்றார்.*

## புதுயுகம்



பூக்கள் சிரிக்குது
பொங்குது அலைகள்
பூரிப்பால் என் மனம்
புதுப்பொலிவு காணுது

ஏட்டிலுள்ள கதைகள் எல்லாம்
என்னுயிர் மேவுது இங்கு
பாட்டிலே சொல்லிட
பட்டியல் போடுது

கலைகள் படைப்போம்
கழனிகள் வைப்போம்
காட்டைத் திருத்தி நல்ல
நாட்டைக் கட்டிடுவோம்

விண்ணையும் தொடுவோம்
விருந்துகள் வைப்போம்
மண்ணிலே பல படைத்து
மாண்புகள் செய்திடுவோம்

கருத்தாய் உயர்ந்திடுவோம் அறிவினிலே
கல்வியைக் காப்போம் கண்போல
பணிவினில் உயர்வோம்-மலைபோல்
நற்செயல்கள் பல செய்திடுவோம் வாழ்வினிலே

**சாஹுஜா**,
யா/புனித தெரேசாள்
மகளிர் கல்லூரி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உரும்பிராய் இந்துக் கல்லூரி
# நூற்றாண்டு விழாச் சிறப்புமலர் 11.04.2011

### அரும்பணி தொடரட்டும்



யாழ்ப்பாணம் உரும்பிராய் இந்துக்கல்லூரி இன்று தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதை யிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். யாழ்ப்பாணப் பாரம் பரியத்தை வளர்த்தெடுப்பதில் உரும்பிராய் இந்தக் கல்லூரியும் தனக்கெனத் தனி இடத்தை வகித்துக் கொணடுள்ளது.

அன்று தொடக்கம் இன்றுவரை சமய, சமுதாய கல்வியை மேம்படுத்தும் வகையில் அதிபர், ஆசிரியர், அனைவரும் இப்பணியில் அயராது பங்கெடுத்துக்கொள்வது அனைவரையும் மகிழ்விக்கின்றது. நூற்றாண்டு கண்டுள்ள இக் கல்லூரி மேலும் பல்லாண்டு காலம் கல்விக்கும், மொழிக்கும், சமயப் பண்பாட்டிற்கும் அரும்பணியாற்ற ஆசீர்வதிக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,
*இரண்டாவது குருமஹாசந்நிதானம், நல்லை ஆதீனம்.*

### என்றும் நிலைபெற வாழ்த்துக்கள்



கல்விப்பணி, கடவுட்பணி, காலமெல்லாம் மனிதர் களைப் புனிதப்படுத்த எழுந்தவை கல்விச்சாலைகள். எம்மண்ணில் ஒப்பற்ற உயர் ஒப்புரவாளர்களை உரு வாக்கிய உன்னத பாடசாலை உரும்பிராய் இந்துக் கல்லூரி. இக்கல்லூரியின் நூற்றாண்டு விழாக் குறித்து வாழ்த்துவதில் ஆனந்தமடைகின்றேன். இந்தக கிராமத்தில் வாழ்ந்த உத்தமர்களின் முயற்சியால் தோற்றம் பெற்ற உரும்பிராய் இந்துக்கல்லூரியின் அரவணைப்பில் பல ஆயிரம் சிறார்கள் உயர்வு பெற்றனர். பல நூறு ஏழைமாணவர்கள் ஆங்கிலக் கல்வியும் ஆளுமையும் பெற்றனர். சிறந்த விளையாட்டுத்துறைசார் விற்பன்னர்களை இக்கல்லூரி உருவாக்கிய பெருமை இன்றும் பேசப்படுகின்றது. நாடறிந்த பேச்சாளர்களை, நாடக விற்பன்னர்களை இக்கல்லூரி உருவாக்கியமை மறக்கமுடியாது.

நூற்றாண்டு விழாக்காணும் இக்கல்லூரி என்றும் நிலை பெறப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

"யாவர்க்கும் இன்னுரை தானே"

ஆறு.திருமுருகன்,
*தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்*

### முன்னேற்றம் காண வாழ்த்துகிறேன்



கல்வித் துறையில் மாத்திரமின்றி ஒரு காலத்தில் விளையாட்டுத் துறையிலும் சிறந்தோங்கிய இப் பாடசாலை கடந்தகால யுத்தம் காரணமாகச் சற்றுப் பின்னடைவைக் கண்டிருந்தாலும் இன்று முன்னேற்ற கரமான பாதையில் பயணிக்க ஆரம்பித்திருப்பது நம்பிக்கையைத் தருகின்றது.

"சைவமும் தமிழும்" பாரம்பரியத்துக்கு அமைவாக யாழ்ப்பா ணத்தில் உருவாக்கம் பெற்றுள்ள பாடசாலைகளில் ஒன்றான உரும் பிராய் இந்துக்கல்லூரி தனது நூற்றாண்டினைக் கொண்டாடும் இச சந்தர்ப்பத்தில் அக்கல்லூரியின் வளர்ச்சி தொடர்பில் பல்வேறு நிலை களில் இருந்து பங்களிப்புக்களை வழங்கியுள்ள அனைவருக்கும் நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வது எனது கடமைப்பாடாகும்.

**டக்ளஸ் தேவானந்தா** *(பா.உ, செயலாளர் நாயகம் - ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, பாரம்பரியக் கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்)*

### கல்விச் சேவையில் சிறப்புற வாழ்த்துகிறேன்



பாரம்பரியமும், பண்பாட்டுச் சிறப்பும் மிக்க உரும் பிராய் கிராமத்தில் கல்வி ஒளிபரப்பி வரும் உரும் பிராய் இந்துக் கல்லூரி தனது வரலாற்றில் பல படிகளைக் கடந்து இன்று நூற்றாண்டு விழாக் காணுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இக்கல்லூரியின் அனைத்துச் செயற்பாடுகளும் நல்லதொரு நாளைய சந்ததிக்கு வழிகாட்டலாய் அமையவும், இப் பாடசாலை சகல வளங்களையும், நலன்களையும் பெற்று கல்விச் சேவையில் மென்மேலும் சிறப்புறவும் எனது மனமுவந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திருமதி.இமெல்டா சுகுமார், *அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாண மாவட்டம்*

### விழா சிறப்புற வாழ்த்துகிறேன்




உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு எத்தனையோ மருத்துவர்களையும்,பொறியிலாளர்களையும், கணக் காளர்களையும், விரிவுரையாளர்களையும், சட்டத் தரணிகளையும், அதிபர்களையும், ஆசிரியர்களை யும், விளையாட்டுவீரர்களையும், புகழ்பூத்த அரசியல் வாதிகளையும், கல்வியியலாளர்களையும், சிறந்த சமூகசேவகர்களையும் உருவாக்கிய பெருமை உண்டு.

இன்று இக்கல்லூரி அதிபர் ஆசிரியர்களின் ஆக்கமும், ஊக்க மும் கல்லூரியின் வளர்ச்சிப்பாதையை விரிவாக்கிய வண்ணம் செல்கின்றது.

மேலும் எமது பாடசாலை அபிவிருத்திச்சங்கம் பாடசாலை வளர்ச சிக்கு உறுதுணையாக இருந்து செயல்பட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள். கல்லூரியில் இடம்பெறும் எல்லா வைபவங்களிலும் அதிபருடன் இணைந்து செயல்பட்டு வருகின்றோம். இக்கல்லூரியின் நூற்றாண்டு விழா சிறப்பாக நடந்தேற வாழ்த்துகிறேன்.

திரு.ச.ஏகாம்பரநாதன் *(சமாதான நீதிவான்), செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி*



### வளர்ச்சியுற வாழ்த்துகின்றோம்



கல்விச் செல்வத்தையும் அதனுடன் கூடிய ஒழுக்க வாழ்வையும் மாணவச் செல்வங்களுக்கு வழங்கி அவர் களை உயர்வடையச் செய்யும் நற்செயற்பாட்டில் அயராது உழைத்து இன்று நூறு ஆண்டுகளை கடந்து தன்சேவை யில் அகமகிழும் உரும்பிராய் இந்துக்கல்லூரிச் சமூ கத்தை நானும் பாராட்டி உங்கள் மகிழ்வில் இணை வதையிட்டு பூரிப்படைகின்றேன். தொடர்ந்தும் இக்கல்லூரியின் சேவை உயர்வடைய, வளர்ச்சியுற என் வாழ்த்துக்களும் ஆசீரும் உரித்தாகுக.

மேதகு.இ.தோமஸ் சவுந்தரநாயகம
*யாழ்.ஆயர், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.*


### மாணவ சமுதாயம் உயர்வடைய நல்லாசிகள்



நூறாவது அகவையைப் பூர்த்தி செய்து தனக் கெனத் தனித்துவமான யாழ்ப்பாணக் கல்விப்பாரம் பரியத்துடன் முன்னேறிச் செல்லும் உரும்பிராய் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழா குறித்து அகமகிழ்வும், பெருமையுமடைகின்றேன். இப்பாடசாலை கல்விப் பாரம் பரியத்தைப் பேணிப் பணியாற்றி இன்று நூற்றாண்டுகள் தலைநிமிர்ந்து நிற்பது பெருமைக்குரியது. பண்டிதர் களையும், புலவர்களையும், கல்விமான்களையும் உருவாக்கிய இக் கல்லூரி நிறைவான பெரும் கல்விச் சமூகத்தினையுருவாக்கிய பெரு மைக்குரியது. அந்த நாள் முதல் இந்த நாள் வரை தன்னலங்கருதாது சேவையாற்றிய, சேவையாற்றுகின்ற அதிபர்கள், ஆசிரியர்களுக்கும் நல்லாசி கூறுவதோடு கல்வியறிவிலே மேலோங்கி வளர கற்பக விநாயகர், காமாட்சிஅம்மன் அருள் தரப் பிரார்த்திக்கின்றேன்.

**சிவஸ்ரீ.தியாக.கிருஷ்ணமூர்த்திக்குருக்கள்,**
*பிரதமகுரு, உரும்பிராய் கற்பக விநாயகர் ஆலயம், உரும்பிராய் காமாட்சிஅம்மன் ஆலயம.*

### கல்விப் பணி சிறக்கட்டும்



உரும்பிராய் பதியின் சைவம் கல்வியுடன் தழைத் தோங்குவதற்காக உருவாக்கப்பட்ட இக்கல்லூரி 90 களில் இருந்து பல சவால்களை எதிர்நோக்கியிருந்தும் தடைகளை எல்லாம் தாண்டி கல்விப்பணியை மேற் கொண்டு வருவது பாராட்டுக்குரியதாகும்.

நூற்றாண்டை எட்டும் இக்கல்லூரியின் அதிபர், ஆசிரியர் குழாத்தினரின் அர்ப்பணிப்பு நிலை இக் கல்லூரியை நிலைநிறுத்துமென எதிர்பார்க்கிறேன். இக் கல்லூரி மேலும் வினைத்திறனான கல்விப்பணியைச் செய்ய வாழ்த்துகிறேன்.

**இ.இளங்கோவன்,** *செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, வடமாகாணம்.*

### பல நூற்றாண்டு காலம் வாழ வாழ்த்துகிறேன்



உரும்பிராய் இந்துக்கல்லூரி சைவமும் தமிழும் வளர்க்கவும், கிராமப்புற மாணவர்களின் உயர் கல்வியை வளர்த்தெடுக்கவும் தாபிக்கப்பட்டது. பல சவால்களை எதிர்நோக்கிய காலத்தில் எம்மவர்களால் தாபிக்கப்பட்ட இக்கல்லூரி சவால்களை மீறித் தனது இலக்குகளை உயர்நிலையில் அடைந்துள்ளது. இப் பாடசாலையின் வளர்ச்சியில் இந்த நூற்றாண்டு வரை உழைத்த அதிபர்களையும்ஆசிரியர்களையும் வாழ்த்துவதோடு கல்லூரியின் கல்விப் பணி மேன்மேலும் சிறக்க வாழ்த்துகின்றேன்.

**வே.தி.செல்வரத்தினம**
*மேலதிக மாகாணக்கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணம்.*

### கல்விப்பணி சிறப்புற வாழ்த்துகிறேன்



நீண்ட கால வரலாற்றையும், பெருமைக்குரிய சிறப்புக் களையும் கொண்ட இக்கல்லூரி உரும்பிராய் பிரதேசத் தின் கல்விப் பாரம்பரியத்துக்கு வளமும், வலுவும் சேர்த்து வந்துள்ளது.

இக்கல்லூரி தனது பாரம்பரியக் கல்விப்பணியினால் பல்துறைகளிலும் புகழ்பூத்த தகைமைசார் சான்றோர் களைச் சமூகத்துக்கு உவந்தளித்த சாதனைக்குரியது. நூற்றாண்டு விழாக்காணும் களிப்பில் அகமகிழ்ந்திருக்கும் இக்கல்லூரிச் சமூகத்தினருடன், எனது மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொள்கின்றேன்.

திருமதி.அ.வேதநாயகம்,
*வலயக் கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணம*

### காலத்தால் அழியாத பணிசெய்த கல்லூரி




03.04.1911இல் ஆரம்பிக் கப்பட்ட இக்கல்லூரி நூறு ஆண்டுகள் கல்விப் பணி யைச் சிறப்பாகச் செய்து இன்று நூற்றாண்டு விழா வைக் கொண்டாடுகின்றது என்பதோடு கல் லூரி ஆற்றிய பணி காலத்தால் அழியாதது என்பதற்கு இக்கல்லூரி உருவாக்கிய கல்வி மான்களே சான்றாவர்.

பல புகழ்பூத்த அதிபர்கள், ஆசிரியர் கள் இக்கல்லூரியின் வளர்ச்சிக்குத் தம்மை அர்ப்பணித்துக் கல்விப்பணியை சிறப்பாகச் செய்துள்ளனர். அவர்கள் யாவரும் இச் சந்தர்ப்பத்தில் நினைவுகூரவேண்டியவர்கள். மாணவர்கள் ஆசிரியர்களை விரும்பி வர வழைக்கும் விதத்தில் மகிழ்ச்சியானதும், ரம்மியமானதுமான கற்றல்சூழல் அமை வது பொருத்தமானதாகும். இதற்கமைய கல்லூரியில் பழையமாணவர்கள் சங்கம், கனடாக்கிளை, இலண்டன் கிளை, S.D.C, S.D.S, பழையமாணவர்கள் இந்த ரம்மிய மான சூழலை ஏற்படுத்தித் தந்து கொண்டி ருப்பது பாராட்டப்பட வேண்டியதொன்றே.

இக்கல்லூரியின் கல்விப்பெறுபேறுகள் உயர்வடையவும், விளையாட்டுத்துறை மிளி ரவும், மைதானம், விடுதி, பார்வையாளர் அரங்கு, என்பன சகல வசதிகளுடன் அமைக்கப் பட்டு வனப்புடன் மிளிரவும் அனைவரும் ஒன்றாகக் கரம் கோர்த்துச் செயற்படுவோம் எனக் கூறி இறையருளை வேண்டி நூற் றாண்டு விழா சிறப்புற அமைய என் இத யங்கனிந்த நல் வாழ்த்துக்களைத் தெரிவிப பதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.

**அ.ஈஸ்வரநாதன்,**
*அதிபர்,யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி.*

### கடமையைச் செய்வதில் மகிழ்வடைகின்றேன்



கடந்த நூறாண்டுகளில் பலர் எமது பாடசாலையில் பலனடைந்திருக்கிறார்கள். பலர் பாடசாலையின் முன் னேற்றத்திற்காக எப்போதும் பாடுபட்டுக் கொண்டேயிருக் கிறார்கள். அந்த வகையில் என்னாலான ஒரு பங்கையும் நான் கல்விகற்ற எனது கல்வித்தாய்க்கு ஆற்றியிருக்கின்றேன் என்பது எனக்கு மனநிறைவைத தருகின்றது.

நான் இங்கு வந்து பார்த்தபோது மூன்று முக்கிய தேவைகள் எமது கல்லூரிக்கு அவச ரமாகத் தேவைப்படுவதை அவதானித்தேன்.

எமக்குக் கல்வி தந்த தாய்க்கு என்னாலான கடமையைச் செய்ததில் நான் பெருமகிழ்வடை கின்றேன். இனிவரும் காலங்களிலும் என்னா லான பணிகளைச் செய்வதற்கும் தயாராகவுள் ளேன். அனைவருமாகச் சேர்ந்து எமக்குக் கல்வி தந்த தாய்க்குக் கை கொடுக்க வாருங்கள் என்று அனைவரையும் அன்பாகக் கேட்டுக் கொள் கிறேன். எமது பாடசாலையின் இந்த நூற்றாண்டு விழா மிகவும் சிறப்பான முறையில் நிகழ எனது வாழ்த்துக்களைக் கூறிக்கொள்ளும் அதேவேளையில் எல்லாம் வல்ல இறைவ னையும் அருள் புரிய வேண்டுகிறேன்.

திரு.க.தர்மகுலசிங்கம
தொழிலதிபர், இலண்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணு உலை மீது நைதரசன் வாயு செலுத்த ஜப்பான் முடிவு

ரோக்கியோ, ஏப். 11

ஜப்பானில் கதிரியக்க கசிவு ஏற்பட்டுள்ள அணுஉலை ஒன்றின்மீது நைதரசன் வாயுவை செலுத்தும் பணி இப்போது நடைபெற்று வருகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானின் புகுஷிமா நகரில் கடந்த மாதம் பூகம்பம் ஏற்பட்டதைத் தொடர்ந்து ஆழிப் பேரலை தாக்கியது. இதில் 30 ஆயிரம் பேர் இறந்துவிட்டனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலையால் புகுஷிமா நகரில் இருந்த டோக்கியோ மின் உற்பத்திக் கழகத்துக்குச் சொந்தமான அணுமின் உற்பத்திக் கழகத்திலிருந்த அணுஉலைகள் ஒன்றன்பின் ஒன்றாக வெடித்தன.

இதனால் அணு உலைகளிலிருந்து கதிரியக்கம் வெளிப்பட்டு வருகிறது. இதையடுத்து அப்பகுதியிலிருந்த மக்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டு விட்டனர். அணுஉலைகளிலிருந்து வெளிப்படும் கதிரியக்கத்தைக் கட்டுப் படுத்த பல்வேறு நடவடிக்கைகளை ஜப்பான் எடுத்து வருகிறது.

இப்போது அணுஉலைகளின் மீது நைதரசன் வாயுவை செலுத்தி கதிரியக்கத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அடுத்த 6 நாள்களுக்கு அணு உலை மீது நைதரசன் வாயு அதிகளவில் செலுத்தப்படும்.

இதேபோல மற்ற அணு உலைகள் மீது நைதரசன் வாயுவைச் செலுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிகிறது. இதன்மூலம் கதிரியக்கத்தின் வீரியம் கட்டுப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

**ஜப்பான் வருகிறார் ஹிலாரி கிளிண்டன்**

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டுள்ள ஜப்பானுக்கு அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் வருகை தரவுள்ளார்.

ஜேர்மனியின் பேர்ளினில் நடைபெறவுள்ள நேட்டோ வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு ஜப்பானுக்கு ஹிலாரி வருகிறார்.

அப்போது ஜப்பான் பிரதமர் நேட்டோ கான், வெளியுறவுத் துறை அமைச்சர் தாகேகி மட்சு மோட்டோவை, ஹிலாரி சந்தித்துப் பேசுவார் என்று தெரிகிறது.



கொலம்பியா, கார்டஜெனாவில், ஜனாதிபதி ஜுவான் மானுவேல் சான்டோஸை (வலது), வெனிசுலா ஜனாதிபதி ஹூகோ சாவச் சந்தித்துப் பேசுகிறார்.

# கடாபி ஆதரவுப் படையினரால் பத்திரிகையாளர்கள் கடத்தல்

வாஷிங்டன், ஏப். 11

லிபியாவில் ஜனாதிபதி கடாபிக்கு ஆதரவான படையினர், வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் 4 பேரைக் கடத்திச் சென்றுவிட்டனர் என அமெரிக்க பத்திரிகை அட்லாண்டா செய்தி வெளியிட்டுள்ளது.

அட்லாண்டா நாளிதழ் தனது இணையதளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவித்துள்ளவை வருமாறு:

கடாபிக்கு ஆதரவான படையினர் தங்களது நாளிதழ் நிருபர், 3 முன்னணி பத்திரிகை நிருபர்கள் ஆகியோரை கடத்திச் சென்றுள்ளனர்.

பிரேகா நகரில் பத்திரிகையாளர்களின் கார் சென்று கொண்டிருந்தபோது கடாபிக்கு ஆதரவான படையினர் காரோடு கடத்திச் சென்றனர். கார்ச் சாரதியை விடுவித்த படையினர், காரை தகர்த்தனர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரிட்டனின் முன்னாள் அமைச்சர் கைது

## நிதி முறைகேட்டில் ஈடுபட்டவராம்

நாடாளுமன்ற நிதி முறைகேட்டில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் பிரிட்டனின் முன்னாள் அமைச்சர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

1987முதல் 2010 வரையிலான காலகட்டங்களில் பிரிட்டனின் சுற்றுச்சூழல் துறை அமைச்சராக பதவி வகித்தவர் எலியாட் மோர்லே. இவர் தன்னுடைய பதவிக் காலத்தில் சுமார் 49 ஆயிரத்து 650 அமெரிக்க டொலர் அளவுக்கு நிதி மோசடியில் ஈடுபட்டார் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் ஒருவர் இத்தகைய மோசடியில் ஈடுபட்டு கைதுசெய்யப் பட்டிருக்கின்றமை இதுவே முதல் தடவையாகும்.

நாடாளுமன்றத்தின் கீழ் சபையில் தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த எரிக்இல்ஸ்லே, டேவிட்செய்டார் ஆகியோர் இதுபோன்ற முறைகேட்டில் ஈடுபட்டு கடந்த பெப்ரவரி மாதத்தில் சிறையில் அடைக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

2009ஆம் ஆண்டில் 12இற்கும் மேற்பட்டோருக்கு இத்தகைய மோசடியில் தொடர்பிருக்கிறது என டெய்லி டெலிகிராப் பத்திரிகை சுட்டிகாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானில் 350 இளைஞர்களுக்கு தற்கொலைப் படைப் பயிற்சி

பாகிஸ்தானில் 350இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் தலிபான் தற்கொலைப் படைப் பிரிவில் பயிற்சிபெற் றுள்ளனர் என்று அந்த இயக்கத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 3ஆம் திகதி பாகிஸ்தானின் வழிபாட்டுத்தலத்தில் நடந்த தற்கொலைப் படை குண்டு வெடிப்பில் சுமார் 50இற்கும் மேற்பட்டோர் பலியாகினர். இச் சம்பவத்திற்கு காரணமான உமர்பிடாய் என்ற 12 வயது இளைஞரை பொலிஸார் கைது செய்தனர். தொலைக்காட்சி நிகழ்ச்சிக்காக நடத்தப் பட்ட நேர்காணல் நிகழ்ச்சியில் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு:

பாகிஸ்தானின் வடக்கு வசிரிஸ்தான் பகுதியில் தீவிரவாத இயக்கங்கள் அதிகளவில் இயங்குகின்றன. தன்னைப் போன்ற வயதுடைய இளைஞர்களுக்கு மூளைச் சலவை செய்து தீவிரவாத செயல்கள் மூலம் முக்கியமான இடங்களைத் தாக்கும்படி உத்தரவு பிறப்பிக் கப்படுகிறது.

என்னைப்போன்ற இளைஞர்கள் சுமார் 350-பேர் தீவிரவாத இயக்கத்தில் பயிற்சி பெற்றுள்ளனர். மேலும் பலர் பயிற்சி பெற்று வருகின்றனர். நடைபெற்ற சம்பவம் தனக்கு மிகுந்த மனவலி தந்திருக்கிறது. அதனால் பொதுமக்கள் தனக்கு மன்னிப்பு அளிக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

**BUTTERFLY INTERNATIONAL SCHOOL**

Education is Salvation

Main street,
Chankanai

**Sports Meet Invitation**



**Venue :** *Nikarai Vairavar Kovilady out side of temple area, Chankanai*

**Date :** *13.04.2011*

**Time :** *8.30 a.m.*

**Chief guest**
*Hon. K.N.Douglas Devananda*
*(Minister of Traditional industries of small Enterprise Development*

**Guests of Honour**
*Mr. A.Rajendran*
*(Director of Education Valikamam Zone)*
*Mr.Thayakaran*
*(H.N.B. Manager)*
*Mr. Thanapalan*
*(Lecturer Co-dinature College of Edu. Kopay)*
*Mr. Jeganathan*
*(Principal)*

**BUTTERFLY INTERNATIONAL SCHOOL**

(Dr. Maria Montessori of Canadian Early Learning Methord)

Education is Salvation

ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலை எமது செயற்பாடுகள்.

01. Play group montessori, pre school என 3 வகையான பாலர் பிரிவுகள்
02. வசதிமிக்க வகுப்பறை வசதிகள்
03. ஒவ்வொரு மாணவர்களுக்கும் தனிப்பட்ட கவனிப்பு
04. ஆங்கில மொழி மூலம் பயிற்றப்பட்ட அர்ப்பணிப்பு. அரவணைப்பு மிக்க ஆசிரியர் குழாம்.
05. Audio, Vedio, Visual மூலமான கற்பித்தல்.
06. உள்ளக, வெளியக விளையாட்டு உபகரணங்களுடன் கூடிய விளையாட்டு வசதி.
07. வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கு முற்கட்டணம் இலவசம்.
08. போக்குவரத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.
09. பாடவிதானத்துடன் மேலதிகமாக சிங்களம், கணினி வகுப்புக்கள்
10. அனைத்து மாணவர்களும் கலந்து திறமைகளை வெளிப்படுத்தும் விளையாட்டுப் போட்டி, முத்தமிழ் விழா, ஆங்கிலதின விழா, பட்டமளிப்பு விழா.

* புதிய பிரிவு ஆரம்பம் 27.04.2011 அனுமதிகளை இன்றுமுதல் பாடசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.
* சனி, ஞாயிறு தினங்களில் கணிதம், ஆங்கிலம், சுற்றாடல் ஆகிய பாடங்களும் மாலை நேர வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

விவரங்களுக்கு:
BUTTERFLY INTERNATIONAL SCHOOL
Main Street, Chankanai.

T.P: No. 0217912834
0777249678

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவில் கலவரம்: இராணுவம் சுட்டதில் 20 பேர் உயிரிழப்பு!

பெய்ரூத், ஏப். 11

சிரியாவில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கலவரங்களில் இராணுவம் சுட்டத்தில் 20 பேர் உயிரிழந்தனர்.

சிரியாவில் 11 ஆண்டுகளாக ஆட்சி நடத்திவரும் ஜனாதிபதி பஷார் அல்- ஆசாத்துக்கு எதிராக கடந்த மார்ச் மாதம் முதல் பொது மக்கள் போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

இதைத்தொடர்ந்து அரசியல் சட்டத்தை மறுசீரமைப்பு செய்கிறார் என அவர் அறிவித்துள்ளார். ஆனால் அதை மக்கள் ஏற்றுக்கொள்ள வில்லை. அவர் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர்.

அவர்களின் போராட்டத்தை ஒடுக்க ஜனாதிபதி ஆசாத், இராணுவத்தினரையும், பொலிஸாரையும் பயன்படுத்தி வருகிறார். போராட்டம் கலவரமாக மாறியுள்ளது.

வெள்ளிக்கிழமை சிரியாவில் டாரா, டமாஸ்கஸ், ஹராஸ்தா, ஹோம்ஸ் உள்ளிட்ட நகரங்களில் ஆங்காங்கே போராட்டங்கள் நடந்தன. வீதிகளில் திரண்ட லட்சக்கணக்கான மக்கள் ஜனாதிபதிக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பினர்.

இதைத்தொடர்ந்து போராட்டக்காரர்களை ஒடுக்க இராணுவத்தினரும், பொலிஸாரும் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். இதில் 20 பேர் பலியானார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் டாரா நகரில் தான் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். அங்கு மட்டும் 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

டமாஸ்கஸில் 3 பேரும், ஹோம்ஸ் நகரில் ஒருவரும் பலியாகியுள்ளனர். இந்தத் தகவலை சிரியா தேசிய மனித உரிமை அமைப்பின் தலைவர் அம்மர் குராபி தெரிவித்துள்ளார். வெள்ளிக்கிழமை நடந்த வன்முறைக்கு 2 பேர் மட்டுமே பலியாகினர் என அரசு தெரிவித்துள்ளது.

துப்பாக்கிச் சூட்டில் நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். கடந்த 3 வாரத்தில் மட்டும் போராட்டத்தில் ஈடுபட்ட 170 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இதை தடுத்து நிறுத்த வேண்டும் என அமெரிக்க ஜனா திபதி ஒபாமா சிரியா அரசை வலியுறுத்தியுள்ளார். மேலும் இச்சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

# பிரேஸிலில் பாடசாலைக்குள் புகுந்து 7 பேரைச் சுட்டுக்கொன்ற இளைஞன்

நெதர்லாந்து தலைநகர் ஆம்ஸ்டர்டாம் அருகே உள்ள ஆல்பென் ஆன்டென் ரிஜின் நகரில் வணிக வளாகம் உள்ளது. சனிக்கிழமை அங்கு ஏராளமான வர்கள் கூடியிருந்தனர். அப்போது அங்கு வந்த மர்ம நபர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 7 பேர் கொல்லப்பட்டனர்.

அவர் தான் மறைத்து வைத்திருந்த இயந்திர துப்பாக்கியால் வணிக வளாகத்தில் இருந்த பொதுமக்களை கண் மூடித்தனமாக சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டார். இதனால் அங்கு பதற்றமும், பரபரப்பும் ஏற்பட்டன.

வணிக வளாகத்திலிருந்த மக்கள் உயிர் தப்பிக்க அங்கு மிங்கும் ஓடினார்கள். இதற்கிடையே துப்பாக்கியால் சுட்ட மர்ம வாலிபரை பிடிக்க அங்கிருந்த வாசல்கள் அனைத்தும் மூடப்பட்டன. இந்த சம்பவத்தில் 7 பேர் உயிரிழந்தனர். 15 பேர் படுகாயமடைந்தனர்.

தகவல் அறிந்ததும் பொலிஸார் அங்கு விரைந்து வந்தனர். பொலிஸார் வருவதை அறிந்ததும் பொதுமக்களை சுட்டுக்கொன்ற மர்ம வாலிபர் துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டார். அவர் யார்? எந்த ஊரைச் சேர்ந்தவர் எனத் தெரியவில்லை.

ஆனால், அவர் நெதர் லாந்து குடியுரிமை பெற்றவர். ஆல்பென் நகரைச் சேர்ந்தவர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். எதற்காக அவர் துப் பாக்கியால் சுட்டார் எனத் தெரியவில்லை.

இந்தச் சம்பவத்துக்கு நெதர்லாந்து இராணி பியாட்ரிஸ், பிரதமர் மார்க்ரூட் ஆகியோர் கண்டனம் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துள்ளனர்.

## சந்திப்பு......



மியான்மரின் யங்கூன் நகரில் உள்ள புத்த மடாலயத்திற்குச் சென்ற எதிர்க்கட்சித் தலைவி ஆங் சாங் சூகி, இளம் புத்த மதத்துறவிகளின் உணவு பழக்க வழக்கங்களைப் பார்வையிடுகிறார்.

# ஆழிப்பேரலை இடிபாடுகளிடையே பணம்; அதிகாரிகளிடம் ஒப்படைப்பு

ரோக்கியோ, ஏப். 11

ஜப்பானில் பூகம்பம், ஆழிப்பேரலை ஆகியவை ஏற்படுத்திய இடிபாடுகளுக்கு இடையே கண்டெடுக்கப்படும் ரொக்கப் பணத்தை அதிகாரிகளிடம் ஒப்படைத்து வருகின்றனர்.

பூகம்பத்தாலும், அதைத் தொடர்ந்த ஆழிப்பேரலையாலும் பாதிக்கப்பட்ட ஜப்பானில் துயரத்துக்குக் குறைவில்லை என்பது எவ்வளவு உண்மையோ, அதுபோல அங்குள்ள மக்களின் நேர்மைக்கும் குறைவில்லை என்பது தெரிய வந்திருக்கிறது.

இயற்கையின் சீற்றத்தால், இவாத்தே, மியாகி ஆகிய இரு வடகிழக்கு மாகாணங்கள்தாம் மிக மோசமாக பாதிக்கப்பட்ட பகுதிகள். இங்கு அதிகாரிகளும், சாதாரண மக்களும் மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இடிபாடுகளுக்கு இடையிலும், ஆழிப்பேரலையினால் ஏற்பட்ட பெரும் சகதிக்குக் கீழும் ரொக்கமாகப் பணம் கண்டெடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு கண்டெடுக்கப்படும் பணத்தை உடனுக்குடன் அதிகாரிகளிடம் ஒப்படைத்து விடுகிறார்கள் அங்குள்ள மக்கள்.

இதுவரை இலட்சக்கணக்கில் பணம் கிடைத்துள்ளது. சிறு தொகையாக ரொக்கமாக உள்ள பணத்தைத் தவிர, சிறு பணப்பெட்டிகள், பெரிய பணப் பெட்டகங்களும்கூட இடிபாடுகளுக்கு இடையே இருப்பது தெரிய வந்துள்ளது.

இவ்வாறு கிடைக்கும் பணத்தை அவற்றின் சொந்தக்காரர்களைக் கண்டுபிடித்து, அவர்களிடமே திருப்பித் தர அதிகாரிகள் முயற்சித்து வருகின்றனர்.

# அமெரிக்கா நியூஜெர்சியில் ஒருநாள் ஆளுநராக பதவி வகித்த 4 வயது சிறுவன்

நியூஜெர்சி, ஏப். 11

அமெரிக்காவில் உள்ள நியூ ஜெர்சியை சேர்ந்தவர் ஜெஸ்சி சாக்சான். 4 வயது சிறுவனான இவர் தனது தாயுடன் காரில் வெளியில் சென்றிருந்தார். திடீரென மனச்சோர்வடைந்த அவர் காரில் அமர்ந்தபடி அழுது கொண்டிருந்தான்.

இதை பார்த்த அவரது தாய் ஏன் அழுகிறாய் எனக் கேட்டார். அதற்கு அவர் நான் நியூஜெர்சி மாகாண ஆளுநராக வேண்டும் எனதனது ஆசையை தெரிவித்தார்.

உடனே, அவரது தாய், நீ சிறுவனாக இருக்கிறாய். எனவே தற்போது ஆளுநராக முடியாது. வளர்ந்து பெரியவன் ஆனதும் நீயும் ஆளுநர் பதவி வகிக்க லாம் என்றார். ஆனால், சிறுவன் ஜெஸ்சி சாக்சன் கேட்க வில்லை. தொடர்ந்து அழுதபடி அடம்பிடித்தார். பின்னர் ஒரு வழியாக சமாதானம் செய்து அவனது தாய் அழைத்துச்சென்றார்.

இச்சம்பவம் அனைத்தும் யூடியூப் இணையதளத்தில் வீடியோ காட்சியாக ஒளிபரப்பானது. அதை நியூஜெர்சி மாகாணத்தின் தற்போதைய ஆளுநர் கிரிஸ் கிறிஸ்டி பார்த்தார். அச் சிறுவனின் ஆசையை தீர்த்து வைக்க விரும்பினார்.

ஆகவே அவரை நியூ ஜெர்ஸி மாகாணத்தின் ஒருநாள் ஆளுநராக்க முடிவு செய்து அதற்கான ஏற்பாடுகளை செய்தார். பின்னர் சிறுவன் ஜெஸ்சி சாக்சன் ஒரு நாள் ஆளுநராகப் பதவி வகித்தார். இதை அவர் நிருபர்களிடம் தெரிவித்தார்.

தனது தம்பி ஆளுநராகவிருந்த ஹொலிவுட் நடிகர் அர்னால்ட் ஷ்வார்ஷ் நேஷரை போல தானும் ஆளுநராக வேண்டும் என இதுபோன்று அழுது அடம் பிடித்தார் என பலத்த சிரிப்புக்கு இடையே கூறினார்.

'முதல்வன்' சினிமா படத்தில் நடிகர் அர்ஜூன் ஒருநாள் முதலமைச்சராவது போல் நடித்திருந்தார். ஆனால் அமெரிக்காவில் 4 வயது சிறுவன் உண்மையிலேயே ஒரு நாள் ஆளுநராக் பதவி வகித்து பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறார்.

# இஸ்ரேல் விமானம் குண்டு வீச்சு; பலஸ்தீனத்தில் 14 பேர் உயிரிழப்பு

காஷா, ஏப். 11

பலஸ்தீனத்தில் இஸ்ரேல் விமானங்கள் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் 14 பேர் உயிரிழந்தனர். 45 பேர் காயமடைந்தனர்.

பலஸ்தீனத்தில் காஷா உள்ளது. இஸ்ரேல் எல்லையிலுள்ள இப்பகுதி ஹமாஸ் தீவிரவாதிகள் பிடியில் உள்ளது. இவர்கள் சுரங்கப்பாதைகள் அமைத்து இஸ்ரேல் வழியாக ஆயுதங்களையும், போதைப்பொருள்களையும் கடத்துகின்றனர் என முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இஸ்ரேலுக்கும், பலஸ்தீனத்திலுள்ள ஹமாஸ் தீவிரவாதிகளுக்கும் இடையே அடிக்கடி மோதல்கள் ஏற்படுகின்றன. இரு தரப்பினரும் ஒருவருக்கொருவர் மீது அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

கடந்த 7ஆம் திகதி இஸ்ரேலின் நகால் ஆஷ் கிட்புட்ஷ் நகரம் மீது காஷாவிலிருந்து ஹமாஸ் தீவிரவாதிகள் ரொக்கெட் குண்டுகளை வீசி தாக்கினார்கள். இதில் ஒரு குண்டு பாடசாலை பஸ் மீது விழுந்து தாக்கியது.

இதில் 16 வயது மாணவனின் தலையில் படுகாயம் ஏற்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த இஸ்ரேல் பலஸ்தீனத்திலுள்ள காஷா நகரம் மீது விமானங்கள் மூலம் குண்டு வீசி தாக்கியது.

இஸ்ரேல் விமானங்கள் 20 தடவைக்கு மேல் பறந்து வந்து குண்டு வீசின. இத்தாக்குதலில் பல கட்டடங்கள் இடிந்து நொருங்கின. இவற்றில் 14 பேர் உயிரிழந்தனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் அப்பாவி பொதுமக்கள்.

பலியானவர்களில் 5 பேர் தீவிரவாதிகளும், ஒரு பொலிஸ்காரரும் அடங்குவர். இவர்களைத் தவிர 45 பேர் காயமடைந்தனர். அவர்கள் அனைவரும் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே பதிலடி கொடுக்கும் வகையில் இஸ்ரேல் மீது ஹமாஸ் தீவிரவாதிகள் 15 ரொக்கெட் குண்டுகளை வீசினர். இதனால் பெரும் சேதம் ஏற்பட்டது. அதனால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

சமீபத்தில்தான் இரு தரப்பினருக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது. தற்போது அது மீறப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தை இஸ்ரேல் மீறி விட்டது என ஹமாஸ் தீவிரவாதிகள் தரப்பில் கூறப்பட்டுள்ளது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
11 ஏப்ரல் 2011 திங்கட்கிழமை

# காங்கிரஸ்-தி.மு.க. கூட்டணிக்கே வாக்களியுங்கள்

## கோவையில் பிரதமர் வேண்டுகோள்



காங்கிரஸ், தி.மு.க கூட்டணியால் மட்டுமே தமிழகத்துக்கு பிரகாசமான எதிர்காலத்தைக் கொடுக்க முடியும். எதிர்க் கட்சிகளின் பொய்ப் பிரசாரங்களை நம்ப வேண்டாம் என்று பிரதமர் மன்மோகன்சிங் கூறியுள்ளார்.

தி.மு.க கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து கோவை கொடிசியா தொழிற் காட்சிவளாகம் அருகே நேற்றுமுன் தினம் மாலை நடந்த தேர்தல் பிரசாரப் பொதுக் கூட்டத்தில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:

தமிழகத்தின் வளர்ச்சிக்காகவும், மக்களின் நலனுக்காகவும் கடந்த 5 ஆண்டுகளில் காங்கிரஸ் மற்றும் தி.மு.க நல்ல பணியை ஆற்றியுள்ளது.

தமிழகத்தை மாதிரி மாநிலமாக உருவாக்க வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையுடன் முதல்வர் கருணாநிதியின் தலைமையிலான தமிழக அரசு செயலாற்றி இருக்கிறது. ஊரக வளர்ச்சி, வேளாண் விரிவாக்கத்தில் நடந்துள்ள சாதனைகளே இதற்கு உதாரணம்.

மாநிலத்தின் கல்வித்தரம் உயர்ந்திருக்கிறது. ஏனைய மாநிலங்களைக் காட்டிலும் தமிழகத்தில் மாவட்ட நிர்வாகம், நகராட்சி நிர்வாகம் சிறப்பாக இருக்கின்றன.

மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசும், தமிழகத்தில் தி.மு.க அரசும் இணைந்து பணியாற்றி தமிழகத்துக்கு புதிய சாதனைகளைப் பெற்றுத் தந்திருக்கின்றன.

தமிழகத்துக்கு நீண்ட வரலாறும், பாரம்பரியமும் உள்ளன. தமிழ் மொழியின் சிறப்புகளை அளவிட முடியாது. இதை அங்கீகரிக்கும் வகையிலும் தமிழ் மக்களின் 150 ஆண்டுகால எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையிலும் தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தின் வளர்ச்சிக்காகப் பல்வேறு திட்டங்களை மத்திய அரசு செயற்படுத்தி இருக்கிறது. மத்திய அரசின் பல்வேறு கொள்கை, திட்டங்களால் தமிழகம் பெரிதும் பயன் பெற்றிருக்கிறது.

பெண்கள், குழந்தைகள் நலனுக்காக காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி அர்ப்பணிப்போடு செயலாற்றி வருகிறார். உள்ளாட்சி அமைப்புக்களில் பெண்களுக்கு இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல மக்களவையிலும் பெண்களுக்கு இடஒதுக்கீடு கொண்டு வரப்படும். அண்மையில் வெளியான அறிக்கையொன்றில் பல்வேறு பொருளாதார நிபுணர்களைக் கொண்ட குழு தமிழகத்துக்கு முதல் இடத்தை வழங்கியுள்ளது.

தமிழகத்தின் வளர்ச்சிக்கு மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயற்பட வேண்டியது மிக அவசியம். தி.மு.க. காங்கிரஸ் கூட்டணிக்கு வாக்களிப்பதன் மூலமாகவே இது சாத்தியமாகும். காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் சாதனைகள், தி.மு.க. அரசின் சாதனைகளை எண்ணிப் பார்த்து தேர்தலில் தி.மு.க கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டும்.

தமிழக மக்கள் சிந்தித்து வாக்களிப்பீர்கள் என்பதை நான் அறிவேன். எதிர்க் கட்சிகளின் பொய்ப்பிரசாரங்கள், பொய்யான வாக்குறுதிகளை நம்ப வேண்டாம். தமிழகத்துக்குப் பிரகாசமான எதிர்காலத்தைப் பெற்றுத்தர காங்கிரஸ், தி.மு.க கூட்டணிக்கு ஆதரவு அளியுங்கள் என்று அவர் வாக்காளர்களைக் கேட்டுக்கொண்டார்.

# தேர்தல் பிரசாரம் இன்றுடன் நிறைவு; இறுதிக் கட்ட பிரசாரத்தில் தலைவர்கள்

தமிழக சட்டசபைத் தேர்தல் நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெற உள்ளது. இந்த நிலையில் அரசியல் கட்சியினர் பிரசாரம் செய்ய இன்று மட்டுமே கால அவகாசம் உள்ளது.

இன்று மாலை 5 மணியுடன் 234 தொகுதிகளிலும் தேர்தல் பிரசாரம் நிறைவடைகின்றது. அதன் பின்னர் ஒவ்வொரு தொகுதிக்குள்ளும் இருக்கும் வெளிநபர்கள் வெளியேற்றப் படுவார்கள். தொகுதி மாறித் தங்கியிருக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

நாளை முழுமையான அமைதி நிலவச் செய்ய வேண்டும் என்பதில் தேர்தல் ஆணையம் தீவிரமாக உள்ளது. தேர்தல் ஆணையம் வாக்காளர் அட்டைகள் விநியோகித்து விட்டதால் கட்சிக்காரர்கள் வாக்காளர் அட்டைகளை கொடுக்ககூடாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே இறுதி நாளில் வீடு, வீடாகச் சென்று ஆதரவு திரட்டக்கூடாது என்று கூறப்பட்டுள்ளது. பிரசாரம் செய்ய இன்னும் சில மணி நேரங்களே இருப்பதால் தலைவர்கள் இறுதிக்கட்ட வாக்கு வேட்டையில் ஈடுபட்டுள்ளனர். திமுக தலைவர் கருணாநிதி தான் போட்டியிடும் திருவாரூர் தொகுதியில் இன்று கிராமம், கிராமமாகச் சென்று ஆதரவு திரட்ட உள்ளார். துணைமுதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று சென்னையில் முகாமிட்டு பிரசாரம் செய்கிறார்.

அதுபோல அதிமுக பொதுச் செயலாளர் ஜெயலலிதா இன்று சென்னை தொகுதிகளில் வாக்கு வேட்டை நடத்துகிறார். தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் தான் போட்டியிடும் ரிஷிவந்தியம் தொகுதியில் இன்று கிராமம் கிராமமாக செல்கிறார். இன்று மாலை 5 மணிக்கு அவர் ரிஷிவந்தியம் தொகுதியில் பிரசாரத்தை நிறைவு செய்கிறார்.

பா.ம.க நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் செஞ்சி, மயிலம் தொகுதிகளில் தனது இறுதிக் கட்ட பிரசாரத்தை செய்கிறார். காங்கிரஸ் தலைவர் தங்கபாலு மயிலாப்பூர் தொகுதியில் பிரசாரம் செய்ய உள்ளார்.

பிரசாரம் முடிந்த பிறகு நாளைவாகன சோதனை மற்றும் பறக்கும் படையினரின் சோதனை [illegible] தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளது.

### தவறிவிட்டது

5ஆம் வட்டாரம், மண்கும்பான் மேற்கு, வேலணை என்னும் முகவரியுடைய செல்லத்துரை சிவலோகநாதன் என்பவரது தேசிய அடையாள அட்டை (503023890V) மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம், மோட்டார் சைக்கிள் (NP 0708) ஆவணங்கள் அடங்கிய கடித உறை யாழ்/நகரப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இல: 1, பால விநாயகன் ஸ்ரோர், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அல்லது 0776567630, 021 222 0560 இலக்கத் தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் செல்வநாயகம்

(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்)



காரைநகர், அல்லின் வீதியைப் பிறப்பிடமாகவும் தெஹிவளையை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் செல்வநாயகம் கடந்த (09.04.2011) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சின்னத்தம்பி சுப்பிரமணியம் தம்பதியினரின் புதல்வரும் காலஞ்சென்ற தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும் குணமணி, காலஞ்சென்ற நாகேஸ்வரன் மற்றும் தம்பிராசா, செல்வராணி, தேவராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேந்திரன் (R.C.T.M.Vid, Rajagiriya), சிவரஞ்சினி, சந்திரவதனா, செந்தில்ராஜா மற்றும் ராஜ்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற கோபிநாத் மற்றும் பிரணவநாத், நிலன், நந்தினி, நந்துஜன், வினோதன், ராகவன், கீர்த்திகா, ராஜி, கணேசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 10.04.2011 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணியிலிருந்து கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இன்று (11.04.2011) திங்கட்கிழமை காலை 8 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று மு.ப.10 மணிக்கு கல்கிசை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திரு. திருமதி மகேந்திரன்,
திருமதி சிவரஞ்சினி நாகேஸ்வரன்.

(40,20,25)(சி/577492)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 16 ★ 01 ★ 1916



மறைவு 12 ★ 03 ★ 2011

### அமரர் நாகநாதர் சுப்பையா

கடந்த 12.03.2011 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (11.04.2011) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புதுவீதி,
ஆறுகால்மடம்.

குடும்பத்தினர்

(2510) (45)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### சுப்பிரமணியம் கந்தசாமி

தோற்றம் 1953.01.22
மறைவு 2009.04.02

கண்ணுக்குள் மறையவில்லை உங்கள் முகம்
நெஞ்சைவிட்டு அகலவில்லை உங்கள் நினைவு
ஆண்டுகள் தான் சென்றாலும் எம் வாழ்வில்
உங்கள் அன்பு எம்மை விட்டு நீங்காது!

ஆத்ம சாந்திக்காக இறைவனை
வேண்டுகின்றோம்.

கச்சாய் தெற்கு, கொடிகாமம்.

குடும்பத்தினர்.

(40,20,25)(சி/577493)

## எம் விழுதின் 31ஆம் நாள் நினைவு அழைப்பு



கடந்த 14.03.2011 திங்கட்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது செல்லப்பிள்ளை

### அமரர் ரேணுகா பிள்ளைநாயகம்

(புங்குடுதீவு 5ஆம் வட்டாரம்)

அவர்களின் சிவபேறு குறித்த
அந்தியேட்டிக் கிரியைகள்
இன்று (11.04.2011) திங்கட்கிழமை
காலை 8 மணிக்கு
கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும்,
வீட்டுக்கிருத்தியம்
13.04.2011 புதன்கிழமை
முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்திலும்
நடைபெற இருப்பதால் அத்தருணம்
தாங்கள் வருகைதந்து
அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்,
அதனைத் தொடர்ந்து
நடைபெறும் மதியபோசனத்திலும்
கலந்துகொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

ஸ்ரேசன் வீதி, கோண்டாவில்,
யாழ்ப்பாணம்.
0776163349, 0213207602

குடும்பத்தினர்.

(39-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிப்பெரும்பான்மை கிடைக்காவிடினும் கூட்டணி ஆட்சி தான் சரியான தீர்வு



## கருணாநிதி பேட்டி

சென்னை, ஏப். 11

தி.மு.க. தலைமையிலான ஜனநாயக முற்போக்கு கூட்டணி அமைந்துள்ளதன் நோக்கமே நல்லாட்சி தருவதுதான். எமது கூட்டணியில் எந்த கட்சிக்கும் தனித்து ஆட்சி அமைக்கும் அளவுக்கு தனிப் பெரும்பான்மை கிடைக்காவிட்டால் கூட்டணி ஆட்சி அமைப்பது தான் சரியான தீர்வாக இருக்கும். இவ்வாறு கூறியுள்ளார். முதலமைச்சர் கருணாநிதி.

ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அவர் அளித்த சிறப்புப் பேட்டியின் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பேட்டியின்போது அவர் மேலும் கூறி இருப்பதாவது:

கூட்டணி ஆட்சியில் எந்த தவறும் இல்லை. எதிர்கால சூழ்நிலைக்கு ஏற்ப இது பற்றி முடிவு செய்யப்படும். தி.மு.க. கூட்டணி மீண்டும் ஆட்சிக்கு வந்தால், அடுத்த 5 ஆண்டுகளுக்கு நான் முதல்வர் பணியை செய்வேன்.

முதல்-மந்திரி பதவியை மீண்டும் ஏற்றவுடன், எந்த அரசாணையில் முதன், முதலாக கையெழுத்திடுவேன் என்பதை இப்போதே சொல்ல இயலாது. மு.க. ஸ்டாலினுக்கும், மு.க. அழகிரிக்கும் ஏதோ பெரிய மோதல் இருப்பது போல சிலர் கற்பனையாக தகவல் பரப்புகிறார்கள். உண்மையில் அவர்களுக்கிடையே எந்த பிரச்சினையும் இல்லை.

ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் சில பத்திரிகைகள் வேண்டும் என்றே அந்த விவகாரத்துடன் எனது குடும்பத்தினரை தொடர்புபடுத்துகிறது. அது தவறான பிரசாரம். இதனால் மக்கள் மனதில் ஏற்பட்டுள்ள சந்தேகங்களை சி.பிஐ. விசாரணை முடிவு தீர்த்து வைக்கும் என்று நம்புகிறேன்.

இந்த விவகாரத்துக்காக என் குடும்பத்தினருடன் சி.பி.ஐ. விசாரணை நடத்தியதற்காக நான் கவலைப்படவில்லை. பீகார் மாநிலத்தில் சமீபத்தில் நடந்த சட்டசபைத் தேர்தலில், சிறப்பான ஆட்சியையும், அந்த ஆட்சியின் சாதனைகளையும் கருத்தில் கொண்டே மக்கள் வாக்களித்தார்கள். தமிழ் நாட்டு மக்களும் அது போல அரசின் சாதனைக்காக தி.மு.க.வுக்கு வாக்களிப்பார்கள். தி.மு.க. அரசின் சாதனைகளை மக்கள் நிச்சயம் புறக்கணிக்க மாட்டார்கள்.

தமிழ்நாடு முழுவதும் எமது கட்சியினர் சிறப்பாக பிரசாரம் செய்துள்ளனர். எமது தேர்தல் பிரசார சுற்றுப்பயணத் திட்டம் முன்பே திட்டமிடப்பட்டுவிட்டது.

பிரதமர் தமிழகம் வருகை தந்தது எமக்கு மிகவும் தாமதமாகத்தான் தெரிய வந்தது. எனவே தான் பிரதமர் மன்மோகன் சிங்கின் கோவை தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் எங்களால் கலந்து கொள்ள இயலவில்லை. மற்றபடி வேறு எந்தக் காரணமும் இல்லை.

காங்கிரஸ் கட்சிக்கு 63 தொகுதிகள் கொடுத்ததன் மூலம் கூட்டணியில் இறுக்கம் ஏற்பட்டதாக ஒரு சேவையில் தகவல் வெளியானது. இதற்காக தி.மு.க.-காங்கிரஸ் உறவு துண்டிக்கும் நிலைக்கு சென்றது என்று கூறப்படுவதில் உண்மை இல்லை.

தொகுதிப் பங்கீடு தொடர்பாக பேச்சு நடக்கும் போது கூட்டணிக் கட்சிகளிடம் மாறுபட்ட கருத்துகள் தோன்றுவது இயற்கைதானே. பல மாநிலங்களில் தொகுதி பங்கீட்டு பேச்சால் கூட்டணி முறிவதும், பிறகு சேர்வதும் நடந்துள்ளன.

காங்கிரஸுடனான எமது உறவு ஒரு போதும் உடையாது. முன்னைய தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் தற்போதைய தேர்தலில் மக்களிடம் எழுச்சி குறையவில்லை. சமீபத்தில் எமது கூட்டணி சார்பில் விழுப்புரத்தில் நடந்த கூட்டத்துக்கு எதிர்பார்த்ததையும் விட மக்கள் அதிக அளவில் திரண்டார்கள்.

தேர்தல் பிரசாரத்தின் போது தனிப்பட்ட முறையில் யாரையும் நான் தாக்கிப் பேசுவது இல்லை. ஆனால் ஜெயலலிதா என் மீது விமர்சனம் செய்கிறார். ஜெயலலிதா என் மீதும், என் குடும்பத்தினர் மீதும் கூறி வரும் குற்றச்சாட்டுக்களில் எந்த அளவுக்கு உண்மை இருக்கிறது என்பது பொது மக்களுக்கு நன்கு தெரியும்.

அரசின் நலத்திட்டங்கள் மூலம் முதலமைச்சரின் குடும்பம் மட்டுதான் பயன் அடைந்ததா? எங்களது ஒவ்வொரு நலத்திட்டம் மூலம் பல லட்சம் குடும்பங்கள் பயன் அடைந்துள்ளன என்பது எனக்குத் தெரியும். நான் எழுதி உழைத்தது ஏராளம். அவை எல்லாம் நலத்திட்ட நோக்கத்துக்காகவும் ஏழைகள் நலனுக்காகவும் கொடுத்து விட்டேன். என்னுடைய குடும்பத்தினர் யாருக்கும். கொடுக்கவில்லை. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### கருணாநிதி பற்றி அவதூறுப் பேச்சு:

## தேர்தல் ஆணையத்திடம் அ.தி.மு.க, தே.மு.தி.க. விளக்கம்

சென்னை, ஏப். 11

முதலமைச்சர் கருணாநிதி பற்றியும், அவரது குடும்பத்தினர் பற்றியும், ஜெயலலிதா, விஜயகாந்த் இருவரும் தனிப்பட்ட முறையில் விமர்சித்துப் பேசுவதாகக் கூறப்பட்டது.

இது தொடர்பாக தி.மு.க. நிர்வாகிகள் பொன்.முத்து ராமலிங்கம், கே.எஸ்.ராதாகிருஷ்ணன் இருவரும் தேர்தல் ஆணையத்திடம் முறையிட்டு மனுக்கொடுத்தனர்.

அந்த மனுவை ஏற்றுக் கொண்ட தேர்தல் ஆணையம் ஜெயலலிதா, விஜயகாந்த் இருவருக்கும் கடந்த வியாழக்கிழமை நோட்டீஸ் அனுப்பியது. அன்று மாலை 5 மணிக்குள் விளக்கம் அளிக்க வேண்டும் என்று அதில் கூறப்பட்டிருந்தது.

ஆனால் விளக்கம் அளிக்க இரு கட்சிப் பிரதிநிதிகளும் அவகாசம் கேட்டனர். அதை ஏற்று நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலைக்குள்பதில் அளிக்க தேர்தல் ஆணையம் கால அவகாசம் அளித்தது.

இதற்கிடையே தி.மு.க. அளித்த முறையீட்டு மனு தொடர்பாக அ.தி.மு.க., தே.மு.தி.க. இரு கட்சிகளும் விளக்கம் அளித்து விட்டமை தெரிய வந்துள்ளது. அ.தி.மு.க. சார்பில் தேர்தல் ஆணையத்திடம் நேற்று முன்தினம் விளக்கம் கொடுத்தது.

தே.மு.தி.க. சார்பில் கடந்த கடந்த வெள்ளிக்கிழமை விளக்கம் அளிக்கப்பட்டது. இந்த விளக்கங்களை தேர்தல் ஆணையம் ஆய்வு செய்து வருகிறது.

இரு கட்சிகளின் விளக்கங்களுக்கு ஏற்ப தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்கும் என்று தலைமைத் தேர்தல் அதிகாரி பிரவீண்குமார் தெரிவித்துள்ளார்.

### உறவு நிலைக்குமா..?




தமிழக சட்டசபைத் தேர்தலுக்கான, காங்கிரஸ் தேர்தல் அறிக்கையை மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி, சென்னை சத்தியமூர்த்தி பவனில் நேற்று முன்தினம் வெளியிட்டு வைக்க தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலு, அதனைப் பெற்றுக் கொள்கிறார்.



## தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் தமிழகத்தையே கூறுபோட்டு விற்றுவிடுவார்கள் - விஜயகாந்த்

தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தமிழகத்தையே கூறு போட்டு விற்று விடுவார்கள். அந்தத் தவறை வாக்காளர்களாகிய நீங்கள் செய்யமாட்டீர்கள் என்று நம்புவதாக தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் தெரிவித்தார்.

விழுப்புரத்தில் அ.தி.மு.க. வேட்பாளர் சி.வி. சண்முகம், விக்கிரவாண்டி தொகுதி மாக்சிஸ்ட் கட்சி வேட்பாளர் ஆர். ராமமூர்த்தி ஆகியோரை ஆதரித்து விழுப்புரம் பழைய பஸ் நிலையம் அருகில் பிரசார வானில் இருந்தபடி அவர் பேசியது:

விழுப்புரத்தில் பொன்முடி ஒரு குட்டி சாம்ராஜ்யமே நடத்தி வருகிறார். தெய்வசிகாமணி என்ற அவர் 1989 இல் வாத்தியாராக இருந்தவர். இன்று இந்த அளவுக்கு சொத்துக் குவித்திருக்கிறார். அவர்களுக்கு வாக்குப் போட்டால் தமிழகத்தை விற்று விடுவார்கள்.

மக்கள் மனம் வைத்தால் சி.வி. சண்முகத்தை வெற்றிபெறச் செய்து, பொன்முடியைத் தோற்கடிக்கலாம். அப்பா முதல்வர் (கருணாநிதி), பிள்ளை துணை முதல்வர் (ஸ்டாலின்), அப்பாவுக்கு 1000 பொலிஸ், பிள்ளைக்கு 500 பொலிஸ்பாதுகாப்பு.

அடுத்த 5 ஆண்டுகள் வீட்டில் உட்காரப் போகிறீர்கள், அப்போது உங்கள் பின்னால் எவ்வளவு பேர் வரப்போகிறார்கள் என்று பார்ப்போம்.

தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் அவரது குடும்பமும், அமைச்சர்களும் 30 முதல் 3000 ஏக்கர் வரை கொள்ளையடித்து வைத்திருக்கிறார்கள். அதைப் பிரித்துக் கொடுத்தால் தமிழகத்தில் உள்ள எல்லோருக்கும் 2 ஏக்கர் நிலம் தந்திருக்கலாம், விலைவாசியை கட்டுப்படுத்தியிருக்கலாம்.

ஒருகிலோ அரிசி ஒரு ரூபா என்கிறார்கள், குழம்புச் செலவுக்கு யார் பணம் தருவது? அந்தளவுக்கு விலைவாசி உள்ளது. இலங்கையில் குண்டு போட்டார்கள் என்று கடற்கரையில் கட்டிலை போட்டு, தலையணை வைத்து படுத்துக் கொண்டார் கருணாநிதி. சிதம்பரம் வந்து சொன்னதும், போர் நின்றுவிட்டது என்று வீட்டுக்குப் போய்விட்டார். ஆனால் அங்கு குண்டு போட்டுக் கொண்டே இருந்தார்கள். கேட்டால், மழை விட்டாலும், தூவானம் விடாது என்றார்.

விஜயகாந்தைப் பிரித்து தி.மு.க.வில் சேர்த்து விடலாம் என்று ஒரு ரி.வி. எவ்வளவோ பொய்ப் பிரசாரம் பரப்பியது. ஆனால், மானசீக குரு எம்.ஜி.ஆரின் கட்சியில் சேர்ந்துள்ளேன். விஜயகாந்த் பணம் வாங்கிவிட்டான் என்று 2000 உளவுத்துறை பொலிஸ் வைத்து பிரசாரம் செய்தார்கள்.

கடந்த 5 ஆண்டுகளாக கருணாநிதி செய்ததை தவறு என்று பா.ம.க. சொன்னது. டாஸ்மாக்கடைகளை பூட்டுவோம் என்றார்கள். தி.மு.க. ஆட்சிக்கு பூச்சியம் போட்டார்கள். இப்போது தி.மு.க. கூட்டணிக்கு பூச்சியம் தானா? ராமதாஸ் பதில் சொல்லட்டும்.

பொன்முடி, இது சமூக நீதி காத்த கூட்டணி என்கிறார். இது சமூக நீதி கெடுத்த கூட்டணி. ராமதாஸ் மகன் அமைச்சராக மக்களை பலிகொடுக்கிறார். மருத்துவச் சிகிச்சை பெற பார்வதியம்மாள் அநாதையாக வந்தார்.

அவரை தமிழகத்தில் இறங்க விடாமல் செய்தார் கருணாநிதி, அவருடன் சேர்ந்திருக்கிறார் திருமாவளவன். ராஜபக்ஷவுடன் கைகுலுக்கி, விருந்து சாப்பிட்டவர் தானே அவர். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூபா - 60 இல் இருந்து

கண்ணாடிக் குவளைகள் குறைந்த செலவில்



டயிடஸ் ஸ்டோஸ்
புறக்கோட்டை லிபட்டி பிளாசா
2439422

## கண்ணீர் அஞ்சலி



09.04.2011 அன்று அமரத்துவம் அடைந்த எமது கல்லூரியின் முன்னாள் அதிபர்

**சோமசுந்தரம் சோமசேகரம்**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்
யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி.

(2541)(41)

## அறிவித்தல்

கருகம்பனை கவுணாவத்தை வையிரவர் ஆலயம் 06.05.2011 கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு திருவருள் பாலித்துள்ளது. ஆகையால் திருப்பணி வேலைகளுக்கு அடியார்கள் பணமாகவோ பொருளாகவோ உதவி செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

திருப்பணிச்சபை.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பிரேமநிதி இராசேந்திரம்



வட்டு மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வட்டு தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிரேமநிதி இராசேந்திரம் 08.04.2011 வெள்ளிக்கிழமை அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி (C.T.B) மற்றும் இராசமலர் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கண்ணுத்துரை மற்றும் இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும் இராசேந்திரனின் (அத்தான்) அன்பு மனைவியும் சுதர்சன் (லண்டன்), நிரோசன், நிலக்ஷன் (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ராதாகிருஷ்ணன், ரஞ்சன் (கனடா), மோகனதாஸ் (சுவீடன்), விஜயதாஸ் (லண்டன்), சற்குணராசா (லண் டன்), செல்வமலர் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் புஸ்பலதா, வாணி, சிவ்மலர், வதசலா, ஜெயமதி, வசீகரன், தெய்வேந்திரம் காலஞ்சென்றவர்களான மகேந்திரம், சாந்தி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2011) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை.
0213211384

(39-20-25)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி நாகராசா புவனேஸ்வரி



வேலணை கிழக்கு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகராசா புவனேஸ்வரி நேற்று (10.04.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நாகராசாவின் அன்பு மனைவியும் குகேந்திரராசா (வேலணை பிரதேச செயலகம்), குகநாதன் (பிரதேச வைத்தியசாலை, புங்குடு தீவு), சிறிபாலசுப்பிரமணியம் (கொழும்பு), ரதி ஆகி யோரின் அன்புத் தாயாரும் சுதாந்தினி, ஜெயராணி, சர்மிளா ஆகியோரின் அன்பு மாமியாரும் விந்துசா, விஷ்னுகா, கருணிகா, யதுசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.04.2011) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

4ஆம் வட்டாரம்,
வேலணை கிழக்கு.

(39-23-25)

தகவல்:
குடும்பத்தினர்.

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப். 11

இணுவில் - மருதனார்மடம் சுந்தர ஆஞ்சநேயர் கோயில் ஸ்ரீ ராம நவமி உற்சவ பஞ்சரத்ன கீர்த்தனை ஆராதனை விழா நாளை செவ்வாய்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு சங்கற்பமும் 8.30 மணிக்கு பஞ்சரத்ன கீர்த்தனை பாராயணங்களும், 9.30 மணிக்குதிரவிய அபிஷேகம், நவகலச அபிஷேகம் ஆகியனவும் இடம்பெறும்.

அதனைத்தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு விசேட பூசை, சகஸ்ரநாம அர்ச்சனை ஆகியன இடம்பெறும். (ற)

***

அளவெட்டி மேற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை செவ்வாய்க்கிழமை ஸ்ரீ ராமநவமி விழா நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசை ஆரம்பமாகி 9 மணிக்கு விசேட சமயச் சொற்பொழிவும் இடம்பெறும்.

முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத்தொடர்ந்து ஸ்ரீராம சுவாமி வீதியுலா வருவார்.

***

மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழ கடந்த வியாழக்கிழமை கெடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து நடைபெற்றுவரும் இந்தத் திருவிழாவில் எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை காலை தேர்த்திருவிழாவும் மாலை தீர்த்தோற்சவமும் இடம் பெறம். (ற-100)

## தவறிவிட்டது

கற்சிலைமடு, ஒட்டுசுட்டான் என்னும் முகவரியுடைய ரூபமூர்த்தி பிரகாஷ் என்பவரின் தேசிய அ.அ.(851384634 V) மற்றும் ATM அட்டை என்பன அடங்கிய பேர்ஸ் யாழ்ப்பாணம் பாரதி வீதியிலிருந்து ஸ்ரான்லி வீதி ஊடாக கஸ்தூரியார் வீதியிலுள்ள கிருபா லேணர்ஸ் வரையான இடைவெளியில் தவறிவிட்டது. தொடர்பு: 0771268182 அல்லது ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இல.328, S.D.S. கணினி விற்பனை நிலையத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

## காணி விற்பனைக்கு

உடுப்பிட்டி தெற்கு, வீரபத்திரர் கோயிலடிக்கு அருகில் காணி விற்பனைக் குண்டு.

தொடர்பு:
இ.அபிராமி - 0771847616

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக்கழக பாதுகாப்புத் திணைக்களத்தில் 03.03.1976 இல் இருந்து பாதுகாப்பு உத்தியோகத்தராக முப்பத்தைந்து (35) வருடங்களுக்கு மேலாக சேவையாற்றி 08.04.2011 அன்று சேவையில் இருந்து ஓய்வுபெற்ற

**கே. அருளானந்தம்**

அவர்களுடைய சேவையினைப் பாராட்டி வாழ்த்துவதுடன் தனது ஓய்வுக் காலத்தில் குடும்பத்துடன் சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ மனமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
**பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிசங்கம்**

பாதுகாப்புத் திணைக்களம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(39-23-25)

# சிறுவர்களுக்கு....

(16,17 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன் நிலைகளை இனங்காணவும் அதற்கு ஏற்ப செயல்நிலைகளை முன்னெடுக்கவும் ஊடக தகவல் அறிவு அடிப்படையாகின்றது.

**ஊடகத் தகவல் அறிவின் வெளிப்பாடு**

ஊடகத் தகவல் அறிவு சிறுவர் மத்தியில் ஏற்படுத்தப்படுமாயின் அவர்களிடம் விழிப்புணர்வுள்ள ஊடகப் பெறுநருக்குரிய துலங்கல் வெளிப்பாடுகளை இனங்காண முடியும். அழகியல், இரசனைக்குரிய நிகழ்ச்சிகள், அறிவு பூர்வமான நிகழ்ச்சிகள், செய்திகள், அறிவியல் ஒலி, ஒளிபரப்புகள், பாடல்கள் ரசித்தல், வயதுக்குப் பொருத்தமான நிகழ்ச்சிகளைத் தெரிதல், அவற்றை ரசித்தல் தன்மைகள் உருவாகும். பயனுள்ள பொழுது போக்கை உருவாக்கும் தகைமைகள் உருவாகும். ஊடகங்களைத் தெரியவும் அவற்றை யதார்த்த பூர்வமாக உள்வாங்கும் உளப்படிமங்கள் கட்டியெழுப்பப்படும் உணர்திறன்மிக்க ஊடகத் தகவல் மையங்களை அறியும் ஆளுமை விருத்திகள் உருவாக்கப்படும். மொத்தத்தில் ஊடக ஆய்வு விமர்சனம், பகுப்பாய்தல் திறன்கள் வெளிக்காட்டப்படும்.

## தூபவி வாழ்க்கைத்திறன் பயிற்சி மையம்

LEADS நிறுவன அனுசரணையோடு தூபவி வாழ்க்கைத்திறன் பயிற்சி மையத்தால் நடத்தப்பட்ட பயிற்சி நிறைவின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கண்காட்சியும்.

**காலம்:** இன்று (11.04.2011) திங்கட்கிழமை பி.ப. 3 மணி

**இடம்:** டாக்டர் தயா சோமசுந்தரம் இல்லம், உடுவில் மருதனார்மடம் வீதி, உடுவில்.

ஆக்கத்திறன் கண்காட்சியானது, செவ்வாய் மற்றும் புதன் (ஏப்ரல் 12, 13) ஆகிய நாள்களில் காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை நடைபெறும்.

இறுதி நாளாகிய புதன் அன்று காட்சிப் பொருள்கள் விற்பனைக்கு வைக்கப்படும்.

அனைவரது ஆதரவையும் வரவையும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

நிர்வாகம்,
தூபவி நிறுவனம்,
உடுவில்.

LEADS
யாழ்ப்பாணம்.

விளம்பர அனுசரணை,
**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்,**
**212, 214, K.K.S. Rd, Jaffna.**

(39-20-23)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்மகிழ
10.08.1945

மனம்நெகிழ
12.03.2011

அமரர்
**கதிரவேலு சரஸ்வதி**

ஆறாது ஆறாது அழுதாலும் ஆறாது
தீராது தீராது எம்துயரம் தீராது
மாறாது மாறாது உம் நினைவு மாறாது
போகாது போகாது உங்கள் திருமுகம் போகாது
வராது வராது உம் சிரிப்பு எவர்கும் வராது
அழியாத நினைவுகளுடன், ஆறாத துயரத்துடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

நிரந்: மாவை கலட்டி,
தெல்லிப்பளை.
தி.மு: விநாயகர் ஒழுங்கை,
இருபாலை.

... நினைவுகளும்..
கணேசன் குடும்பம்
(மைத்துனர்)

**TOYOTA COROLLA AXIO**

வைத்தியர் ஒருவர் பயன்படுத்தி வரும் மேற்படி யப்பான் சொகுசு கார் உடனடி விற்பனைக்கு. இன்று (11.04.2011) யாழ்ப்பாணத்தில் பார்வையிடலாம். மேலதிக விவரங்களுக்கு: 0718199676

**கோழிக் குஞ்சு விநியோகம்**

35 நாளில் 2Kg க்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய BAHIRA புறொயிலர் குஞ்சுகள் 13.04.2011 விநியோகிக்கப்படும்
**ராஜீவ்**, நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
T.P- No. 021 2222867, 077 6090926
(2512) (45)

**விற்பனைக்கு**

PF.xxxx தொடரிலக்கமுடைய Super GL. அதி சொகுசு வான் விற்பனைக்கு.
T.P: No. 0776090926

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், வேம்படி றோட்டில், பிரபல்யமான பாடசாலைகள் மற்றும் பிரதான வர்த்தக, அரச அலுவலகங்களுக்கு அண்மையில், கடை/ வீடு கட்ட அமைவான ஒரு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0750392152

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ்ப்பாணக் கல்லூரி நடத்திய

# 'ருவென்ரி - 20' கிரிக்கெட்டில் 22 பாடசாலைகளின் அணிகள்

வலி.வடக்கு,ஏப்.11

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் அகில இலங்கை நட்புப் பாடசாலை அணிகளுக்கிடையே ஏற்பாடு செய்யப்பட்ட 'ருவெண்ரி -20' கிரிக்கெட் போட்டியில் என்றும் இல்லாதவாறு அதிக எண்ணிக்கையான பாடசாலை அணிகள் கலந்துகொண்டுள்ளன.

யாழ். மாவட்டப் பாடசாலை அணிகள் தவிர்ந்து ஏனைய மாவட்ட அணிகளும் குறிப்பாகத் தென் இலங்கை அணிகளும் இந்தப் போட்டியில் கலந்து கொண்டுள்ளன.

கடந்த காலங்களில் இடம்பெற்ற இந்தப் போட்டிகளில் யாழ். மாவட்ட அணிகள் மட்டுமே கலந்து கொண்டன. இவ்வாண்டு முதல் அகில இலங்கை ரீதியில் நடைபெறும் இந்தப் போட்டியில் 22 பாடசாலை அணிகள் கலந்து கொண்டுள்ளன.

இந்தப் போட்டிகளில் கலந்து கொண்டுள்ள பாடசாலை அணிகளின் விவரம் வருமாறு:-

மன்னார் சென்.சேவியர் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கண்டி சையினஸ் சென்.ரேர்ஸ் கல்லூரி, சிலாபம் சென்.மேரிஸ் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, அம்பாறை டீ.எஸ். சேனநாயக்கா கல்லூரி, கொழும்பு ஆனந்தாக் கல்லூரி, யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி, கண்டி ரினிற்றி கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி, ஹற்றன் சென்.ஜோன் பொஸ்கோ கல்லூரி, அரியாலை கனகரத் தினம் மத்திய மகாவித்தியாலயம், குருநாகல் வயம்ப றோயல் கல்லூரி, அனுராதபுரம் மத்திய கல்லூரி, கொழும்பு இசிப்பத்தான கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி.

காலி வித்தியலோகா கல்லூரி, யாழ்ப்பாணம் நவீல்ட் பாடசாலை, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

(த-86)

## விளையாட்டுப்போட்டி

நெடுந்தீவு, ஏப்.11

நெடுந்தீவு உதவி அரச அதிபர் பிரிவுக்கான விளையாட்டுப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நெடுந்தீவு உதவி அரச அதிபர் மு.நந்தகோபாலன் தலைமையில் இடம்பெறவுள்ளன. (ம-7)

## சதுரங்கப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப்.11

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளின் 15,19 வயதுப் பிரிவினர்களுக்கான சதுரங்கப் போட்டி நாளை செவ் வாய்க்கிழமை யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

(த-23)

## மஞ்சி வெற்றிக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டம் நாவலப்பிட்டியில்

யாழ்ப்பாணம், ஏப்.11

மஞ்சிக் கிண்ணத்துக்கான தேசிய மட்டக் கரப்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 23 ஆம், 24ஆம் திகதிகளில் நாவலப்பிட்டி நகர சபை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் யாழ்.மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஆண்கள் பிரிவில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம், ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் ஆகியன பங்கு பற்றுகின்றன.

பெண்கள் பிரிவில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம், கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக்கழகம் ஆகியனகலந்துகொள்ளவுள்ளன.

(த-23)



இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவினர்களிடையே நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் முதலிடத்தைப் பெற்ற தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணிக்கு வெற்றிக் கிண்ணத்தை யாழ். லீக்கின் தலைவரும் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் உப அதிபருமான கிளிபேட் அன்ரனிப்பிள்ளையும் இரண்டாமிடத்தைப் பெற்ற ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி அணிக்கான சான்றிதழையும், பந்தினையும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் திருமதி அனந்தசயனனும் வழங்குகின்றனர்.

(த-23)

## மைதானம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.11

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினர் வித்தியாலய மைதானத்தை இரண்டு லட்சம் ரூபா செலவில் புனரமைத்து 400 மீற்றர் ஓட்டப் பந்தயத்துக்குரிய மைதானமாக மாற்றியுள்ளனர்.

25 வருடங்களின் பின்னர் பெரிய இயந்திரங்கள் மூலம் மைதானம் துப்புரவு செய்யப்பட்டதாகச் சங்கச் செயாளர் பொன். தர்மேந்திரன் தெரிவித்தார்.

(த-207)

## மானிப்பாய் பரிஷ் அணியை வென்றது ஸ்ரீகாமாட்சி வி.க

யாழ்ப்பாணம், ஏப்.11

யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 9 ஆவது தடவையாக நடத்தும் வீ.டி.ஜெயரட்ண சிங்கம் வெற்றிக்கிண்ணத்துக்கான 50 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் ஆட்டம் ஒன்றில் யாழ்.நாச்சிமார் கோயிலடி ஸ்ரீ காமாட்சி கழகம் 3 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றது.

கடந்த வாரம் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழக அணி 32.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 143 ஓட்டங்களைப் பெற்றது.

இதில், திலக் 28 ஓட்டங்களையும், சாத்வீகன் 25 ஓட்டங்களையும், கோபி 22 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்து வீச்சில் ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக்கழக அணி வீரர்களான சர்வா 5 விக்கெட்டுக்களையும் றம்மிய ராகுலன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

144 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக்கழக அணி 24:1 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 148 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சர்வா 31 ஓட்டங்களையும் மோகன் 19 ஓட்டங் களையும் அரவிந்தன் 22 ஓட்டங்களையும் றதீஸன் 25 ஓட்டங்களையும் எஸ்.றம்மியராகுலன் ஆட்டம் இழக்காமல் 23 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.

(த-23)

## வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சையில் சித்தி பெற்றோர்

யாழ்ப்பாணம், ஏப்.11

அகில இலங்கை வலைப்பந்தாட்டச் சம்மேளனத்தால் யாழ். மாவட்டத்தில் நடத்தப்பட்ட ஏ.பி.சி தர வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் விவரம் வருமாறு-

தரம் 'ஏ' பி.பார்த்தீபன், கே.கனகராசா.

தரம் 'பி' எஸ்.வசந்தகுமார், பி.ஜெயகரன், பி.தணிகைவேல், ஐ.சசிக்குமார், எம்.மதிவதணன், எஸ். சாள்ஸ், எஸ்.மனோன்மணி, வி.சிவசிறி, பி.முகுந்தன், எஸ்.யசிதரன்.

தரம் 'சி' ஆர்.யுகராஜ், ரி.ஜெயதீசன், ஐ.இந்துக்கான், எஸ். தயானி, எம்.வினோகாந்தன், எஸ். செல்வரதன்.

இவர்களுக்கான சான்றிதழ்கள், பதக்கம் வழங்கும் வைபவம் கடந்த வாரம் கொழும்பில் இடம்பெற்றது.

இதில் இலங்கை வலைப்பந்தாட்டச் சங்கத் தலைவி டிசா.டி.சில்வா.சந்திரசேன, விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அழுத்கமகே, யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவி திருமதி ஏ.எவ்.ஜே. ரூபசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-23)

## உதைபந்தாட்டப் போட்டியில் அணிகளுக்கிடையே கைகலப்பு

தென்மராட்சி, ஏப்.11

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் கலந்து கொண்ட அணிகளுக்கிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடு கைகலப்பு வரை சென்றுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இறுதி ஆட்டத்தில் மட்டுவில் தெற்கு வளர்மதி விளையாட்டுக்கழகமும் நாவற்குழி அன்னை விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

போட்டியின் இறுதி 5 நிமிடங்களில் வளர்மதி விளையாட்டுக் கழகம் இரண்டு கோல்களையும் அன்னை விளையாட்டுக் கழகம் ஒருகோலையும் பெற்றிருந்த வேளையிலேயே இந்தக் கைகலப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கைகலப்பு கட்டுப்பாட்டை மீறவே விழா ஏற்பாட்டாளர்கள் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்தனர். உடனடியாகச் சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். (த-288)

## வலிகாமம் வலய வலைப்பந்தாட்டம்; தெல்லிப்பழை யூனியன் சம்பியன்

வலி.வடக்கு,ஏப்.11

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்ற 17 வயதுப்பிரிவினருக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வலயச் சம்பியானகியது.

மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மோதிக்கொண்டன.

போட்டியின் இறுதி நிமிடம் வரை இரு அணிகளும் உற்சாகத்துடன் மோதிக் கொண்டமை பார்வையார்களை மிகவும் கவர்ந்தது.

முதல் பாதி ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி காட்டிய ஆர்வம் இரண்டாவது பாதி ஆட்டத்தில் காணப்படவில்லை. முதல் பாதி ஆட்ட நிறைவில் யூனியன் கல்லூரி 10:7 என்ற புள்ளிகள் அடிப்படையில் காணப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் யூனியன் கல்லூரி எதிர்பார்த்த அளவு வேகத்தைக்காட்டாத நிலையில் ஆட்டம் 8:6 என்ற புள்ளிகளுடன் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 18:13 புள்ளிகள் என்ற அடிப்படையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியை வென்று சம்பியனாகியது.

இந்த இரு பாடசாலைகளும் மாவட்ட மட்டத்தில் நடைபெறவுள்ள போட்டிகளில் விளையாடத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாட்டுக்கு குறிசுட முற்பட்டவர் படுகாயம்

மாட்டுக்கு குறி சுடுவதற்கு முயற்சிசெய்த நபர் மாட்டினால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

மறவன்புலோப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில்- அதே இடத்தைச் சேர்ந்த கே. கந்தையா (வயது- 64) என் பவரே காயமடைந்தவர் ஆவார்.

இதே வேளை கேரதீவு அறுகு வெளியில் தமது காணியைத் துப்புரவு செய்த இளைஞன் புடையன் பாம்பினால் கடியுண் டார்.

உடுவில் லவ் லேனைச் தேவ ராசா தவரூபன் (வயது-23) என்னும் இளைஞரே பாம்பினால் கடியுண்டவர் ஆவார்

(ஒ-207)

## வயல்களில் மாயமாகும் வைக்கோல்

தனங்கிளப்பு, மறவன்புலோ நெல்வயல்களில் உள்ள வைக் கோல் இரவோடு இரவாக திருடப்பட்டு வருவதாக நெற் செய்கை யாளர்கள் தெரிவிக்கின்றனர். சூடு மிதிப்பு வேளையில் வாகனங் களுக்கு பெரும் கிராக்கி ஏற்படுவதால் நெல் மூடைகளை மட்டும் ஏற்றிக் கொண்டு வைக்கோலை வயல்களில் கைவிட்டு வந்தனர்.

அண்மையில் வாகனத்துடன் சென்ற வேளையில் வயல்களில் விட்டு வந்த வைக்கோல் மாயமாக மறைந்துள்ளது. (ஒ-207)

## பிளேக் வருகையைப் புறக்கணித்தமை ...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த வெள்ளிக்கிழமை இலங்கைக்கு வரவிருந்த அமெரிக்க உதவி ராஜாங்க அமைச்சர் றொபேர்ட் பிளேக் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கவிருந்த செய்தி இதுவாகத்தான் இருந்தது.

இந்தக் காலகட்டத்தில் பிளேக் இலங்கைக்கு வருவதை இலங்கை அரசாங் கம் எதிர்த்துள்ளது. அவர் வருகைதந்து செய்தியை வழங்கிய பின்னர் நடத்தும் செய்தியாளர் மாநாட்டில் வெளியிடக்கூடிய செய்திகள் யாவும் அரசுக்கு சாதகமாக இருக்காது என்று சிரேஷ்ட அரசுத் தலைவர்கள் கருதுகிறார்கள். இப்போதுள்ள தேசிய புதுவருட கொண்டாட்ட உணர்வை அது கெடுத்துவிடும் என்பதோடு சர்வதேச மட்டத்திலும் நிலைமைகளை மோசமாக்கிவிடும் என்று கருதப் படுகின்றது.

லிபியா, சிரியா மற்றும் நாடுகளை அமெரிக்கா தாக்குவது போல அது இருக்கும், எந்தவகையிலும் எமக்கு உதவிபுரியாது என்று அமைச்சர் ஒருவர் கூறினார்.

இந்த நிலையில் கொழும் பிலுள்ள அமெரிக்க தூதரகத்துக்கும் வாஷிங்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்துக்கும் அனுப் பப்பட்டுள்ள செய்திகளில் பிளேக்குடன் எந்தவித தொடர்பும் சாத்தியமில்லையென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான அதிகாரப்பூர்வமான காரணம் வெளியுறவு அமைச்சர் ஜி.எல் பீரிஸ் வெளிநாட்டில் இருக்கிறார் என்பதாகும்.

இவ்வாறு தெரிவித்திருப்பதானது அமெரிக்காவைப் பொறுத் தவரை மொக்கயீனப்படுத்தும் வகையிலான விடயமாகும். ஒரு வேளை நன்றாக ஆராயப்படாமல் தெரி விக்கப்பட்டதாய் இது இருக்கலாம். ராஜதந்திர முறையில் பார்த்தால் வெளி நாட்டு அமைச்சர் ஒருவர் நாட்டில் இல்லாத விடத்து அவருக்கு பதிலாக பிரதி அமைச்சர் ஒருவர் செயற்படுவார். அந் தப் பதவியை வகிக்கக் கூடிய தகுதி உடைய ஒருவரே அவ்வாறு நியமிக்கப் படுவார். இந்த நிலையில் வெளியுறவு அமைச்சர் நாட்டில் இல்லாமையால் ஒரு விடயம் ஆராயப்பட முடியாதென்பது ஒரு நொண்டிச்சாட்டாகும். பீரிஸ் இப்போது லண்டனில் பிரதி வெளி நாட்டமைச்சர் அலஸ் டயர் பேர்ட்டுடன் ஆலோச னைகள் நடத்திக்கொண்டிருக்கிறார். அமைச்சர் வில்லியம் ஹேக்குடன் அல்ல இலங்கையின் தரப்பில் கூறப் படும் விளக்கத்தின்படி பார்த்தால் அமெரிக்காவுடனான எல்லாவித பேச்சு வார்த்தைகளும் ஜி.எல். பிரிஸின் மீதே தங்கியுள்ளன அவர் இலங்கையில் இல் லாதவேளையில் இலங்கையின் சார்பில் எந்தவொரு ராஜதந்திர நடவடிக்கையும் மேற்கொள்ளமுடியாது என்பதையே இது காட்டுகின்றது.

எல்லாவற்றையும் பார்க்கையில் உதவி அமைச்சர் பிளேக்கின் வருகையை இலங்கை அரசு விரும்பவில்லை என்பது தெளி வாகின்றது.

அமெரிக்காவை இவ்வாறு உதா சீனம் செய்திருப் பதானது அந்நாட் டின் வெறுப்பை மேலும் அதிகரிக் கவே செய்வ தாய் இருக்கும். அத்து டன் அந்நாட்டின் தூதுவராக வரவி ருந்த ஒருவர் கொ ண் டு வ ர விருந்ததை விட மோசமான எதிர் விளைவுகளை இது ஏற்படுத்தக் கூடும். அமெரிக்காவின் நேச நாடுகளான பிரிட்டன்,பிரான்ஸ் மற்றும் ஐரோப் பிய நாடுகளும் அமெரிக்கா வின் இந்த விதமான செயற் பாட்டினை ஆதரிக்கப்போ கின்றவை என்பது தெரியவில்லை. அப்படியான ஒரு நி லை மை யி ல் அமெரிக்காவை ஆதரிக்காவிட்டா லும் இலங்கையை இந்தியா ஆதரித்து நிற்கும் என்று சொல்லமுடியாது. கடந்த வார சம்ப வங்கள் புதுடில் லிக்கும் கொழும் புக்கும் மிடையி லான உறவுகள் மோசமடைந்திருப் பதை வெளிப் படுத்தியுள்ளன.

(ப)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
02
06
1944



உதிர்வு
12
03
2011

### திருமதி வடிவேலு சொர்ணகாந்தி

அன்னாரின் வீட்டுக்கிருத்தியகிரியைகள் இன்று (11.04.2011) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து, அவரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடை பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். தனிப்பட்ட அழைப்பு கிடைக்கப்பெறாதவர்கள் இந்த அழைப் பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தய வாக வேண்டிக் கொள்கின்றோம்.

அரசடி வீதி,
திருநெல்வேலி.
குடும்பத்தினர்.

### யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் கண்ணீர் காணிக்கைகள்

*செல்வி அனுசா செல்வராசா*



யாழ். இந்துக்கல்லூரி என்ற பெரு விருட்சத்தின் விழுதுகளில் ஒன்றாகி, அன்னையின் வளர்ச்சியில் துணைநின்ற புகழ் பூத்த உடற்கல்வி ஆசிரியை அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத் தினருக்கும், கல்லூரிச் சமூகத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களினைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறையருள் இறைஞ்சி நிற்கின்றோம்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம். (2544) பழைய மாணவர் சங்கம்.

# மரண அறிவித்தல்



## இராமநாதன் புவனேந்திரன் (புவி)

375/1, கோயில் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் புவனேந்திரன் கடந்த 08.04.2011 வெள்ளிக் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதன் (பால்ராஜ்) - கனகாம் பிகை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான சுப்பிர மணியம் - செல்லம்மாதம்பதியரின் மருமகனும், இராஜலக்ஷ்மியின் (பவா) அன்புக் கணவரும், சறோஜா(கனடா), சர்வேந் திரன்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், விக்னேஸ்வரன் (கனடா), அருளானந்தம் (லண்டன்), தணிகாசலம் (கனடா), தர்சினி(கனடா), கமலாம்பிகை (கனடா) ஆகியோ ரின் மைத்துனரும், ஜானகி, சீதா ஆகியோரின் அன்பு மாமனாரும், ராம்ராஜ், அர்சனா, அபிராமி ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.04.2011) செவ்வாய்க் கிழமை மு.ப 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

375/1, கோயில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
தொ.பே-0212222164

தகவல்:
குடும்பத்தினர்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
05
05
1932



மறைவு
23
03
2010

### திருமதி நவரத்தினராசா பரமேஸ்வரி (பாக்கியம்)

திதி- (11.04.2011) அட்டமி

எங்கள் அன்பு அன்னையே
நல்வழி காட்டிய குலவிளக்கே
பண்பின் உறைவிடமே
பொறுமையின் சிகரமே
எல்லோரையும் ஆதரித்த தெய்வமே
ஓராண்டு என்ன எத்தனை ஆண்டுகள்
சென்றாலும் உங்கள் நினைவு எங்கள்
இதயங்களில் நீங்காது நிலைத்திருக்கும்.

உங்கள் பிரிவால் துயருறும்
அன்புக் கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

துன்னாலை கிழக்கு,
கரவெட்டி.
குடும்பத்தினர்.

வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் மற்றும் பொதிகள் சேவை
புத்தாண்டு விசேட சலுகை
ARRUL GLOBAL EXPRESS
International Courier & Cargo Service
நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம். T.P : 021 222 6113
72 மணி நேரத்தில் குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்
லண்டன் 1Kg 750 /=
கனடா, அமெரிக்கா, பிரான்ஸ்,சுவிஸ், டென்மார்க்
ஜேர்மனி, இத்தாலி, நோர்வே
1Kg 900 /=
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக வங்கியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் - சிங்கள புதுவருடத்தையொட்டி மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை. அத்தியாவசிய பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டனவே தவிர குறைக்கப்படவில்லை. பால்மா வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. புது வருடத்தின் பின்னர் பால்மா வகைகளின் விலைகளை அதிகரிக்க திட்டமிட்டுள்ளதாக பால்மா கம்பனிகள் தெரிவித்துள்ளன.

மக்கள் மிகவும் கவலையான நிலையில்தான் இந்தப் புதுவருடத்தை எதிர்கொள்கின்றனர். உலக சந்தையில் பொருள்களின் விலைகள் அதிகரிப்பே இங்கும் விலைகள் அதிகரிக்கக் காரணம் என்று அரசு கூறுகின்றது. ஒரு பொறுப்புள்ள அரசு கூறும் பதிலா இது? உலக சந்தையில் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்படும்போது இங்கும் அதிகரிக்கப்படும் என்றால் அரசு எதற்கு?

உலக வங்கி மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்கள் ஆகியவற்றின் விருப்பத்துக்கு ஏற்பவே அரசு செயற்பட்டு இவ்வாறு விலைகளை அதிகரிக்கின்றது. இதை நாமே கடுமையாக எதிர்க்கின்றோம் - என்றார். (ஒ-சி)

## படையினருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகாம்களில் இருந்து ஏற்றி வருவதற்கு இராணுவத்தினரின் உதவி தேவை. இந்தக் காரணத்தாலேயே மீள்குடியேற்றம் ஒத்தி வைக்கப் பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

## இறக்காமம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்கள் முஸ்லிம் காங்கிரஸ் சார்பிலும், இரண்டு உறுப்பினர்கள் ஐ.ம.சு. முன்னணி சார்பிலும் மேற்படி அமர்வில் கலந்து கொள்ளவுள்ளனர் என்று செயலாளர் எம்.ஏ.கே. முஹம்மட் தெரிவித்தார்.

(ஒ-சி)

## கச்சதீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை - இந்திய அரசுகள் 1974 ஆம் ஆண்டு செய்து கொண்டுள்ள கச்சதீவு ஒப்பந்தத்தை ரத்துச் செய்யும்படி நீதி மன்றம் உத்தரவிடவேண்டும்.

- இவ்வாறு அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது. (ஒ-சி)

## தனியார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத் தளபதியை யாழ். படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துரு சிங்க வரவேற்றார்.

அதன் பின்னர் பலாலி படைத் தளத்திலும் சாவகச்சேரி கலாசார மண்டபத்திலும் படையினரைச் சந்தித்து, புத்தாண்டு வாழ்த்துக்களை இராணுவத் தளபதி தெரிவித்தார்.

படையினர் மத்தியில் உரை யாற்றிய தளபதி தெரிவித்தமை வருமாறு:-

படையினர் இது வரையும் சிறந்த - முக்கிய - பணிகளைப் பூர்த்தி செய்துள்ளனர். படையினர் சமாதானத்தை நிலைநிறுத்து வதற்குத் தொடர்ந்து பணியாற்ற வேண்டும்.

அரசின் அபிவிருத்திப் பணிகளுக்குப் படையினர் தமது பங்களிப்பை வழங்க வேண்டும். படையினர் சளைக்காமல் தொடர்ந்து அரசின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகிக்க வேண்டும் - என்றார். (ஒ-ஐ-207)

## ஓய்வூதிய சட்டமூலம் நாடாளுமன்றில்

கொழும்பு, ஏப்.11

ஓய்வூதியத் திட்டத்துக்கு தகுதிபெற்றவர்கள் மற்றும் வெளிநாடுகளில் தொழில் புரியும் ஊழியர்களில் ஓய்வூதியத் திட்டத்துக்குத் தகுதி பெற்றவர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்கான இரண்டு சுருக்கப் பிரேரணைகளை அரசு கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தது.

அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களில் இதுவரை ஓய்வூதியத் திட்டத்தில் அடங்காதவர்களைக் கருத்தில் கொண்டே தொழில் தருநர்களின் இந்த ஓய்வூதியத் திட்டத்துக்கான சுருக்கப் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

ஊழியர் ஒருவரின் சேவைக்காலக் கட்டணத்தின் பத்து சதவீதமும் ஊழியர் சேம நிதியத்தில் செயலிழந்துபோன தொகையும் அதற்கு மேலதிகமாக அரசாங்கத்துக்கு வழங்கப்படும் 100 கோடி ரூபாவும் சேர்க்கப்பட்டு இந்த நிதியம் ஆரம்பிக்கப்படும்.

## பொன்சேகா மீதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை ஒன்றை முன்வைக்கவுள்ளது.

அத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.சிறிதரன் மற்றும் ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி ஆகியோர் மீது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாகவும் அங்கு முறைப்பாடு செய்யப்படும் என்றும் அக்கட்சி தெரிவித்தது.

இந்த மாதம் 15 முதல் 20ஆம் திகதிவரை பனாமாவில் இடம்பெறவுள்ள சர்வதேச நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியத்தின் மனித உரிமைகள் குழுத் கூட்டத்தில் கலந்து கொள்ளும் ஐ.தே.கவின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க இந்தக் கோரிக்கையையும் முறைப்பாடுகளையும் முன்வைப்பார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்தன நேற்றுக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

சர்வதேச நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியத்தின் 124 ஆவது மாநாடு இம்மாதம் 15முதல் 20ஆம் திகதிவரை பனாமாவில் இடம்பெறவுள்ளது. இந்த ஒன்றியத்தின் மனித உரிமைகள் குழுக் கூட்டமும் இதற்கு இணையாக அங்கு இடம்பெறுகின்றது. இதில் கலந்துகொள்வதற்காக எமது கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதில் கலந்து கொள்ளும் திஸ்ஸ அத்தநாயக்க பல விடயங்களை அங்கு முன்வைப்பார். முதலாவதாக சரத் பொன்சேகாவுக்கு எதிராக இடம்பெற்றுவரும் வழக்கு விசாரணைகள் அனைத்தையும் கண்காணிப்பதற்காக சர்வதேச குழு ஒன்றை நியமிக்குமாறு கோரிக்கை முன்வைப்பார்.

இந்தக் கோரிக்கையை முன்வைக்குமாறு ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் அன்டஸன் ஜோன்ஸன் எம்மிடம் கேட்டுள்ளார். பொன்சேகா சார்பான முறைப்பாடு ஒன்றைக் கடந்த வருடம் இடம்பெற்ற இந்த மாநாட்டில் நான் முன்வைத்திருந்தேன். இந்தக் கோரிக்கைகள் இரண்டும் விசாரணைகளுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதில் சந்தேகமில்லை.

அதேபோல், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுனில் ஹந்துன்நெத்தி யாழ்ப்பாணத்தில் வைத்தும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.யான எஸ். சிறிதரன் நொச்சியாகமவில் வைத்தும் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகவும், ஊடகங்கள் மீதான அடக்கு முறைகள் தொடர்பாகவும் திஸ்ஸ அத்தநாயக்க முறைப்பாடுகளை முன்வைப்பார் - என்றார்.

(ஒ-சி)

## மன்னார் தென்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தென் எல்லையில் உள்ள கடற்கரைப் பிரதேசத்தில் அப் பிரதேச மக்கள் மீளக் குடியேற அனுமதிக்கப்படாமல், கடற்படைத் தளமாக மாற்றி அமைக்கப்படுவதாகவும் அவர் விடுத்த அறிக்கை ஒன்றில் அம்பலப்படுத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினரின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளாதாவது:-

மன்னார் மாவட்டத்தின் தென் எல்லையோரமாக உள்ள பகுதிகள் அர சின் திட்டமிட்ட பெரும்பான்மையின குடியேற்றத்துக்கு உட்படுத்தப்பட வுள்ளன என அறிய முடிகின்றது.

இப்பகுதிகளை உள்ளடக்கிய முள்ளிக்குளம் கிராமம், கொண்டச்சியிலுள்ள தம்பப்பள்ளி மற்றும் மடு வீதியிலுள்ள பல பகுதிகள் அபகரிக்கப்பட்டு வருகின்றன எனக் கிடைக்கும் தகவல்கள் மூலம் அறிய வருகின்றது.

முள்ளிக்குளம் பிரதேசம் யுத்தம் முடிவுக்குக்கொண்டு வரப்பட்ட பின்னர் கடற்படையினரின்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. மீள் குடியேற்றம் இதுவரை மறுக்கப்பட்டு இதன் கரையோரப் பிரதேசங்கள் கடற்படைத்தளமாக மாற்றப்பட்டுள்ளன.

கொண்டச்சி பிரதேசம் மன்னார் மாவட்டத்தில் மர முந்திரிகைச் செய்கைக் குப் பெயர் பெற்றது. யுத்தகால நடவடிக்கையின் காரணமாக மர முந்திரிகைச் செய்கை அங்கு மிக மோசமாக பாதிக்கப்பட்டதுடன் முற்றாக அழிக்கப்பட்டது. தற்போது அப்பகுதியில் புனரமைப்பு என்ற போர்வையில் பெரும்பான்மை இனத்தவர்களை குடியேற்றும் முயற்சிகளே நடைபெறுகின்றன. இவ்வாறுதான் மடுவீதி மற்றும் மடுப்பிர தேசப் பகுதிகளில் பௌத்த விகாரைகள் விஸ்தரிப்பு, பெரும்பான்மைக் குடியிருப்புகள் ஆகியன தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

மன்னார் மாவட்டத்தின் தென் எல்லை யோரப் பிரதேசங்களில் திட்டமிட்ட வகையில் பெரும்பான்மையின மக்களை குடியேற்றும் அரசின் நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இல்லையேல் இது பாதகமான விளைவுகளையே எதிர்காலத்தில் உருவாக்கும்.

தமிழ் மக்களின் மிகப் பெரும் பாரம்பரிய பிரதேசங்களில் ஒன்றான யாழ். குடாநாட்டில் அதிகாரத்திலுள்ளவர்களின் துணையுடன் பெரும்பான்மையினக் குடியேற்றம் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறே கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் யுத்தத்துக்கு பிந்திய காலத்தில் தமிழர் தாயகப் பிரதேசங்களை அபகரிக்கும் முயற்சிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

ஆளும்கட்சியில் அங்கம் வகிக்கும் தமிழ் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் ஆகியோரால் கூட இதனை தட்டிக்கேட்க முடியாத நிலைமையே தொடர்ந்து காணப்படுகின்றது.

அதேவேளை, அம்பாறை மாவட்டத்தின் முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான பெருமளவான நிலப்பரப்புகள் பெரும்பான்மை இனத்தவர்களால் அபகரிக்கப்பட்டுள்ளன.

இதனைக்கூட தட்டிக்கேட்க முடியாத நிலையிலேயே ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் அரசியல்வாதிகள் உள்ளனர் என்பதனையும் சுட்டிக்காட்ட வேண்டும்.

பெரும்பான்மை இன மக்களின் திட்டமிட்ட குடியேற்றம் தொடருமானால், மக்கள் போராட்டத்தினூடாக கிளர்ந்தெழுவதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது - என்றுள்ளது.

( அ-இ)


### கண்ணீர் அஞ்சலி



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழைய மாணவனும்,பேராதனைப் பல்கலைக்கழக பழைய மாணவனும் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் ஆசிரியரும், உப. அதிபரும், சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் அதிபருமான

**சோமசுந்தரம் சோமசேகரம்**

அவர்கள் நோய் வாய்ப்பட்டு கொழும்பு சென்று சிகிச்சை பெற்று வந்த சமயம் 09.04.2011 அன்று சிவன்பதம் அடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய சுன்னாகம் கதிரமலைச் சிவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(2544) செ.கதிர்காமநாதனும் சுன்னாகம் தெற்கு மக்களும்.

### துயர் பகிர்கிறோம்

திருமதி **செல்வராணி விஜயகுமார்**

(முன்னாள் அதிபர், மாங்குளம் மகாவித்தியாலயம்)

இறகினால் வருடிய இதம் எனப் பாடசாலையை
தழுவி நடத்திய ஆளுமையே!
இடர்மிகு நாள் எல்லாம்
இயல்புற படைத்த நாயகியே!
திடுமென ஓர் நீர்க் குமிழியாய்
போய் முடிந்தாய்
கண்கள் வழிய, வழிய
கடந்த காலத்தினை....
உன் சுமையை....
துயரத்தை...
சாதுரியத்தை
எண்ணிப் பார்க்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும் கணவர், பிள்ளைகள், உறவினர்களின் துயரத்தை பகிர்ந்து கொள்கிறோம்.

*அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள்,* **மாங்குளம் ம.வி.**

### வேலையாளர் தேவை

கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையத்துக்கு
* phone திருத்துநர்
* விற்பனையாளர்
* காசாளர் தேவை.

அனுபவமுள்ள/ஆர்வமுள்ள
வேலையாளர் தேவை.
[illegible]

(2551) தொடர்பு:-0771007567

### கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகப் பொறுப்பதிகாரி
*மகேசன் ஐயாவின் அன்பு மனைவி*

திருமதி **மாளவிகாம்மா மகேசன் ஐயா**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*வலி.மேற்கு பிரதேச சபை,*
*உப அலுவலகம், அராலி.*

- சக உத்தியோகத்தர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




யாழ். மாவட்டம் தவிர்ந்த பிற மாவட்டங்களில் மழை பெய்வதற்கான சாத்தியம் உள்ளது.

# பங்குத்தந்தையை அவமானப்படுத்திய சம்பவம்; குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்

## யாழ். தளபதிக்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் கடிதம்

யாழ்ப்பாணம், ஏப்.11

ஊர்காவற்றுறை பங்குத்தந்தை அருட்திரு. சி.ஜி. ஜெயக்குமார் மீதான துன்பகரமான சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின் முன்நிறுத்தி அவர்களுக்குத் தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் மேற்கண்டவாறு யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவிடம் கோரியுள்ளது.

அவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தற்போது ஊர்காவற்றுறை பங்குத்தந்தையாகப் பணிபுரியும் வண. சி.ஜி. ஜெயக்குமார் அடிகளார் தொடர்பான துன்பகரமான நிகழ்வொன்று எம்மை மிகவும் கலக்கத்தில் ஆழ்த்தியுள்ளது.

வண. ஜெயக்குமார் அடிகளார் கரிதாஸ் - கியூடெக் நிறுவனத்தின் பணிப்பாளராகக் கடமையாற்றியவர். இந்த நிறுவனம் மதம், சாதி என்பவற்றைக் கடந்து பாதிக்கப்பட்ட சாதாரண மக்களுக்குப் பல்வேறு உதவிகளை வழங்கிய மிகவும் நன்கறியப்பட்ட ஒரு மனிதாபிமான அரச சார்பற்ற நிறுவனமாகும்.

இவரது சேவைகள் உள்நாட்டில் நிகழ்ந்த சச்சரவுகளின் போதும் பின்னரும் முழு நாட்டிலும் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் வெகுவாக பாராட்டப்பட்டன.

இவரது தராதரம் மிக்க ஆளுமை, சொல்லார்த்தல், மிதமான போக்கு, சமகால விடயங்களிலுள்ள அறிவாற்றல் என்பன யாழ். மாவட்ட அரச சார்பற்ற இணையத்தின் தலைமைப் பதவியில் அமர்த்தின. பின்னரும் இந்தப் பொறுப்பில் தொடருமாறு ஏகோபித்த முறையில் வேண்டுகோள் விடுவிக்கப்பட்ட போதும், அதை நிராகரித்து இந்த அமைப்பின் ஒரு செயல் திறன்கொண்ட உறுப்பினராகத் தொடர்ந்து பணியாற்றி வருகின்றார்.

பின்னர் ஊர்காவற்றுறை பங்குத் தந்தையாகப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னரும் தமது சமய, மனிதாபிமான மற்றும் சமூக சேவைகளைத் தொடர்ந்தும் ஆர்வத்துடன் ஆற்றிவருகின்றார். இதனால் பொது மக்களால் இவர் மிகவும் நேசிக்கப்படுகின்றார்.

இத்தகைய உயர்ந்த - ஒழுக்கம் நிறைந்த - இரக்க சுபாவமுள்ள இவர்மீது சில மனச் சாட்சியற்ற, வெட்கக்கேடான பிரகிருதிகள் கடந்த முதலாம் திகதி இரவு அழுக்கை வீசி அவமானப்படுத்தியபின் ஓடி மறைந்துள்ளனர்.

இதுகடந்த30ஆம்திகதிசுந்தினால் மல்கம் ரஞ்சித் தலைமையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த சர்வமதக் குழுக் கூட்டத்தில் இவர் ஆற்றிய பெறுமதி மிக்க பங்களிப்பின் எதிரொலி என்றே எண்ணத் தோன்றுகிறது. மேலும் இந்த மாவட்டத்தில் பேச்சுச் சுதந்திரம் இல்லையென்பதை வெட்டவெளிச்சமாக எடுத்துக் காட்டுகின்றது.

இந்தச் சூழ்நிலையில் தாங்கள் உடனடியாக நடவடிக்கையெடுத்து குற்றவாளிகளைக் கண்டுபிடித்துக் கைது செய்வதற்கு ஆவண செய்யுமாறு மனப்பூர்வமாக வேண்டுகோள் விடுவிக்கின்றோம் - என்றுள்ளது. (ஒ-ஐ-க)



தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு சொந்த இடங்களுக்குச் செல்லும் மக்கள் பஸ் நிலையங்களில் பல மணித்தியாலங்கள் காத்து நிற்கவேண்டியுள்ளது. நேற்று கொழும்பு தனியார் பஸ் நிலையத்தில் சொந்த இடங்களுக்குச் செல்வதற்காகப் பெரும் எண்ணிக்கையான மக்கள் காத்து நின்றனர்.

## ஏப். 7ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை போக்குவரத்துச்சபை ஊழியர்களின் விடுமுறைகள் ரத்து என அறிவிப்பு

கொழும்பு, ஏப். 11

எதிர்வரும் சிங்கள - தமிழ் புத்தாண்டு காலத்தில் பொது மக்களுக்குத் தடையின்றிச் சேவையை வழங்குவதை உறுதி செய்யும் பொருட்டு இலங்கை போக்குவரத்துச் சபையின் சாரதிகள், நடத்துநர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களின் விடுமுறைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன என சபையின் தலைவர் எம்.டீ. பந்துசேன தெரிவித்துள்ளார்.

அதற்கமைய ஏப்ரல் 7ஆம் திகதி முதல் 19ஆம் திகதிவரை தூர இடங்களுக்கான விசேட பஸ் சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமையால் இக்காலப் பகுதியில் சபை ஊழியர்களின் சகல விடுமுறைகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

சாதாரண நாள்களில் கொழும்பு புறக்கோட்டை மத்திய பஸ் நிலையத்திலிருந்து தூர இடங்களுக்குப் பயணிக்கும் பஸ்களின் எண்ணிக்கை இரண்டு மூன்று மடங்குகளால் அதிகரிக்கப்படும். இவ்வாறான சேவைகளுக்கு அனுபவம் வாய்ந்த சாரதிகளும் நடத்துநர்களும் பணியில் அமர்த்தப்படுவர் எனவும், பஸ்களில் ஏற்படக்கூடிய தொழில்நுட்பக் கோளாறுகளைத் தாமதமின்றி நிவர்த்தி செய்வதற்குப் போதியளவு தொழில்நுட்பப்பணியாளர்களும் நியமிக்கப்படுவர் எனவும் அவர் கூறினார். (ஐ-5)

## வேகத் தடைகள் அகற்றப்பட்டமையால் கைதடி, நாவற்குழிப் பாலங்களில் நாள் தவறாமல் விபத்துக்கள்

தென்மராட்சி, ஏப். 11

கைதடி, நாவற்குழிப் பாலங்களில் தினமும் விபத்துக்கள் இடம்பெறுவது குறித்து பொது மக்களும் வாகன சாரதிகளும் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்தப் பாலங்களின் இரு பக்கங்களிலும் அமைக்கப்பட்டிருந்த வேகத் தடை மேடுகள் அகற்றப்பட்டதன் பின்னரே, விபத்துக்கள் அதிகரித்துள்ளன் என்று தெரிவிக்கப்படுகிறது.

புதிதாக யாழ்ப்பாணத்துக்கு வரும் வாகனச் சாரதிகள் வந்த வேகத்திலேயே பாலத்தின் மீதும் வாகனத்தைச் செலுத்துவதால் விபத்துக்கள் இடம்பெறுகின்றன எனவும் இதனைத் தடுக்க வேகத் தடை மேடுகளை மீண்டும் அமைக்குமாறும் அல்லது வேகக் கட்டுப்பாடு குறித்த அறிவுறுத்தல் பலகையை நடுவதற்கு உரிய நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுக்கவேண்டும் என் றும் கோரிக்கை விடுக்கப்படுகிறது. (ஒ-207)

## சிறுத்தீவுப் பகுதியில் விதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் தற்போது 'அறுவடை'!

வண்ணை, ஏப். 11

சிறுத்தீவுப் பிரதேசத்தில் விதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகள் அகற்றப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 15 வருட காலங்களுக்கும் மேலாக அப்பகுதியில் கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டிருக்கின்றன எனத் தெரிவித்து அப்பகுதிக்கு மக்களைச் செல்வதற்குப் பாதுகாப்புப் பிரிவினர் தடுத்து வந்தனர்.

இதனால் அத்தீவில் கோயில் கொண்டுள்ள லூர்த்து அன்னை ஹெவித் திருநாள் கொண்டாட்டங்கள் 15 வருடங்களுக்கும் மேலாக நடைபெறவில்லை.

சிறுத்தீவைச் சுற்றி ஓடும் கடல் நீரேரியில் கடல்தொழிலில் ஈடுபட்டு வருகின்ற மீனவர்களும் தீவுக்குள் நுழைவதற்கோ கரைகளில் கால்கள் வைக்கவோ அனுமதிக்கப்படவில்லை.

பெப்ரவரி மாதத்தில் நடைபெறுகின்ற லூர்த்து ஹெவித் திருநாள் இனிமேல் 2012ஆம் ஆண்டே நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கிடையில், கண்ணி வெடிகள் அகற்றப்பட்டு, தீவுக்குச் செல்வதற்கு மக்களை அனுமதிக்கும் பட்சத்தில் குருநகரில் இருந்து மக்கள் நூற்றுக்கணக்காக கடல் நீரேரியை கால்நடையாகக் கடந்து சென்று வருவார்கள். லூர்த்து அன்னையைத் தரிசிக்க குருநகர் மக்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர். (ஒ-160)

## குருநகர் யாகப்பர் ஆலய ஜூபிலி வருட போட்டிகள்

குருநகர் புனித யாகப்பர் ஆலய திருஇருதய சபையினர் ஆலயத்தின்150ஆவதுஜூபிலிவருட தவக்கால (2011) ஆண்டையொட்டி பசான் வாசிப்பு, பிழை தீர்க்கும் மந்திரம்,வினாவிடைப்போட்டிகளை நடத்த முன்வந்துள்ளனர்.

போட்டிகள் கீழ், மத்திய, மேற்பிரிவுகளாக நடத்தப்படும். 13ஆம், 14ஆம் திகதிகளில் பிழை தீர்க்கும் மந்திரம் போட்டிகள் குருநகர் யாகப்பர் ஆலய மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு நடத்தப்படும்.

பசான் வாசிப்பு மற்றும் வினாவிடைப் போட்டிகள் 16ஆம் திகதி காலை 9.30 மணிக்கு அதே இடத்தில் நடைபெறும். தெரிவு செய்யப்படும் தெரிவாளர்களுக்குப் பெறுமதிமிக்கப் பரிசில்கள் வழங்கப்பட இருக்கின்றன. (ஒ-160)

## பருத்தித்துறை - கொழும்பு விசேட பஸ் சேவை

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு போக்குவர்த்துச் சபையின் விசேட பஸ்சேவை இன்று காலை ஏழு மணிக்கு பருத்தித்துறையில் இருந்து கொழும்புக்கு நடைபெறும்.

பருத்தித்துறையில் இருந்து காலை 7.30 மணிக்கு புறப்படும் பஸ் கொடிகாமம், கிளிநொச்சி, வவுனியா, அனுராதபுரம், புத்தளம் ஊடாக கொழும்பை சென்றடையும் நாளை செவ்வாய்க்கிழமை இந்த பஸ் இரத்தமலானையில் இருந்து காலை 7.30 மணிக்கு பருத்தித்துறை நோக்கிப் புறப்படும். இரத்தமலானையில் இருந்து வெள்ளவத்தை ஊடாக புறக்கோட்டை மத்திய பஸ் நிலையத்துக்கு வந்து அங்கிருந்து யாழ்ப்பாணம் வரும். (ஒ-236-323)

## பன்றித்தலைச்சி அம்மனுக்கு இன்று அடியார்கள் திரண்டு பொங்கல்

சாவகச்சேரி, ஏப்.11

வரலாற்றுச்சிறப்பு மிக்க மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை அம்மன் தேவஸ்தானத்தின் பங்குனித் திங்கள் உற்சவத்தில் கடைசித் திங்கள் உற்சவம் இன்று இடம்பெறவுள்ளது.

இன்றைய பொங்கலில் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் கலந்துகொள்வார்கள் என்பதால் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த ஒழுங்கு சாவகச்சேரி பிரதேச சபையினர், தென்மராட்சி பிரதேச செயலகத்தினர், மட்டுவில் இந்து இளைஞர் சேவைகள் மன்றத்தினர் மற்றும் சாவகச்சேரி பொலிஸார், படையினர் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர்.

விசேடமாக ஆலயத்தில் கூடும் பக்தர்கள் ஒழுங்கு நடவடிக்கைகளை பேணி நடக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இளைஞர்கள் யுவதிகள் பொதுமக்கள் ஆலய சூழலில் ஒழுக்கத்தைப் பேணி இந்து சமய கலாசாரத்தை பேணி நடக்குமாறு ஆலய நிர்வாகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

அடியார்கள் தமது நகைகள் மற்றும் உடைமைகளை பாதுகாத்துக் கொள்ளுமாறும் அறிவுறுத்தப்படுகின்றனர். மு.ப. 10 மணிக்கு வசந்த மண்டப பூசைகள் ஆரம்பமாகி மாலை 6 மணிக்கு உற்சவம் இடம்பெறும். இலங்கை போக்குவரத்துச் சாலை மற்றும் தனியார் போக்குவரத்து கழகமும் ஆலயம் வரை தமது சேவைகளை விஸ்தரித்துள்ளனர்.

### நேரடி ஒலிபரப்பு

உற்சவ நிகழ்வுகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையில் பலாலி நிலையம் ஊடாக மு.ப.10 மணிமுதல் நேரடி ஒலிபரப்புச் செய்யப்படும். (ஒ-ஐ-131)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பாரதூரமான மனித உரிமை மீறல்கள்
# வருடாந்த அறிக்கையில் அமெரிக்கா குற்றச்சாட்டு

## நீதித்துறையும் நிறைவேற்று அதிகாரத்துக்கு உட்பட்ட நிலையில்

கொழும்பு, ஏப்ரல்.11

**இலங்கையில் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன. கொள்வனவுகள் மற்றும் அரச ஒப்பந்தங்களில் வெளிப்படைத் தன்மை இல்லை. -இவ்வாறு அமெரிக்கா வெளியிட்டுள்ள மனித உரிமைகள் வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அமெரிக்க வெளிவிவகார அமைச்சு கடந்த 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை 40 பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதியின் குடும்பம் இலங்கை அரசியலில் ஆதிக்கம் செலுத்துகின்றது. ஜனாதிபதியின் சகோதரர்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராகவும், பாதுகாப்புச் செயலாளராகவும், சபாநாயகராகவும் முக்கிய நிறைவேற்று அதிகார பதவிகளை வகிக்கின்றனர் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படையினர் சட்டத்துக்குப் புறம்பான கொலைகளை மேற்கொண்டனர். ஆள்கள் கடத்தப்படல், காணாமற்போதல் போன்ற சம்பவங்கள் கடந்த காலங்களில் அதிகளவில் இடம்பெற்றன. இப்போது இத்தகைய சம்பவங்கள் குறைந்துள்ளன எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்தாயிரம் பேருக்கான சிறைச்சாலைகளில் சுமார் 26 ஆயிரம் பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஆயிரம் பேர் பெண்களாவர். மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் சட்டத்தரணிகள் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். மனித உரிமை மீறல்களுக்காக இராணுவ, பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிவில் அல்லது இராணுவ நீதிமன்றங்கள் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட்டனர் என்பதற்கான தகவல்கள் இல்லை.

நீதித்துறை நிறைவேற்று அதிகாரத்துக்கு உட்பட்டதாகவுள்ளது. பிரஜைகளின் அந்தரங்க உரிமைகளில் அரசு அத்துமீறித் தலையிடுகின்றது எனவும் அந்த அறிக்கை கூறுகின்றது.

'சண்டே லீடர்' பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை மற்றும் லங்கா ஈ நியூஸ் செய்தியாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற் போனமை தொடர்பான விசாரணைகளில் முன்னேற்றம் இல்லை. ஜூலை 30ஆம் திகதி சியத்த தொலைக்காட்சி மீதான தாக்குதல், தீவைப்பு மற்றும் இரு ஊழியர்கள் காயமடைந்தமை தொடர்பான விசாரணைகளில் முன்னேற்றம் இல்லை.

இந்தத் தாக்குதலுக்கும் 2009 ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி சக்தி, சிரச தொலைக்காட்சிக் கலையகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்குமான ஒற்றுமைகளைச் சாட்சிகள் குறிப்பிட்டுள்ளன எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்விமான்கள் சுய தணிக்கையை மேற்கொள்வதற்குப் பணிய வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அதில் கூறப்பட்டுள்ளது. சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் ஐ.நா. நிகழ்ச்சி ஒன்றை நடத்துவதை கொழும்பிலுள்ள பல்கலைக்கழகம் ஒன்றின் நிர்வாகம் தடுத்ததாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கொள்வனவுகள் தொடர்பான அரச ஒப்பந்தங்களில் வெளிப்படைத் தன்மை இல்லை எனவும் அந்த அறிக்கை விமர்சித்துள்ளது. (ஒ-சி)

# அடைக்கலம் புகுந்த அகதிகளுக்கு இனி சிறிலங்கா கடவுச்சீட்டு விநியோகமில்லை!

## புலம்பெயர் தமிழர்களைக் குறி வைக்கிறது அரசு

வெளிநாடுகளில் அடைக்கலம் கோரியிருப்பவர்களுக்கு இனிமேல் சிறிலங்கா கடவுச்சீட்டு விநியோகிப்பதில்லை என்று சிறிலங்கா அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

உடனடியாக இந்த விதிமுறையை நடைமுறைப்படுத்துமாறு வெளிநாடுகளில் உள்ள அனைத்து சிறிலங்காத் தூதரகங்களுக்கும் சிறிலங்காவின் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் அறிக்கை அனுப்பி வைத்துள்ளார்.

ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளில் அடைக்கலம் கோருவதற்கு முன்னர் சிறிலங்காவைச் சேர்ந்த பலரும் தமது கடவுச்சீட்டுகளை அழித்து விடுகின்றனர்.

சிறிலங்காவில் அரசியல் குழப்பம் உள்ளதால், தம்மால் அங்கு மீளச்செல்ல முடியாது என்று அவர்கள் தமது அடைக்கலக் கோரிக்கைக்குக் காரணம் கூறுகின்றனர்.

முன்னர், சிறிலங்காவில் இருந்து சென்ற தமிழர்கள் போர்ச் சூழலைக் காரணம் காட்டி மேற்கு நாடுகளில் அடைக்கலம் கோரினர்.

அவர்களில் பெரும்பான்மையானோருக்கு அடைக்கலம் கிடைத்ததுடன், அவர்கள் அங்கு நிரந்தர வதிவிட உரிமையையும் பெற்றனர்.

பிரிட்டனில் அடைக்கலக் கோரிக்கை ஏற்கப்பட்டவர்கள் தொடர்ந்து அங்கிருக்க வேண்டிய அவசியமில்லை. அவர்களின் அடைக்கலக் கோரிக்கை ஏற்கப்பட்ட ஓர் ஆண்டு கழித்து அந்நாட்டு கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கலாம்.

சிறிலங்காவைச் சேர்ந்த பெரும்பாலானவர்கள் லண்டனில் உள்ள சிறிலங்காத் தூதரகம் ஊடாகப் புதிய கடவுச்சீட்டைப் பெற்றுக்கொண்டு, அவர்கள் தமது சொந்த இடங்களுக்குப் பயணம் செய்வதுடன், வேறு நாடுகளுக்கும் சென்று வருகின்றனர்.

புதிய நடைமுறைகளின் படி இனிமேல் வெளிநாடுகளில் அடைக்கலம் கோரியவர்கள் சிறிலங்கா கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்க முடியாது. அவர்களுக்கு சிறிலங்கா கடவுச்சீட்டு விநியோகிக்கக் கூடாது என்று அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், சிறிலங்காத் தூதரகம், அவர்கள் சிறிலங்காவுக்குத் திரும்புவதற்கு தற்காலிக பயண ஆவணத்தை வழங்கும்.

போர் முடிந்துள்ள நிலையில், சிறிலங்காவில் இருந்து எவரும் வெளிநாடுகளில் அடைக்கலம் கோர வேண்டிய அவசியம் கிடையாது.

போர் உச்சமடைந்திருந்த போது கூட அடைக்கலம் தேடி வெளிநாடுகளுக்குச் சென்றவர்களில் பெரும்பாலானவர்கள் அகதிகள் அல்லர். அவர்கள் பொருளாதாரக் குடியேற்றவாசிகளே என்று சிறிலங்கா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

புலம்பெயர் தமிழர்களுக்கு நெருக்கடிகளைக் கொடுக்கும் வகையிலேயே சிறிலங்கா அரசாங்கம் இந்த முடிவை எடுத்துள்ளது.

சிறிலங்கா அரசின் இந்த முடிவினால் வெளிநாடுகளில் அடைக்கலம் கோரியுள்ள அந்த நாடுகளின் நிரந்தர வதிவிட உரிமையைப் பெறாதுள்ள புலம்பெயர் தமிழர்கள் பெரும் பாதிப்புகளைச் சந்திக்கவுள்ளனர்.

அத்துடன், தமிழ்நாட்டில் அகதிகளாக உள்ள தமிழர்களும் அங்கிருந்து வெளிநாடுகளுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (புதினப்பலகை)

# ஊர் மக்களின் கடும் எதிர்ப்பை அடுத்து காவலரண் அமைக்கும் முயற்சி தோல்வி

## மன்னார் பள்ளிமுனையில் சம்பவம்

மன்னார், பள்ளிமுனைக் கிராமத்தில் அமைக்கப்பட விருந்த காவலரண் ஒன்று ஊர் மக்களின் பலத்த எதிர்ப்பையடுத்து குறித்த நடவடிக்கையை இராணுவத்தினர் கைவிட்டு அவ்விடத்திலிருந்து சென்றுவிட்டனர்.

மன்னார் பள்ளிமுனைக்கிராமத்தில் அமைந்துள்ள நீர்த்தாங்கிக்கு அருகில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கூடிய இராணுவத்தினர் அந்த இடத்தில் காவலரணை அமைக்கத் தயாரானார்கள்.



இதனை அவதானித்த ஊர் மக்கள் தேவாலயத்தில் மணி எழுப்பிய பின், ஊர் மக்கள் அந்த இடத்தில் ஒன்று திரண்டு காவலரண் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இராணுவச் சிப்பாய்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து இராணுவ அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு வந்தனர். ஊர் மக்கள் இராணுவ அதிகாரிகளுடன் மேற்படி இடத்தில் காவலரண் அமைக்க வேண்டாம் என்று பிடிவாதமாக இருந்தனர்.

நீண்ட நேர வாக்குவாதத்தின் பின் குறித்த இடத்தில் காவலரண் அமைக்கப்படமாட்டாது என இராணுவ அதிகாரி ஒருவர் உறுதியளித்தார்.

காலவலரண் அமைப் பதற்குக் கொண்டு வந்த பொருள்களையும் இராணுவத்தினர் எடுத்துச் சென்றனர். (ஒ-323) (தமிழ்சிஎன்என்)

# இலங்கைக் கடல் எல்லைக்கு வருவதற்கு தமிழக மீனவருக்கு விசா தேவையில்லை

- இலங்கை அரசு

அண்மையில் பல நூறு இந்திய மீனவர்கள் இலங்கையின் வடபகுதி கடற்கரை ஓரமாக நின்று மீன்பிடித்தபோது கைது செய்யபட்டு யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர்.

அதே நேரம், இந்திய மீனவரின் உடலை அடையாளம் காட்டுவதற்கு நேற்றுமுன்தினம் குறித்த மீனவரின் குடும்பஸ்தர்கள் கடல் ஊடாக விசா இல்லாமல் யாழ். குடாநாட்டுக்கு வந்து திரும்பினர்.

இது இலங்கையில் குடிவரவு சட்டத்தை மீறும் செயல் என ஊடகங்கள் பிரசாரம் செய்த போது, தமிழக மீனவர்கள் அவசரமான சந்தர்ப்பங்களில் கடல் வளியூடாக யாழ்ப்பாணத்துக்கு விசா இல்லாமல் வந்துபோவதற்குரிய உடன்பாடு இரு நாடுகளுக்கும் இருப்பதாக இலங்கை அரசு நேற்று பகிரங்கமாக அறிவித்துள்ளது.

இதன்படி, இந்தியத் தமிழர்கள் ஈழத்தின் கரையோரமாக வந்து செல்வதை எவரும் தடுக்க முடியாது எனத் தெரியவருகிறது. (ஒ-323)(தமிழ். சி.என்.என்.)

# இலங்கையின் பொருளாதார வளர்ச்சி நற்சான்று வழங்குகிறது ஆசிய வங்கி

## கடந்த ஆண்டிலும் சிறப்பான முன்னேற்றம்

கொழும்பு, ஏப்.11

இந்த ஆண்டு மற்றும் அடுத்த ஆண்டில் எட்டு வீதமான பொருளாதார வளர்ச்சி வேகத்தை ஈட்டிக்கொள்ளும் ஆற்றல் இலங்கைக்கு அமையக் கூடுமென ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவிக்கிறது.

கடந்த ஆண்டில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வேகம் சிறப்பான நிலைப்பாட்டைக் கொண்டிருந்ததாகவும் அதற்கமைய உச்சப் பொருளாதார வளர்ச்சி வேகமொன்றை எதிர்வரும் இரண்டாண்டு காலத்துக்குள் எதிர்பார்க்க இயலுமெனவும் அந்த வங்கி தெரிவித்துள்ளது.

அத்தோடு, விவசாய, வர்த்தக, உல்லாசப் பயண மற்றும் உற்பத்தி ஆகிய துறைகளில் எதிர்காலத்தில் வேகவளர்ச்சியொன்றைக் காண இயலும் என்றும் அது நம்பிக்கை தெரிவிக்கிறது.

ஜீ.எஸ்.பீ. பிளஸ் சலுகை போன்ற வரிச்சலுகைகளை இழந்துள்ள நிலைப்பாடொன்றினுள் கூட, உச்சப்பொருளாதார வளர்ச்சி வேகமொன்றைத் தக்க வைத்துக்கொள்ள முடிந்துள்ளமை மூலம் இலங்கைப் பொருளாதாரத்தின் பலமான நிலை தென்படுகின்றது எனவும் ஆசிய அபிவிருத்தி வங்கி மேலும் தெரிவித்துள்ளது.

(ஒ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பிரச்சினையை இலங்கை அரசியல்வாதிகளும் கால்பந்தாகப் பயன்படுத்தினர் என்பது மகா உண்மை

கொழும்பு, ஏப். 11

இந்திய மற்றும் தமிழக அரசியல்வாதிகள் தமது அரசியல் தேவைகளுக்காக இலங்கையை கால்பந்தாக பயன்படுத்தினார்கள் என்பதில் ஓரளவு உண்மை இருக்கத்தான் செய்கின்றது.

ஆனால், இலங்கை சுதந்திரம் பெற்ற காலந்தொட்டு மாறிமாறி இலங்கையை ஆண்டு வந்த அரசுகளும், பெரும்பான்மை அரசியல்வாதிகளும் தமிழர் பிரச்சினையைத் தமது அரசியல் தேவைகளுக்காக கால்பந்தாகப் பயன்படுத்தினார்கள் என்பது மகா உண்மையாகும்.

- இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இந்திய அரசியல்வாதிகள் இலங்கையை கால்பந்தாகப் பயன்படுத்துகின்றார்கள் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ள குற்றச்சாட்டு தொடர்பில் கருத்துத் தெரிவித்த மனோ கணேசன் மேலும் கூறியவை வருமாறு:-

1984 முதல் 1989 வரையிலான காலப்பகுதியில் இந்திய அரசியல் தலைமைத்துவம் இலங்கையை கால்பந்தாகப் பயன்படுத்தியது என அமைச்சர் சம்பிக்க ரணவக்க குற்றம் சாட்டுகின்றார்.

இந்திய அரசு இலங்கைக்குள்ளே வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய மலையகத் தமிழர்களையும், பிற்காலத்தில் வடக்கு, கிழக்கின் ஈழத்தமிழர்களையும் தனது அரசியல் தேவைகளுக்காக கால்பந்தாகப்பயன்படுத்தியதுஎன்பது உண்மைதான்.

இந்த கால்பந்து விளையாட்டுக்கு இலங்கையின் தமிழ் அரசியல்வாதிகளும் துணைபோனார்கள் என்பதும் உண்மைதான். இத்தகைய சூழ்நிலை ஏற்படுவதற்கான அடிப்படையை ஏற்படுத்தியது, இலங்கையின் சிங்கள பெரும்பான்மை அரசியல்வாதிகள்தான் என்பதை அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிந்து கொள்ள வேண்டும். இது இலங்கை தொடர்பாக நடுநிலைமையாகச் சிந்திக்கும் அனைவருக்கும் புரியும்.

சுதந்திரம் பெற்ற உடனேயே முதற்காரியமாக ஐக்கிய தேசியக் கட்சி அரசு மலையகத் தமிழர்களின் குடியுரிமையையும், வாக்குரிமையையும் பறித்தது. பின்னர் பண்டாரநாயக்கவின் அரசு சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வந்தது.

இவற்றில் இருந்துதான் அனைத்து பிரச்சினைகளும் ஆரம்பித்தன. இனப்பிரச்சினைக்கு ஒரு பெரும்பான்மை கட்சி தீர்வு கொண்டுவரும் பொழுது, அடுத்த கட்சி அதை எதிர்த்து ஊர்வலம் நடத்தியது; நாடாளுமன்றத்தில் தீர்வுப் பொதியை எரித்தது; யாழ்.நூலகம் உட்பட தமிழர் சொத்துக்களை எரித்து காடைத்தனம் செய்தது.

இத்தகைய இனவாத வரலாறுதான் இந்நாட்டிலே சிங்களப் பேரினவாத கட்சிகள் நடத்திய அரசியல் கால்பந்தாட்டமாகும். இதிலே உலகக் கிண்ணத்தை இரண்டு பிரதான கட்சிகளுமே மாறிமாறி வாங்கியுள்ளன. இந்தப் பரம்பரையில்தான் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவும் வந்துள்ளார். இந்த நிலைமையைத்தான் இந்திய மத்திய அரசினதும், தமிழகத்தினதும் அரசியல்வாதிகள் தங்களது அரசியல் தேவைகளுக்காகப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

எனவே அவர்களுக்கு இத்தகைய சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்துவிட்டு, இன்று ஒப்பாரி வைப்பதில் பிரயோசனம் இல்லை. அதுமாத்திரம் அல்லாமல் தங்களைத் திருத்திக்கொள்ளாமல் அதே அரசியல் விளையாட்டை அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் கட்சியும், அரசும் கொண்டு நடத்துகின்றன.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு காண்பதற்கு அனைத்து தமிழ், முஸ்லிம் கட்சிகளும் தயாராக இருக்கின்றன. எனவே முழு இலங்கையும் சிங்களவர்களுக்கு மாத்திரமே சொந்தமானது எனக் கருதி செயற்படும் கொள்கையை சம்பிக்க ரணவக்கவின் கட்சியும், இதுபோன்ற பெரும்பான்மைக் கட்சிகளும் கைவிட வேண்டும். இல்லாவிட்டால், இந்தியா மட்டுமல்லாமல், இன்னும் பல்வேறு நாடுகள் இலங்கையைக் கால்பந்தாகப் பயன்படுத்தும் காலம் வெகு வேகமாக வரும் - என்றார். (ஒ-சி)

# தொலைபேசி மூலம் பிறப்புச் சான்றிதழ்

கொழும்பு, ஏப்.11

தொலைபேசி மூலம் பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்களை வீட்டுக்கே வரவழைத்துக் கொள்ளும் புதிய திட்டம் ஒன்றைத் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு அறிமுகப்படுத்தவுள்ளது. அரச தகவல் நிலையம் மற்றும் சம்பந்தப்பட்ட மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு கையடக்கத் தொலைபேசி மூலம் பிறப்பு, இறப்பு, விவாகம் தொடர்பான தகவல்களை வழங்குவதன் மூலம் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ரஞ்சித்சியம்பலாபிட்டிய தெரிவித்தார். (ஒ-சி)

# புதுக்குடியிருப்பு உ.அ.அதிபர் காலமானார்

கொழும்பு, ஏப். 11

புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் என்.கோணேஸ்வரன் (வயது 38) மாரடைப்புக் காரணமாக நேற்று கொழும்பு தனியார் வைத்தியசாலையில் காலமானார். சுகவீனமுற்றிருந்த இவர், கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்தார். சிகிச்சை பயனளிக்காத நிலையில் அங்கு அவர் மரணமானார். 2009 ஆம் ஆண்டு வன்னி இடப்பெயர்வின்போது அவர் மக்களைப் பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கு முன்னின்று செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-ஐ)

# பேலியகொடை மீன்சந்தை கப்பம் விவகாரம்; மேர்வின் கோபமடையத் தேவையில்லை

## அமைச்சர் ராஜித அறிவுரை

கொழும்பு, ஏப் 11

பேலியகொடையில் புதிதாக அமைக்கப்பட்ட மீன்சந்தையில் கப்பம் கோரப்பட்ட விவகாரம் தொடர்பாக அமைச்சர் மேர்வின் சில்வா கோபமடைந்து, இந்த விவகாரத்தில்தான் சம்பந்தப்படவில்லை எனக் கூறத்தேவையில்லை. ஏனெனில் அவர் அதில் சம்பந்தப்பட்டதாக எவரும் கூறவில்லை என மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித்த சேனாரட்ண நேற்றுத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று காலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு-

பேலியகொடை மீன் சந்தை திறக்கப்பட்டு இரு நாள்களில் கப்பம் கோரும் நடவடிக்கைகள் ஆரம்பமாகின. அவர்கள் வியாபாரிகள், பாரம் தூக்குபவர்கள், உதவியாளர்கள் அனைவரிடமும் கப்பம் அறவிட்டார்கள். கழிவறையை பயன்படுத்துவதற்கும் கப்பம் கோரப்பட்டது.

இந்த நிலையில், அமைச்சர் மேர்வின் சில்வா பேலியகொடை மீன்சந்தையில் கப்பம் அறவிடும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றார் என பல்வேறு தரப்பினர்கள் குற்றம் சுமத்தினார்கள். அதற்கு அமைச்சர் மேர்வின் சில்வா வீணாகக் கோபமடையத் தேவையில்லை.

ஏனென்றால் அவ்வாறு கூறப்படும் குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் இல்லை. அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு அந்த விடயத்துடன் தொடர்பு இல்லை.

- இப்படி அவர் தெரிவித்தார். (ஒ-சி)

# சேரி வீடுகளை ஒழித்து விட்டு சகலருக்கும் சிறந்த வீடுகள்

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.11

சிறந்த சூழலைப் போல், சிறந்த சமூகத்தைக் கட்டி எழுப்பும் நோக்குடன் சேரி வீடுகளைச் சமூகத்திலிருந்து ஒழித்து சகலருக்கும் சிறந்த வீடுகளைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகளை அரசு ஆரம்பித்துள்ளது

- இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பின் சுற்றுச் சூழலை மக்களுக்கு ஏற்றவாறு மாற்றி அமைக்க பங்களிப்புச் செய்தவர்களைப் பாராட்டும் வைபவம் நேற்று அலரிமாளிகையில் நடைபெற்றது. அலரிமாளிகையில் இடம்பெற்ற வைபவத்தில் வருகை தந்தவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைய இந்த வைபவம் இடம்பெற்றது.

இந்த வைபவத்தின்போது ஜனாதிபதி தொடர்ந்து கூறியவை வருமாறு:-

கொழும்பு நகரம் இன்று புதுப்பொலிவு பெற்றுள்ளது. இதன் மூலம் மக்களின் சுகாதார நிலை மேம்பட்டுள்ளது. இதற்கு உழைத்த அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்களாவர்.

சேரிவாசிகள் எப்போதும் சேரியில் வாழக்கூடாது. அரசியல் தேவைகளுக்காக இல்லாமல் மக்களின் தேவைகளைக் கவனத்திற்கொண்டு மக்கள் வாழ சிறந்த சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும் பொறுப்பை அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது.

இலங்கை வரைபடத்தில் மேலும் 500 ஏக்கரை அதிகரிக்கும் வகையில் காலி முகத்திடல் கரையோரப் பிரதேசத்தை மண் கொண்டு நிரப்பும் பெரும் திட்டம் நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்படும். இந்தத் திட்டம் இரண்டு வருடங்களில் பூர்த்தியாகும் - என்றார். அபான்ஸ், பேர்ன்ஸ், கெயார் கிளீன் ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்த ஆயிரத்து 700 பேர் இந்த வைபவத்துக்கு வருகை தந்திருந்தனர். இவர்களுக்கான பகல் போசனமும் அலரிமாளிகையில் வழங்கப்பட்டது.

# பணவீக்கம் எகிறிச் செல்லும் நிலை: 'அபாய மணி' அடிக்கிறது மத்திய வங்கி

கொழும்பு, ஏப்.11

மசகு எண்ணெய் போன்ற சர்வதேச சந்தையில் முக்கியத்துவம் பெறும் பொருள்களின் விலை உயர்வை உள்நாட்டுப் பாவனையாளர்கள் மீது சுமத்தி விடுவதால் பணவீக்கம் ஒரேயடியாக எகிறிச் செல்லக்கூடுமென இலங்கை மத்திய வங்கி தெரிவிக்கிறது.

இன்றைய அளவில், வருடாந்த, சாதாரண பணவீக்க அதிகரிப்பொன்று மதிப்பிடப்பட்டுள்ளதோடு, முக்கியமாக பண்டிகைக் காலத்தில் நிலவும் அதிகரித்த கோரிக்கை காரணமாக 2011 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்திலும் கூட பணவீக்கம் தொடர்ச்சியாக நிலவுமெனவும் மத்திய வங்கி தெரிவிக்கிறது.

ஊகித்துக்கொள்ள இயலாத காலநிலை நிலைப்பாட்டின் காரணமாகத் தற்காலிக விலை அதிகரிப்பு மேலும் விரிவடையக் கூடுமென்பதோடு, அதுவும்கூட பண வீக்கத்துக்குத் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடுமென்றும் மத்திய வங்கி தெரிவிக்கிறது.

வருடாந்த சாதாரண பணவீக்கத்துக்கான இறக்குமதிப் பொருள்களின் பங்களிப்பானது பெப்ரவரி மாதத்தில் நிலவிய 20 வீதத்திலிருந்து டிசெம்பர் மாதத்தில் 24 வீதம் வரையில் அதிகரித்துச் செல்லக் கூடுமெனவும் மத்திய வங்கி மேலும் தெரிவிக்கிறது. (ஒ-22)

# மீன்பிடித்த ரஷ்ய தம்பதிக்கு அபராதம்

திருகோணமலை நிலாவெளிப் பகுதியில் சட்டவிரோதமாக அலங்கார மீன்களைப் பிடித்த ரஷ்ய தம்பதியினருக்கு திருகோணமலை பிரதான நீதிவான் யூ.எல்.ஏ. அஸார் ஒரு லட்சம் ரூபா அபராதம் விதித்தார். இம்மீன்களைப் பிடிப்பதற்கு உதவிய படகோட்டிக்கு 25,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. ஏப்ரல் 28 ஆம் திகதிக்கு முன்பாக அபராதத் தொகையைச் செலுத்துமாறு உத்தரவிட்ட நீதிவான், மேற்படி தம்பதிகளின் கடவுச்சீட்டுக்களை பறிமுதல் செய்யுமாறும் உத்தரவிட்டார். (ஒ-சி)

**தேவை**

அலுவலக வேலை காரணமாக வெளியிடங்களுக்கு சென்று வரக்கூடியவர் தேவை.
(40 வயதிற்கு மேற்பட்டவர்)
தொ.பே.இல - 0711993444

**சுன்னாகம் அபான்ஸ்சில் வெளிக்கள அலுவலருக்கான பதவி வெற்றிடம்**

சுன்னாகம் அபான்ஸ் நிறுவனத்தில் வெளிக்கள அலுவலருக்கான பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்குத் தகுதியான இளைஞர் யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**தகைமை**
* 18 வயதுக்கு மேற்பட்டோர்.
* G.C.E O/L பரீட்சை சித்தி
* மோட்டார் சைக்கிள் செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரம் இருத்தல்

**நேர்முகத் தேர்வு**
காலம் - 16.04.2011 சனிக்கிழமை
நேரம் - மு.ப. 10 மணிக்கு
இடம் - அபான்ஸ் காரியாலயம்,
160A, K.K.S. வீதி, சுன்னாகம்.

**College of Accounting**
கண்டி வீதி, சாவகச்சேரி. (கொமர்ஷல் வங்கி முன்பாக)
**O/L Day Class**
அமைதியான சூழலில் தினமும் காலை 8.00 - 1.00 p.m வரை வகுப்புகள் நடைபெறும்.

**House Available For Rent**
A Spacions House at Chavakachcheri Town 50 Meters from A-9 Road Most Suited for NGOS Business Establishments.
Contact :- 0778057308, 0772791384

**சிங்களம்**
எழுத, வாசிப்பதற்கான பயிற்சிகள்.
ஆரம்பம் - 11.04.2011 திங்கள் 5 pm
**யூனிவேர்சல்**
(யா/இந்து மகளிர் கல்லூரி அருகில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.04.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.